# சித்தார்த்தன்

கௌதம புத்தரது அருமை பெருமை வாய்ந்த

வரலாறு

அ. மாதவையர்

இயற்றியது

புத்தசரிதை

என்னும் செய்யுள் அநுபந்தத்துடன்

முதற்பதிப்பு

சென்னை

மித்திரன் ஆபீஸ்

1918 [விலை 0—12—0

Q4
N18
180104

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல் என்னாவிற்கு
அடங்காது"

மணிமேகலை.

# உள்ளுறை.

முன்னுரை ... ... vi

சித்தார்த்தன் :— ... ...

1. ஒரு கனவு ... ... 1
2. கனவின் விளைவு ... ... 9
3. மாங்கனி ... ... 17
4. அன்பின் பெருமை ... ... 24
5. பிறப்பும் இறப்பும் ... ... 31
6. முளைப்பயிர் ... ... 38
7. காதற்சிறை ... ... 48
8. மூப்பினை அறிதல் ... ... 59
9. பிணி சாக்காடுகளை அறிதல் ... 67
10. பெருந்துறவு ... ... 77
11. உண்மையைத் தேடுதல் ... 93
12. உண்மையைத் தெளிதல் ... 106

பின்னுரை ... ... 115

அருஞ்சொல் உரை ... ... 126

புத்த சரிதை (செய்யுள் அநுபந்தம்) ...129-168

# முன்னுரை.

நமது தாய்நாட்டின் வடதலை வரம்பாகும் பனி வரைச் சாரலின்கண் இருபத்தைந்து நூற்றாண்டுகளு க்கு முன்னர் நிகழ்ந்தனவாகப் பழைய வரலாறுகளில் காணும் செய்திகளை அடிப்படையாக்கி, நாவல் முறை யில் விரித்தெழுதியது இந்நூல். திருமாலின் தோற்றங் களில் ஒன்றாகவைத்துப் பின்னவரால் எண்ணப்பட்டவ ரெனினும், கௌதமபுத்தர் உண்மையாக உயிர்வாழ்ந் தவரென்பதை இதுகாறும் எவருமே ஐயுற்றதில்லை. அவர் ஓதிய அறநெறி இந்தியா வெங்கும் பண்டை நாட்களில் தழைத் தோங்கியதும் மெய்யே. அதி லுள்ள நல்ல கோட்பாடுகள் அனைத்தும் ஹிந்துமதத் துடன் வேற்றுமையின்றிக் கலந்த பின்னரே இந்நாட் டில் அது தனிச்சமயமாய் வழங்காதொழிந்த தென் பது பலர் துணிவு. இதனைத் துலக்கவேனும், பௌத்த சமயக்கொள்கைகளை விளக்கவேனும் இந்நூலை யான் எழுதிலேன். பிறப்பையும், பழக்க வழக்கங்களையும் சார்ந்த வேற்றுமைகளால் நாடெங்கும் குழப்பமுற; அழுக்காறு, அவா, அறியாமை, பகைமை முதலியன கதித்தோங்கி அனைவரையும் அச்ச முறுத்தாநிற்க; இருண்டு குவிந்த கருமுகில்திரளைக் கிழிக்கொண்டு, அதன் விளிம்பிலும் இடைகளிலும் விட்டுவிட்டு அவிர் தரும் மின்னொளியைப்போல, இக்குழப்பத்தின் இடை யிடையே பிறர்நலநாட்டமும், ஒற்றுமையுணர்ச்சியும்,

நாட்டுப்பற்றும், மேலான பிறவெண்ணங்களும் ஆங் காங்குத் தலைநீட்ட முயலும் இந்தநாளிலே, அறவாழி யந்தணனுன சித்தார்த்தனது அருமைபெருமை வாய் ந்த வரலாறு நம்மவர்க்கெல்லாம் நன்மை விளைக்கலாகும் என்று கருதியே இதை எழுதலானேன். இங்ஙனம் எழு துகையில், வடமொழிச்சொற்களை கலவாத நூலொன் றும் தமிழில் இதுகாறும் யானறிந்தவரை இல்லாமை யையும், அத்தகைய நூல் தமிழ்மாணவருக்குப் பேரு தவியாகும் என்பதையும் நினைந்து, கூடியவரை, இந் நூலைத் தனித்தமிழில் இயற்றியிருக்கிறேன். இதனுல், சில சொற்றொடர்கள் காதுக்கு இனிமையில்லாதன போல முதலில் ஒலிக்கலாம்; புதுமையினுல் தோற்றும் இவ்வோசைக்குறை நாளடைவில் நீங்கிவிடுமென்று நம்புகிறேன். நூலினை எழுதும் பொழுதும் அச்சுப் பிழைகளைத் திருத்தும் பொழுதும் மிக்க விழிப்புடனி ருந்தும், சிற்சில வடமொழிச் சொற்கள் தங்கி நிற்பது, எனக்கே வியப்பை விளைக்கின்றது; அடுத்த பதிப்பில் அவற்றை அறவே அகற்ற முயலுவேன்.

இந்நூலை எழுதுவதில், புலவர் பெருமானுகிய மகாமகோபாத்யாய பண்டிதர் உ. வே. சாமிநாதையர் இயற்றியுள்ள புத்த சரித்திரமும், ஆங்கிலத்தில் ஸர் எட்வின் ஆர்நால்டு என்பவர் இயற்றியுள்ள ஆசியசோதி என்னும் அருமைநூலும் எனக்குப் பேருதவிகளாயின. பிற்கூறிய தொடர்நிலைச் செய்யுளில் எனக்குள்ள அளப்பரிய பற்றினுல், அதனைத் தமிழ்ப்பாக்களில் ஒரோ வழி மொழிபெயர்த்தமைக்கும் அவாவுற்று, சில்லாண்டு களுக்குமுன் பாடத்தொடங்கியது, நடுவில் தடைப் பட்டு, முடிவு பெறவில்லை. ஒழிவுநேரமும் உடல்வலி

யும் குன்றிக்கொண்டுவரும் இந்நாளிலே, இனி யான் அதைப் பாடிமுடிப்பேன் என்னும் நம்பிக்கையற்று, பாடியுள்ள பாக்களைமட்டும் இத்துடன் சேர்த்து வெளியிட்டிருக்கிறேன். இந்த நாவலின் பிற்பகுதி, பெரும்பான்மையும், "ஆசியசோதி"யைத் தழுவி எழுதப்பட்டுள்ளது; 'புத்த சரித்திர'த்திலிருந்தும் சிற்சில சொற்றொடர்களை அமைத்துக் கொண்டிருக்கிறேன்.

மேற்கூறிய புலவர்பெருமானை யான் நன்று அறியேன்; எனினும், அவர், தமது கூரிய மதியையும், ஒப்புயர்வற்ற கல்வி கேள்விகளையும், அரிய பெரிய ஆராய்ச்சித்திறனையும், தமிழ்மொழி வளர்ப்பிலும் பழைய தமிழ் நூல்களை வெளியிடுவதிலும் தம் வாழ்நாளெல்லாம் செலவிட்டுவருவதைக் கண்டு, யான் அடைந்துள்ள வியப்புக்கும் பெருமதிப்புக்கும் ஒரு சிறு அடையாளமாக, இந்நூலினை அவர்க்கு உரிமையாக்க விரும்புகிறேன்.

பூகாமைபெற் றுலகில்வளர் மொழிகளின் முதல்வரிசை
    மும்மைசால் தமிழுமேற்கத்
தகாமொழி யெனுமுரை தவிரமுச் சங்கநூல்
    பங்கமடை யாது தருவோய்!
சிகாமணி தமிழ்ப்புலவர் கட்கெனுஞ் சீரியோய்!
    சிவனடி தரிக்கு முடியோய்!
மகாமகோ பாத்யாய சாமிநாதைய! இதை
    மனமகிழ்ந் தேற்றருள்கவே.

அ. மாதவையர்.

# சித்தார்த்தன்.

## 1. ஒரு கனவு.

7-APR 1919

நடுக்கங்குல்: மண்ணில் வாழும் மாந்தர் விண்ணினை ஏறி அடைதற்கு அமைந்த வெள்ளிப்படிக்கட்டைப்போல, பனிவரைத் தொடர், வெள்ளை வெளேலென வானையும் நிலத்தையும் இயைத்து விளங்குகின்றது. மலையின் அடிவாரத்தை அடுத்துள்ள காடு சோலை கழனி வழிகள் கூடி, அங்ஙனம் மேற்செல்வார் எவரேனும் அடிவழுக்கிக் கீழே விழுந்துவிட்டால் ஊறு படாத வண்ணம், மெத்தென விரித்த பச்சைச் சிம்புளி என்னக் காண்கின்றன. கண்ணகல் கங்கையாற்றின் பெண்ணெனத்தகும் கிளையாறும் உரோகிணி ஓடி அலுத்து உறங்குவதை ஒப்ப, சில்லெனும் புனல்மல்கி மெல்லெனச் செல்கின்றது. அதன் கரைமீதுள்ள கபில வாஸ்து என்னும் பேரூர், ஐம்புலன் ஒடுக்கி நோற்பவர் போல, அமைதியோடு, ஓசையின்றி அடங்கிக் காண்கின்றது; மணவிழா அயரும் சில வீடுகளில் பல்லியங்கள் முழங்கப் பாட்டும் கூத்தும் நிகழும் ஒலியுங்கூட, விடாது பெய்யும் பனியினால் வாய்ப்பூட்டிட்டாற்போல மென்மையுற்று, நாற்புறமும் நெடிதுபரக்கவில்லை. அந்த இடம் பெரிய காவற் பேரூரின் 'ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெரு'க்களையும்,

அழகிய மாட மாளிகைகள் பொழில் பொய்கைகள் மன்றங்களையும், பிற ஆடவர் வெளிவரா அற்றம் நோக்கித் தன் மனைவிமாருக்குத் தனித்துக் காட்டு வான போன்று, தண்கதிரோன், விண் மீன்கள் புடை சூழ, மாசு மறுவற்ற வானத்தின்கண் மகிழ்ந்துலாவி ஒளிர்கின்றனன்.

இவ்வாறு ஊரார் அனைவரும் கங்குலுக்குரிய இன் துயிலில் அமர்ந்திருக்கும் எல்லையில், அந்நாட்டு மன்னன் சுத்தோதனனும் அவன் காதற்குரிய கோப் பெண்டு மாயாதேவியும மட்டும் உறக்கத்தைத் துற ந்து கவலையுற்றிருப்பது வியப்பே. உரோகிணியாற் றின் கரைமீதுள்ள அரண்மனையிலும், மெதுவாய் அடி பெயர்த்துலாவும் காவலாளிகளின்செவிகளை, நடுக்கங்கு லிற் சாற்றிய பறையின் ஒலியின்றி மற்றெவ்வொலியும் கிட்டவில்லை. ஆயினும், அரண்மனையின் மூன்றாவது மேல் மாடத்துள்ள பள்ளியறையில், பாக்கட்டையி னின்றும் வெள்ளிச் சங்கிலிகையில் தொங்கி, நறு நெய் வார்க்கப் பெற்ற பொன் விளக்கொன்று ஐந்து சுவர்க ளாக எரிந்து கொண்டிருக்கின்றது; கீழே காசுமீரத்துச் சிம்புளி விரித்திருக்கின்றது; சாழ் கொண்டு கமழும் ஆரத்தினாலும யானைக் கொம்பினாலும் செய் துள்ள ஏந்து மணையின்மேல், ஐவகை விரைப்பொருள் களும் அறுசுவைச் சிற்றுண்டிகளும் பாகு பால் தேன் முதலியனவும் வைத்திருக்கின்றன. பட்டுறையிட்ட மென் தூவி அடுக்குமெத்தை திண்டு தலையணைகள் பரப்பி, மேற்கட்டி திரைகளால் அழகாய் விளங்கும் இடம்பெரிய கட்டிலின்மீது, இறைவி, இடப்புறமாய் ஒருக்கணித்துப் படுத்திருக்கிறாள். – அவளுடன் பேசிக்

கொண்டு, வேந்தன், அருகே உலாவுகிறான். அவர் இருவரும் இளமை கழிந்தவரே. இப்பொழுது மாயாதேவிக்கு நாற்பத்தைந்தாவது ஆண்டு; சுத்தோதனன், அவளுக்குப் பன்னிரண்டு மூத்தவன்; ஆயினும், இருவரும், பிள்ளையில்லா ஒரே கவலையன்றி மறு கவலை துன்பு யாதும் உணராது, ஆளும் நிலைமையில் வாழ்ந்து வருபவர் ஆதலின், நரை திரையின்றி, நடுவாழ்க்கையினர் போலவே தோற்றுகின்றனர். கோப்பெண்டு, மதிமுக மெல்லியற் கட்டழகி; கோமானோ, ஏற்றமான தோற்றமும், ஆண்மை அவிர்தரும் முகமும், முழந்தாள் தடவும் கைகளும், சிலம்பம் வேட்டை முதலிய பயிற்சிகளால முழுவலி பெற்றுள்ள யாக்கையும் பொருந்திய ஆடவர் ஏறு போல்வான். அவர் பேச்சுக்குச் சிறிது செவி கொடுப்போமாக:—

மாய :— தாங்கள் சொல்வதெல்லாம் மெய்யாயிருப்பினும், அவள்என் தங்கை என்பதற்காக வேனும், என் மீது இத்துணை அன்புள்ள தாங்கள், அவளுக்கும் இரங்குவதே தகுதி. கௌதமி இயற்கையில் கெட்டவளென்று நான் எண்ணவில்லை; ஆயினும்,—

சுத்:—மாயா! உன்மீது நான் அன்புடையவனாயிருத்தற்கும், அவளை வெறுத்தற்கும், இந்த உனது ஒரு பேச்சே போதாதோ? என் கடமை என்றெண்ணியும், உன் அலட்டுதலின் பொருட்டும், நான் சில நாட்களில் அவள் பள்ளியறைக்குச் செல்லும் பொழுது, அவள் ஓயாது குறை கூறி அழுது உன்னைப் பழித்துத் தூற்றுவதையும், நீ அவளுக்காகப் பரிந்து பேசுவதையும் நினைத்தால், நீங்கள் இருவரும் ஒரே தந்தைக்குப்

பிறந்திருப்பது புதுமையாகவே தோற்றுகின்றது. மக்கள் வாழ்க்கையிலே ஆடவன் இளையாளை விரும்பி மூத்தாளை அசட்டை செய்தல் இயல்பாயிருக்க, என் முன்னோர்களில் நன்னெறியும்வாய்மையும் தவறுதவரென்று இசையுற்றிலங்கிய தசரதருமே அங்ஙனம் செய்திருக்க, நான் மட்டும் இவ்வாறு மாறி நடப்பது எனது ஒழுக்க மேன்மையால் என்றோ நீ எண்ணுகிறாய்?

மாயா:—அன்பரே! தங்களுடன் வழக்காடும் வன்மையுமில்லை, விருப்பமு மில்லை எனக்கு. தங்கள் நன்மதிப்பை அவளும் பெற்றால், என் மீதுள்ள அவள் உள்ளக்கசப்பு அப்பொழுதேனும் தீராதா என்றே நான் நாடுகிறேன். என் தந்தையாரின் கடைசிப் பெண்ணாகப் பிறந்து, குழந்தையா யிருக்கையில் அன்னையை இழந்து, அவரால் அருமையாக வளர்க்கப்பட்டவள் அவள்; அதனால் ஏற்பட்ட வீண்முரணும் நறுமொறுப்புமே இவை.

சுத்:—எதனால் ஆனால் என்ன? வருந்துபவன் நானே.

மாயா:—அன்பரே! அப்படிக் கசந்து பேசாதேயுங்கள், தங்களுடைய அளப்பருங் காதலையே என் பிறவிப் பெரும்பேறாக நான் கருதியிருக்கிறேன்; தங்கள் அன்பினால் நமது குடிகளும் ஊழியர்களும்என்மீது பற்றுடையவராய் இருக்கின்றனர்; ஆகவே,என்னுடன் பிறந்தவள், தொட்டில் தொட்டு நான் கூடி விளையாடிப் பழகிய என் ஒரே தங்கை கௌதமி மட்டும், என்மீது பகைமை பாராட்டுவதை என்னால் பொறுக்க முடியவில்லை,

சுத் :—அதற்கு நாமென்ன செய்யலாம்? 'குணம் கொன்றால் போம்; நிறம் சுட்டால் போம்' என்பர். அவள் இயல்பே அது. நாயின் தோகையினை நிமிர்த்தலாகுமோ ?

மாயா :—மற்றும் ஓர் அவாவும் என் உள்ளத்தில் தழைக்கின்றது; இன்றே அதை நான் தங்களிடம் வெளியிடுகிறேன் : தங்கள் தம்பிகள் நால்வர் இருப்பினும், தங்களுக்குப்பின் நாட்டை ஆண்டு நம்மைக் கடைத்தேறச் செய்ய ஒரு மகன் இல்லாத ஆரும் பெருங்குறையை அவளாலேனும் நிரப்பிக்கொள்ளலாம் என்னும் எண்ணம், சில நாளாய் என் உள்ளத்தில் தோன்றியிருக்கின்றது. "எழு பிறப்பும் தீயவை தீண்டா, பழி பிறங்காப் பண்புடை மக்கட் பெறின்" என்பர் பெரியோர். எனக்கோ, நாற்பத்தைந்து நடக்கிறது ; இனி என் வயிற்றில் குழந்தை பிறக்குமென்று நான் நம்பவில்லை.

சுத் :—கடவுள் திருவருள் எவ்வாறிருக்குமோ, யார் அறிவார் ?

மாயா :—அது மெய்யே ; அவர் திருவிளையாடலுக்கு வரம்பேது ? ஆயினும், இனி நான் சூற்கொள்வது அரிதே. கௌதமிக்கோ, இன்னும் நாற்பதுகூட ஆகவில்லை; அவள் வயிற்றிலேனும் நமது குறையைத் தீர்க்க ஒரு மகன் பிறக்கமாட்டானா என்று என் உள்ளம் ஏங்குகின்றது. அவள் வேறு நான் வேறு என்று என் மட்டில் நான் நினைக்கவில்லை. இதன் பொருட்டேனும் அவளை வெறுக்காது, அவள்மீது அன்பு வைக்கும்படி நான் தங்களை வேண்டிக்கொள்கிறேன்;

அது தங்கள் கடமையே என்று தாங்களும் பலமுறை ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள்.

சுத்:—மாயா! நீ அல்லவோ பெண்! அவளுடைய அழுக்காறெங்கே, உன் பெருந்தன்மையெங்கே! இப்படிப்பட்ட தலைமகளின் காதலின் வாய்ப்பட்டு நான் இருப்பது, என் கோவியல் ஆண்மைக்குச் சிறிதுமே இழுக்காகாது; ஏனெனின், இத்துணைத் தூய்மைவாய்ந்த ஒரு கற்பணங்கின்காதலினும் மேலான பிறவிப்பேறு யாதுதான் இருக்கின்றது?

சுத்தோதனன் இவ்வாறு உளமகிழ்ந்து கூறி, கட்டிலின் அருகில் நின்று, தன் மனைவியை அன்புடன் தடவிக் கொடுத்தான். அப்பொழுது, மாயாதேவி, "ஆயின், அன்பரே! என் வேண்டுகோளுக்கு இரங்குவீர்களே" என்றாள்.

சுத்:—மாயா! உன் தங்கையுடன் ஒப்பிட்டன்றோ உன்னை மெச்சினது? நான் ஒன்றும் வாய்நேர்ந்தேனில்லையே. தவிர, அவள் வயிற்றில்பிறக்கும் பிள்ளை, அம்மம்ம, எப்படி இருக்குமோ! அதைவிட, பிள்ளை இல்லாதிருப்பதே நன்று. நற்பிள்ளை வேண்டுமேயன்றி எப்பிள்ளையும் வேண்டாம.

மாயா:—தங்களுக்குப் பிறக்கும் மகன் ஒருபொழுதும் அப்படியிருக்கமாட்டான்.

சுத்:—அதைப்பற்றிப் பின்பு பேசலாம். நெடுநேரமாயிற்று; பாரியும் கொட்டியாய்விட்டது. நீ தூங்கு.

மாயா:—தங்களுக்கு நேரமாகவில்லையோ? தாங்களும் படுத்துக்கொள்ளலாமே.

அவ்வாறே இருவரும் படுத்துத் துயில்வாராயினர். மூன்றுமுறையும் கங்குற் பறை முழங்கியது. அப்பால் புன்னகை பொலியும் மலர்ந்தமுகத்துடன், இறைவி, திடீரென விழித்தெழுந்து, மிக்க ஆவலோடும் வியப்போடும் நாற்புறமும் மேலும் நோக்கலாயினள். பிறகு, அவள், நன்கு துயின்றுகொண்டிருந்த தனது மணவாளனை மெதுவாய்த் தொட்டசைத்து, "அன்பரே! அன்பரே! தூங்குகிறீர்களோ?" என்று சொல்லி எழுப்பினள். சுத்தோதனன், திடுக்கிட்டு விழித்துக்கொண்டு, "என்ன, என்ன செய்தி, என் கண்ணே! நீ இன்னும் உறங்கவில்லையோ?" என்று வினவினன்.

மாயா:—அப்படியில்லை, அன்பரே! நான் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தேன்; அதன் இடையில் ஒருகனவு கண்டேன்: கனவோ அது? நனவென்றே நினைத்தேன். இதோ பாருங்கள், இன்னும் என் கண்முன் அவர் நிற்பதுபோலவே இருக்கின்றது: பெரியவர் ஒருவர், துறவி, கிழவர்,—அவர் முகத்தில் திகழும் அருளையும் அமைதியையும் எவ்வாறு நான் கூறட்டும்!—என் முன் தோன்றி, "பெண்ணே! நீ வருந்துதல்ஒழி: உன் வயிற்றில் யாமே வந்து பிறந்து, நீயும் உன் கணவனும் படும் கவலையையும் வையகத்தாருடைய கலக்கத்தையும் ஒருங்கே தீர்த்திடுவோம்" என்றுரைத்து மறைந்தனர். அதை நான் எண்ணி வியந்துகொண்டிருக்கையில், கண்கவர் ஒளிதிகழ் விண்மீன் ஒன்று, பொன் உருக்கியதெனப் பொலியும் நிறத்தது, அறுபிளவுற்ற அழகு வாய்ந்தது, மின்னற் கொடிபோல் விண்ணின்றிழிந்து, வலப்புறமாக என் சூற்பையுள் பாய்ந்து, என் துயில் நீ

மறைந்தது; இப்பொழுது, என்பும் உருக, என் உடலெலாம் சிலிர்க்க, எனக்குள மகிழ்ச்சியை எங்ஙனம் உரைப்பேன்? இதோ பாருங்கள், அன்பரே! கள்ளுண்டவர் போல, நான் அறியாமலே பொங்குகின்றது மகிழ்வு. இது புதுமையே; என்ன நன்மையைக் குறிப்பதோ இது?

சுத்:—மாயா! நீ சொல்வதைக் கேட்கும் எனக்குமே உளமகிழ்ச்சி உண்டாகின்றது. இம்மட்டோ: அதோ பார், பொழுதளக்கும் கன்னலின்படி இன்னும் வைகறை யாகவில்லை எனினும், வெளியே புள்ளினங்கள் மகிழ்ந்து கூவும் ஒலி கேட்கின்றது; அந்தப் பலகணியின் ஊடே தெரியும் அம்புலி,—இன்று நாள் உத்திரட்டாதி போலும்,—எப்பொழுதும் போலின்றி, பொன் நிறமான புதியதோர் நிலவுடன் ஒளிர்கின்றது; இத்தருவாயில் இதழ்கள் மூடி யிருக்க வேண்டிய மலர்கள் மலர்ந்து, அவற்றின் நறு மணமும் உள்ளே தவழ்ந்து வந்து வீசுவது உனக்குத் தெரிகிறதா? இது மிகவும் புதுமையே! இஞ்ஞான்று வையமுழுவதும் நம்முடன் களிப்பது போலவே தோற்றுகின்றது. காலவர், கனா நூலைக் கரை கண்டவர்; நாளையே அவரை வினவி இக்கனவின் விளைவை அறிவோம்.

அப்பால் இருவரும் துயில் கொள்ளாமல், அவள் கண்ட கனவைப்பற்றியே குறைப் போதையும் பேசிக் கழித்தனர்.

## 2. கனவின் விளைவு.

மறுநாள் மாலை, அரண்மனையில் மகளிர் மாளிகைகளை அடுத்த பூந்தோட்டத்திலே, ஏகாக்ஷி என்னும் சிலதி மலர் கொய்துகொண்டிருந்தாள். பெயருக்குப் பொருந்த, அவளுடைய வலக்கண் குருடு; ஐம்பதாண்டினளேயெனினும், இளமை தொட்டுத் தலைவணங்கி உடல் வணங்கி ஊழியம் செய்து, அவள் வடிவமே குறுகி வளைந்திருந்தது; சிறுகி ஆழ்ந்து குன்றியைப் போல் மினுமினுக்கும் அவளுடைய ஊனமில்லாத இடக்கண்மட்டுமே, முழுக்கண்ணர் இருவர் பிறர் ஈரிரண்டு விழிகளினும் மிக்க படிறும் களவும் கொடுமையும் காட்டிற்று. இத்தகைய ஏகாக்ஷி, வெளிப்பார்வைக்கு மலர் பறித்துக்கொண்டும், உண்மையில், அடுத்துள்ள பூம்பந்தருக்குள் மறைவாய் நின்ற கௌதமியுடன் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டுமிருந்தாள்.

கௌதமி, மாயாதேவியின் தங்கை; சுத்தோதனனுடைய இளைய மனைவி; மிகக் குள்ளமானவள்; தடித்தவள்; முகவனப்பில்லாதவள்; இயற்கைக் குறையைச் செயற்கையால் நிரப்ப எண்ணினவள்போல, பெருங்கோப்பெண்டினும்மேலாக, பகட்டான ஆடைகளையும் விலை மதிப்பற்றநகைகளையும் அணிந்திருந்தாள் அவள், அழுக்காற்றினால் அடக்க ஒண்ணாத வண்ணம் உள்ளங்கொதித்துச்சினமிக்கு, கூட்டிலுள் வேங்கைபோல் அப்பூம்பந்தருக்குள் நிலைகொள்ளாது உலாவி, தன் சிலதியுடன் பரபரப்போடு பேசிக்கொண்டிருந்தாள்.

கௌதமி:—காலவர் கணநூலைக் கரைகண்டவராம்; அவருடைய உரை பொய்த்ததே இல்லையாம்; 'நல்லநாளிலே நாழிப்பால் கறவாத மாடு, கன்றும் செத்துக் கைவலமானது' போல, முன்னமே என்மேல் அன்பில்லாத இறைவர் அவள் சூற்கொண்டுவிட்டால்,என்னை ஏறெட்டுப் பார்க்கவேமாட்டார்; நான் ஒருத்தி இருப்பதையும் மறந்துவிடுவர். அந்த 'ஒல்லி'யைப்போல, நானும் கோலிய நாட்டு அஞ்சன மன்னவரின் மகளே, அவளுக்குப் பத்தாண்டுகள் இளையவளே. நான் என்ன, அழகில் குறையா? உறுப்பில் குறைபா? இரண்டு பெண்டு கொண்டவர் இளையாள்மாட்டுக்காதல் மிகுவதே நாட்டு வழக்கம்; என்மட்டில் அதுவும் தலைகீழாகி விட்டது. கைகேயிக்காகத் தசரதர் என்னவெல்லாம் செய்யவில்லை! இவ்வாறு சிறுமைப்பட்டு வாழ்வதைவிட உயிரை விட்டுவிடலாம்.

ஏகாக்ஷி:—இப்படி உள்ளங் கசந்து பேசாதேயுங்கள், தாயே! நான் இருக்கும்வரை தாங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். தங்களுடைய அழகெங்கே,மதிவன்மையெங்கே, சூழ்ச்சித்திறனெங்கே, அவள் எங்கே!

கௌதமி:—எல்லாம இருந்தும் என் செய்ய? நீ இருக்கும் வரையா? நீ இருந்து இதுகாறும் என்ன செய்துவிட்டாய்? உன் மருந்து மாயமால மெல்லாம் வெறும் பேச்சே. இறைவரைத் திருப்பிவிடுகிறேன் என்று நீயுந்தான் ஐந்தாறு ஆண்டுகளாக உன்னால் இயன்றமட்டும் பார்க்கிறாய்; ஒன்றும் நிறைவேறவில்லை. நாளுக்குநாள் அவள்புரி முறுகத்தான் செய்கிறது. நென்னற்கங்குலில் அவள் கண்ட கனவின் விளைவாகக் காலவர் கூறியபடி அவள்மட்டும் சூற்கொண்டு விட்

டால், அப்புறம் நான் ஆற்றில் விழுந்தோ நஞ்சை யுண்டோ நான்றுகொண்டோ சாகவேண்டியதுதான்.

ஏகாக்ஷி:—கனவேது சூலேது? எல்லாம் ஏமாற்றே; தம்வலையில் இறைவர் இன்னும் சிக்கும்படி செய்யும் சூழ்ச்சியே இது. நாற்பத்தைந்துக்குமேல் சூலாகிறதா? கனவில்தான் நிகழும் அது. பளா! நான் காதாலும் கேட்டதில்லை.

கௌதமி:—மெய்யாயிருந்து விட்டாலோ?

ஏகாக்ஷி:—அதற்கும் தாங்கள் அஞ்சவேண்டாம். கைகண்ட வேர் ஒன்றிருக்கிறது; சூலைக் கலைக்க வேறு சூழ்ச்சிகளும் உண்டு; தாங்கள் அஞ்சவேண்டாம். நான பார்த்துக்கொள்ளுகிறேன்.

கௌதமி:—என்ன பார்க்கப் போகிறாயோ அறியேன். கண் கெட்டபின் கதிரவனை வணங்குவதுபோல, சூல் முற்றியபின் மருந்திடுவது என்பது கூடவே கூடாது. அவர் அந்த 'ஒல்லி'யை அப்பொழுது மற்றெங்கேனும் அழைத்துக்கொண்டு போய் விடலாம்; சூலுற்ற மகளிர் அவ்வண்ணம் வேட்கையுறுதல் உண்டு; அவள் விரும்பியபடியெல்லாம் அவர் செய்வர் என்பது திண்ணம். அப்பால் உன் "பூச்" சொன்றும் சாயாது. இப்பொழுதே, உடனே, அவளை ஒழிக்கும்படி ஏதாவது செய்யவேண்டும்.

ஏகாக்ஷி:—கட்டளைதானோ? ஒழித்தே விடட்டுமோ?

கௌதமி:—எங்ஙனமாயினும் அவள் தொலைந்தால் தான் என பாடு விடியும். அப்பால், நீ என்னகேட்டாலும் தடையில்லை; நான் சொன்ன சொல தவறமாட்டேன்.

ஏகாக்ஷி:—அது தெரியாதா எனக்கு? தாங்கள் உளமகிழ்ந்து பட்டத்தலைவியாய்ப் பதினறும் பெற்றுப் பெரு வாழ்வும் வாழ்வதை, நான், என் கண்குளிரப் பார்ப்பதைவிட எனக்கு வேறென்ன வேண்டும்?

கௌதமி:—அவள் மட்டும் பட்டத்துக்குப் பிள்ளையும் பெற்றெடுத்து, மன்னவர்க்குள்ள ஒரே கவலையையும் தீர்த்துவிட்டால், பின்பு நான் உயிரோடிருக்க வேண்டியதில்லை.

ஏகாக்ஷி:—அந்த அச்சம் வேண்டாம்; அந்தப் பேறு தங்களுக்கே கிடைக்கும்படி செய்கிறேன். இன்று தான் கட்டளையாய்விட்டதே.

கௌதமி:—ஆனல், இதைமட்டும் மறந்துவிடாதே: நீ அவளுக்கென்று மருந்திட்டு வைக்கும் எதையும் அவர் உண்ணவோ பருகவோ நேரலாகாது. அவருக்கு யாதேனும் வந்தால் உன் உயிரை வாங்கிவிடுவேன் பார்த்துக்கொள்; அப்படித் தவறிப்போய்விடலாகாது.

ஏகாக்ஷி:—அவ்வளவு தெரியாதவளா நான்? பள்ளியறைச் சிற்றுண்டிகளில் ஏதாவது செய்தால்தான் அப்படி நேரிடும்; நான் அந்த வழிக்கே போகமாட்டேன். அவர் சிலதி பார்வதியின் உதவியைக் கொண்டு, அற்றம் நோக்கி, தக்கவாறு செய்துவிடுகிறேன்.

கௌதமி:—அஃதென்ன ஓசை? யாவர் வருகின்றனர்?

ஏகாக்ஷி:—யாருமில்லை, தாயே!

கௌதமி:—பார்வதியை நம்பலாமோ?

ஏகாக்ஷி:—அந்தக் கவலை தங்களுக்கேன்? என் அண்ணன் குடிலருக்கும் அவளுக்கும் தொடர்புண்டு; வேண்டியபடி நான் ஏற்பாடு செய்துகொள்கிறேன்.

கௌதமி:—எப்படியும் அந்த 'ஒல்லி'யின் சிலதியே அவள்; அவள்மீது மிக்க பற்றுள்ளவளே.

ஏகாக்ஷி:—பற்றேது தொத்தேது; எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்காகச் செய்யும் பாசாங்கே. வேந்தர் உள்ளம் மட்டும் அவரை விட்டு மாறட்டும், அப்புறம், பார்வதியின் பற்றெல்லாம் தங்களை நோக்கிவிடும். தவிர, என்னை மீறி நடக்கமாட்டாள் அவள்; என் அண்ணனுக்கும் அவளுக்குமுள்ள தொடர்பை இறைவியின் காதில் நான் ஊதிவிட்டால், இன்றே அவளுடைய வேலை போய்விடாதா?

கௌதமி:—அப்படியில்லை, ஏகாக்ஷி! என்னவிரகோ, சூழ்ச்சியோ, அந்த 'ஒல்லி'யிடத்தில், இறைவர்மட்டுமோ, அரண்மனையில் அனைவருமே பற்றுள்ளவர்களாய் இருக்கிறார்கள். எனக்கும் கூட, சில போதுகளில், இந்தப் பொறாமையை யெல்லாம் விட்டு, அவளுடன் உறவாடி நட்பாயிருக்கலாமா என்று தோற்றுகின்றது. இன்று போலிருக்கிறது: நான் இறைவரை மணக்குமுன், என் சிறு பிராயத்தில், நான் தாயையும் இழந்து அவளுடன் இருந்த நாட்களிலே, தாயினும் மிக்க அன்புடன், அவள் தான் என்னை எவ்வண்ணமெல்லாம் பாராட்டிச் சீராட்டிப் பேணிவளர்த்து வந்திருக்கிறாள்! என்னை இறைவர் கைப்பிடித்ததும் அவளுடைய தூண்டுதலால்தானே.

ஏகாக்ஷி:—தாயே! தாங்களே இப்படி மாறிவிட்டால்,—

கௌதமி:—நான் மாறுகிறதா! இல்லை, பேச்சுக் கன்றே சொல்லுகிறேன். கீழ்பால் எழும் ஞாயிறு மேல்பால் எழுந்தாலும் நான் மாறவே மாட்டேன். அந்த 'ஒல்லி' ஒழிந்தாலன்றி என் உள்ளக்கொதிப்புத் தீரவும் தீராது. உடன் பிறந்தே கொல்லும் நோய் போல் அன்றே அவள் எனக்கு மாற்றவளாகி என்னைப் படுத்துகிறுள். அவள்தொலைந்தால் தான், அவர் என்னை முகமெடுத்துப் பார்ப்பர்; என் வயிற்றெரிச்சலும் தீரும். நீதான் அதை முடித்துவிட வேண்டும்.

ஏகாக்ஷி:-நானே முடித்து விடுகிறேன், பாருங்கள்.

கௌதமி:—அஃதென்ன அடியோசை?

ஏகாக்ஷி:—யாரோ வருகிறதுபோல் இருக்கிறது. யாரது?

"நான்தான் பார்வதி" என்று சொல்லிக்கொண்டு, மாயாதேவியின் பணிப்பெண் வந்து சேர்ந்தாள்.

கௌதமி:—ஏனடி, நீ இங்கே அருகிருந்து ஓர்த்துக் கேட்டுக்கொண்டிருந்தாயோ?

பார்வதி:—ஐயோ, தாயே, நான் அப்படிப்பட்டவளில்லை. இதோ நேராக இறைவியிடமிருந்து வருகிறேன். அவர் பின்னுல் வருகிருர்; நீங்கள் இங்கிருக்கிறீர்களா என்று பார்க்கச் சொன்னுர்; உங்களைத் தேடியே வருகிருர்.

கௌதமி:—என்னைத் தேடியா? ஏன்? எதற்காக?

பார்வதி:—கழிந்தகங்குலில் தாம் கண்ட கனவையும், அதைப்பற்றி இன்று காலவர் கூறியதையும், உங்களிடத்தில் சொல்வதற்கென்று நினைக்கிறேன். இப்பொழுது அவருக்குள்ள மகிழ்ச்சிக்கு அளவில்லை.

கௌதமி:—மகிழ்ச்சிக்கு என்ன குறை? நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம். எனக்குத் தலைநோகிறது; இந்தக் 'கும்மாள' த்துக்கெல்லாம் இப்பொழுது நான் ஆளில்லை. தலைநோவு பொறுக்கமுடியாமல நான் படுக்கப்போய்விட்டேன் என்று சொல்லிவிடு; நீ வருமுன்னமே போய்விட்டேன் என்று சொல்லிவிடு.

இவ்வாறுரைத்து, கௌதமி, மற்றொரு குறுக்கு வழியாக அவ்விடத்தை அகன்று போய்விட்டாள்.

பார்வதி:—இவருக்கு ஏனோ இவ்வளவு அழுக்காறு? அதோ கோமாட்டி வருகிறார்.

ஏகாக்ஷி:—இருக்காதா பின்னே? அவர் சொன்னபடியே சொல்லிவிடு.

பார்வதி:—நான் அவரிடம் பொய் சொல்ல மாட்டேன்.

ஏகாக்ஷி:—அவ்வளவு ஒழுங்கா! ஆனால், வாயை மூடிக்கொண்டிரு; நான் எல்லாம் சொல்லிக்கொள்கிறேன்.

இதற்குள் உள்ளக் களிப்பு முகத்தே விளங்க, "கௌதமீ! கௌதமீ !ஏனடி ஏகாக்ஷி! இளங்கோமாட்டி இங்கே இருக்கிறாளா?" என்று கேட்டுக்கொண்டு மாயாதேவி அங்கு வந்து சேர்ந்தாள்.

ஏகாக்ஷி:—இல்லையே, தாயே! சற்றுமுன் இருந்தார்; 'தலைநோவு பொறுக்க முடியவில்லை; தலையைப் பிளக்கிறது' என்று வருந்திக்கொண்டிருந்தார்; 'ஏதாவது மேலே பற்றுப் போடுகிறேன்' என்று சொன்னேன்; 'வேண்டாம்' என்று மறுத்து, 'தலையைத்

தூக்க முடியவில்லை; படுத்துக்கொள்கிறேன்' என்று போய்விட்டார்.

மாயா:--ஐயோ கடவுளே! நான் இவ்வாறு மகிழ்வுறும்பொழுது அவள் துன்புறவா வேண்டும்! நிகழ்ந்ததையெல்லாம் அவளிடத்தில் சொல்லவேண்டும் என்றே, இங்கிருக்கிறாள் என்று தெரிந்து வந்தேன். பார்வதி! நீ உடனே என் மாளிகைக்குச் சென்று, தலைவலிக்கு நல்லதென்று அன்று வாமனர் தந்த எண்ணெய் இருக்கிறதே, அதை எடுத்துக்கொண்டு, இளங்கோமாட்டியின் மாளிகைக்கு என்னிடம் வா; அது நல்ல மருந்தே; உடனே கேட்கும். நான் கண்டிருக்கிறேன். ஏகாக்ஷி! தலைவலி மட்டும்தானா, வேறு கண்ணெரிச்சல் காய்ச்சல் யாதேனும் உண்டோ?

ஏகாக்ஷி:-உடம்பெல்லாம் எரிகிறதாகவே சொன்னார்.

மாயா:—நேற்று மாலை நான் கண்டபொழுது ஒன்றும் சொல்லவில்லையே.

ஏகாக்ஷி:—எல்லாம் இன்று பிற்பகல்தான்; சில்போது குளிர்ந்த காற்றில் உலாவினால் தணியுமென்றே இங்கு வந்தார். இங்கு வந்தபின் தலைவலி பொறுக்க முடியாமல் போய்விட்டார்.

மாயா:—நான்போய்ப் பார்க்கிறேன், இந்தப் பூக்களை நான் கொண்டுபோகிறேன்; நீ குறையும் பறித்துக்கொண்டு வா. ஆ! என்ன அழகு! என்ன மணம்! பார்வதி! நீ மருந்தை எடுத்துவரும்பொழுது, வாமனப் பண்டிதர் அங்கிருந்தால் அவரையும் அழைத்துவா; அவர் இல்லாவிட்டால், உடனே இளங்கோமாட்டியின் மாளிகைக்கு அவரை அழைத்துவரும்படி வேலையாளர் யாரையாவது ஏவிவிட்டு வா.

## 3. மாங்கனி.

கனா நூலினைக் கரைகண்ட காலவர் கழறியவாறே மாயாதேவி சூலுற்று மகிழ்ச்சி மிக்கு உள்ளம் உவந்திருந்தாள். "இவளுக்குப் பிறக்கும் பிள்ளை, தன் முன்னோர் யாவரினும் சாலச் சிறப்புற்று, அயல் நாடுகள் அனைத்தையும் தன் குடைக்கீழாக்கி ஆளுகை செய்வன்; அன்றேல், அறத்தாறுற்று மாநிலம் அனைத்தையும் அளித்தருளுவன்" என்று அவர் உரைத்ததற்குப் பொருந்த, இறைவி, சூலுற்றாரை வருத்தும் வயாநோய் தளர்ச்சி ஒன்றினையும் உணராதவளாய், யாவரும் வியப்புற, எப்பொழுதும் போலவே இன்புற்று வாழ்ந்துவந்தாள். தான் வலியச்சென்று நட்புப்பாராட்டியும் மதி கூறியும் மற்றெல்லா வழியாலும் தன் தங்கையினது உள்ளத்தை இணக்கி உவக்கச்செய்ய முயன்றும் கைகூடாதாக, அவள்மட்டும் நாளுக்குநாள் நறுமொறுப்பு மேலிட்டுத் தன்மீது ஆறாச்சினமும் மாறாப்பகைமையும் கொண்டொழுகியது ஒன்றே, இறைவியின் உவகையை மங்கச்செய்து, அவளைத் துன்புறுத்தியது. வேந்தனிடம் அதைச் சொன்னால் அவனுக்குக் கௌதமி மீதுள்ள சினமும் அருவருப்பும் மிகுமென்றஞ்சி அவள், அக்கவலையை வெளியிடவில்லை.

இங்ஙனம் நிகழும் நாட்களில் ஒருநாள் மாலையில், வேட்டையாடச் சென்றிருந்த வேந்தன் திரும்பி வருமுன், மாயாதேவி, தன் பணிப்பெண் பார்வதி துணைவர, அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். ஒரு மாமரத்தின் அருகை அவர்கள் அடைந்து

பொழுது, அங்கிருந்த குடிலன் என்னும தோட்டக் காவலாளன், "தாயே! இது தாங்கள் அருந்துவதற்கு ஏற்ற மாங்கனியாகும்; தானகவே கொம்பிற் கனிந்து உதிர்ந்தது; சிறிதுவண்டரித்ததெனினும், இன்சுவைமிக்கது" என்று கூறி, ஒரு மாங்கனியை நீட்டினன். மற்றெல்லாக் கனிகளிலும் மாங்கனியே கோப்பெண்டுக்கு மிகவும் உவப்பு. "அவ்வளவு நல்ல கனியா இது? பார்ப்போம்: பார்வதி! அதைவாங்கி நறுக்கித் தா" என்று அவள்கூற, பார்வதி அந்தக் கனியை வாங்கித் துடைத்து விட்டு, குடிலன் உதவிய கத்தியினல் அதை நறுக்கத் தொடங்கினள். கனியைக் குடிலனுடைய கையிலிருந்து வாங்கும்பொழுதும், அதைத் துடைக்கும் பொழுதும், பார்வதியின் கைகள் நடுங்கியதையும், முகம் வெளிறி வேற்றுமைப் பட்டதையும் இறைவி கண்டாள். தன் சிலதியின்மீது குடிலனுக்குக் காதல் உண்டெனபதை மட்டும் அவள் கேள்வியுற்றிருந்தாள்; உண்மை முழுதும் அவளுக்குத் தெரியாது. 'ஒருபோது பார்வதிக்கும் அவன்மீது காதலிருக்கலாம்; அதனல், என் எதிரில் அவனைக் கண்டு பழகுவதால் நாணமும் அச்சமும் மேலிட,அவள் இவ்வண்ணம் நடுங்குகின்றனள்' என்று அவள் ஐயங்கொண்டு, புன்னகையுற்று, பார்வதியை நோக்காது மற்றொருபுறம் திரும்பிக்கொண்டாள்.

அப்பொழுது குடிலன், "ஐயோ! கையை நறுக்கிக் கொண்டுவிட்டாயா? நான் நறுக்கித் தருவேனே" என்றுரைத்தது காதில்விழ, மாயாதேவி, பார்வதியைப் பார்த்துத் திரும்பவே, அவள் இடது கையில் கத்தி பட்டுக் குருதி பெருகுவதைக் கண்ணுற்றாள். மற்றொன்றும் எண்ணமல், அவள், உடனே தன் பட்டாடையின் முன்

தானையைக் கிழித்து, சிலதியின் வெட்டுண்ட விரலைச் சுற்றிக் கட்டி, "ஐயோ! பார்வதி! என்பொருட்டு உனக்கு இந்தத் துன்பு நேர்ந்ததே!" என்று பலமுறை கூறி, உள்ளம் வருந்துவாளாயினள். பார்வதி ஒன்றுமே பேசவில்லை.

குடிலன், "சிறிதே பட்டிருக்கிறது; அப்படியே ஆறிப்போம்; கத்தி கூரியது; கனியை நான் நறுக்கித் தருகிறேன்" என்று சொல்லி, கனியையும் கத்தியையும் தன் கையில் வாங்கிக்கொண்டு, நறுக்கத் தொடங்கினன்.

இறைவி, "அவன் நறுக்கட்டும், நீ வாங்கித்தா; பட்ட ஊறுக்கு ஈடாக நீயும் இடையிலே இரண்டொரு துணுக்குக்கள் தின்றுகொள்" என்று, தன் சிலதியின் காதலை நினைந்து உள்ளம் கனிந்தவளாய், புன்னகையோடும் கூறினள்.

அவ்வாறே குடிலன் முதலில் நறுக்கிக் கொடுத்த இரண்டு துண்டங்களை வாங்கிப் பார்வதி அவள் கையில தர, அவள் அவற்றைச் சுவைத்துக் கொண்டு, "ஆம், இக்கனி மிகவும் இனிமையாய்த்தா னிருக்கிறது" என்று சொன்னள். அப்பால், குடிலன், கனியின மறு புறத்திலிருந்து ஒரு பெரிய துணுக்கை நறுக்கி, "இதுதான் வண்டரித்த கூறு; அதைவிடத் தித்திப்பாயிருக்கும், பாருங்கள்" என்று சொல்லி, இறைவியைப் பார்த்து நீட்டினன்.

அப்பொழுது மாயாதேவி, "பார்வதி என் திடீரென ஊமையாகி விட்டாள்? ஒன்றுக்கும் வாய்திறக்கவே இல்லையே? அவள் கையில் கொடு; அவள் வாங்கித்

தந்ததைத்தான் நான் தின்பேன்'' என்று விளையாட்டாகச் சொன்னாள்.

"இதுதான் கனியில் சிறந்த கூறு; இறைவியிடம் இதைக் கொடு'' என்று, குடிலன், ஒரு துணுக்கைப் பார்வதி கையில் கொடுத்தான். அவள் அதை வாங்கி, "இது நல்ல கூறானால் இதுவே எனக்குக் கூலி'' என்றுரைத்து, குடிலன் "ஆ! ஆ!'' என்று தடுத்துக்கூவ, இறைவி வியப்புடன் நோக்கிநிற்க, தன் வாயில் போட்டுக்கொண்டு விழுங்கிவிட்டாள். மாயாதேவிக்கு முதலில் சிறிது சினக்குறி தோன்றுவதுபோல் இருந்தது; ஆயினும், அவள், "எனக்காகக் குருதி பெருக ஊறுபட்ட நீ, கனியில் சிறந்த கூற்றைப் பெறுவது தகுதியே. குடிலா! நீ நில்'' என்றுமட்டும் சொல்லிவிட்டு, மேல் நடக்கலானாள். குடிலனோ, வியப்பும் சினமும் அச்சமும் மிக்கவனாய், இறைவியின் பின்செல்லும் சிலதியைப் பார்த்துத் திகைப்புற்று நின்றான்.

வேந்தன் திரும்பும்நேரமாயிற்றென்று, மாயாதேவி, விரைந்து நடந்து அரண்மனையை அடைந்தாள். சிறிது பொழுதில் மன்னன் திரும்பி வந்து, தான் அன்று வேட்டையாடிய ஒரு பெரிய வரிப்புலியின் தோலை அவளுக்குக் காட்டி, அவ்வேங்கையைத் தான் கொன்றபடியை அவளுக்கு எடுத்துரைக்கலானான். அரண்மனைப் பணியாளர் பலர், அவன் கூறுவதை அகல நின்று கேட்டு, அவனுடைய ஆண்மையையும் ஆற்றலையும்பற்றித் தம்முள் மெதுவாய்ப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது சிலதி ஒருத்தி ஓடிவந்து கோமானை வணங்கி, "பார்வதி சாகுந்தறு

வாயில் குற்றுயிருடன் துடித்துக்கொண்டிருக்கிறாள்; தங்களை உடனே கண்டுபேச விரும்புகிறாள்; அதோ அந்த அறையில்தான் இருக்கிறாள்" என்று தெரியப் படுத்தினாள்.

"பார்வதியா? இப்பொழுதே அவள் என்னுடன் தோட்டத்திலிருந்து வந்தாள்!" என்று இறைவி வியப் புடன் கூற, இறைவன், "என்னுடன் பேசவேண்டுமோ, கோமாட்டியுடனோ?" என்று வினவினான்.

"வேந்தரைத்தான் கண்டுபேச வேண்டுமாம்" என்று சிலதி விடையளிக்க, சுத்தோதனனும் மாயா தேவியும் அவள் சுட்டிய அறையை நோக்கிச் சென்றனர். அங்குநின்ற பணியாளர் அனைவரும் சிறிது பின்னாகச் சென்றனர். அவ்வறையில், பார்வதி தரை யின்மேல் கிடந்து புரண்டு, நோவினால் துடித்துக் கொண்டிருந்தாள். அவளைக்கண்டதும் இறைவி பதைத் தோடி அன்புடன் அவளை அணைத்துக்கொண்டு, "என், பார்வதி! உனக்கு என்ன செய்கிறது? இப்பொழுது தானே என்னுடன் வந்தாய்! வயிறு நோகிறதா, நெஞ்சு நோகிறதா?" என்று பரிந்து கேட்டாள்.

பார்வதி, தன் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு, "தாயே! இந்தத் தீயவளைத் தாங்கள் தீண்டா தேயுங்கள்! பெருமானே! இவரையும் மற்றவர்களையும் போகச்சொல்லுங்கள். இன்னும் அரை நாழிகைக்குள் என் உயிர் போய்விடும்; அதற்குமுன், நான் தங்களு டன் தனிமையாய் ஒரு செய்தி சொல்லவேண்டும். உடனே இவர்களையெல்லாம் போகச்சொல்லுங்கள்" என்று, தாழ்ந்த குரலில் தங்கித்தங்கி அரிதில் உரைத்

தாள். அவ்வாறே காவலனுடைய ஏவலின்படி கோப்பெண்டும் பிறரும் நீங்கியபின், பார்வதி, கோமானை நோக்கி, முன்போலவே தங்கித்தங்கி, பின்வருமாறு அரிதில் கூறினாள்:—

"பெருமானே! தாங்கள் இறைவியைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவருக்கு வைத்த நஞ்சினால் தான் நான் இப்பொழுது சாகிறேன். தங்கள் இளங்கோப்பெண்டின் ஏவுதலால், அவருடைய சிலதி ஏகாக்ஷியும், அவளுடைய அண்ணன் குடிலருமாகச் சூழ்ச்சிசெய்து இட்ட நஞ்சே இது. 'நான் உடந்தையாயிருக்கமாட்டேன்; இறைவியிடம் சொல்லிவிடுவேன்' என்று, முதலில் நான் எவ்வளவோ தடுத்தேன்; குடிலரை அஞ்சி, அவர் சொல்லைத் தட்டமாட்டாமலே, முடிவில் நானும் இணங்கிவிட்டேன் ஒரு மாங்கனிக்குள் கொடிய நஞ்சைச் செலுத்தி, அதை இறைவிக்குக் கொடுக்கும்படி, இன்று மாலை, அவர் தோட்டத்தில் தந்தார். அவர் காதலுக்காகத் தீமையேன் இசைந்தேன் என்றாலும், என் நெஞ்சம் கேட்கவில்லை; நான் கனியை நறுக்கும்பொழுதே கைபதறி, என் விரலை நறுக்கிக் கொண்டேன். அப்பொழுது கோமாட்டி தமது பட்டு முன்தானையையே கிழித்து, என் விரலைத் தாமே கட்டி, எனக்காக வருந்தியதும், அவர் இந்தக் கொலையாளிமீது காட்டிய அன்பும் என் உள்ளத்தைப் பிளக்க, அவருக்குக் கொடுக்கும்படி குடிலர் என்கையில் தந்த நஞ்சிட்ட கனித்துணுக்கை நானே விழுங்கிவிட்டேன். என்னைப்போன்ற தீயவர் இப்படிச் சாவதே தகுதி. இனியேனும், பெருமானே! அவரை விழிப்பாய்ப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்." இங்ஙனம் அரிதில் கூறிவிட்டு, பார்வதி உயிரைத் துறந்தாள்.

இதைக் கேட்டவுடன் வேந்தனுக்குக் கடுஞ்சினம் உண்டாயிற்று. தன் வாளை உருவிக்கொண்டு, வெறி கொண்டவன்போல, கௌதமியின் மாளிகையை நோக்கி அவன் விரைந்து சென்றான். மாயாதேவி அவனுடைய அடிகளில் விழுந்து கெஞ்சி அவனைத் தடுத்திராவிட்டால், அன்றே கௌதமி அவன் வாளுக்கு இரையாகி யிருப்பாள். முடிவில், அவன், கௌதமியைக் கடுஞ்சிறையில் வைக்குமாறும், ஏகாக்ஷியையும் குடிலனையும் கழுவேற்றிவிடுமாறும் தீர்ப்புச் செய்தான். இறைவி, பின்னும் அவனுடன் நெடுநேரம் மன்றாடி வருந்திக் கெஞ்சியும், தான் சூலுற்றிருக்கையில் தன் பொருட்டு இருவரைக் கொல்லுதல் தீக்குறிபோன்று தன் உள்ளத்தை ஓயாது வருத்துமென்று கூறியும், ஏகாக்ஷியையும் குடிலனையும் கொன்றுவிடாது நாட்டை விட்டு வெளியே துரத்திவிடும்படி செய்தாள். அவ்வண்ணமே அவர் இருவரும் துரத்தப்பட்டனர்; கௌதமி, அரண்மனையில் ஓர் அறையில் தனிச்சிறையிருந்தாள்; அவளுடன் பிறர் பேசாமலும், அவளை நன்கு காக்கும்படியும் இறைவன் கடுமையாய்க் கட்டளையிட்டான். தன்னைக் கொல்லும்படி தன் தங்கையே சூழ்ந்ததை நினைத்து நினைத்து, இறைவி, ஆறாப்பெருந் துயரம் அடைந்தனளெனினும், அவள் அவ்வாறு இழிவான சிறைப்பட்டு வருந்துவதற்காக உள்ளம் நொந்து, ஊண் உடை முதலியவற்றில் அவளுக்கு எக்குறையும் நேராதவாறு வேண்டிய ஏற்பாடு செய்து வந்தாள்.

# 4. அன்பின் பெருமை.

நோவு சோர்வு யாதுமின்றி, செவ்வனே சூல் முதிர்ந்து, தன் தங்கையின் கொடிய நிலைமையை யன்றி மற்றெவ்வகைத் துன்பையும் உணராதவளாய், மாயாதேவி வாழ்ந்து வந்தாள். நாளுக்குநாள் அவள் மீது அன்புமிக்க சுத்தோதனன், பலவாற்றால் அவளை மகிழ்விக்க முயன்றதுமன்றி, கார்ப்பொழுதின் இறுதி யில் தங்கிவாழ்தற்கு இனிய இடமான உலும்பினிச் சோலைக்கு அவளை அழைத்துச் செல்ல விரும்பினன்; ஆயினும், அவள் அதற்கு இணங்கவில்லை. தன் தங்கை கபிலை அரண்மனையில் கடுஞ்சிறையிற் கிடந்து துன் புறும் பொழுது, தான்மட்டும் பிறவிடம் சென்று இன்பம் திளைக்க அவளுடைய உள்ளம் இசைய வில்லை. அதைத் தன் கணவனிடம் வெளியிட அஞ்சி, கபிலையில் வாழுவதையே தான் உவப்பதாகச் சொல்லி விட்டாள்.

இங்ஙனம் நிகழுகையில் ஒருநாள், அதற்குரிய போது நிறைவேற, இறைவி, தன் வயிற்றுப்பிள்ளை சூற்பைக்குள் திரும்பியதை உணரலானாள். அன்று மாலை இறைவனோடு பூந்தோட்டத்தில் உலாவிக் கொண் டிருக்கையில், பேச்சினிடையில், அவனுக்குச் செய்தி யைக் கூறினளாக, அவன், உள்ளம் உவந்து, "மாயா! இப்பொழுது எனக்குள்ள மகிழ்ச்சியை எப்படி எடுத் துரைப்பேன்! நீ மட்டும் எப்பொழுதுமே ஒருபடியாய் வாடினாற்போல் இருப்பதுதான், சிலபொழுதுகளில்,என்

உள்ளத்தை வருத்துகின்றது. இன்பத்தைத் தரவல்ல எதைக் கூறினும், 'வேண்டாம், வேண்டாம்' என்றே நீ தள்ளிவிடுகிறாய்; உன் விருப்பம் யாதாயினும் கூசாமல் சொல்; என்னால் இயலுவதாயின், தடையின்றி நான் நிறைவேற்றுகிறேன்'' என்று சொன்னான்.

மாயா:—அன்பரே! தாங்கள் என்னுடன் இருக்கும் பொழுது எனக்கு மற்றென்ன வேண்டும்? ஆயினும், தாங்கள் இவ்வாறு என்னை வற்புறுத்திக்கேட்டமட்டில், என் உள்ளத்தின் விருப்பத்தை ஒளியாது நான் சொல்லி விடுகிறேன். நான் வாடியிருப்பதும் உண்மையில் அதற்காகவே: என் உடன்பிறந்த தங்கை தனிச் சிறையிலிருந்து வருந்துவதுதான் என்னைவருத்துகின்றது; நினைக்க நினைக்க என்னால் அதைப் பொறுக்க முடியவில்லை. அவளைத் தாங்கள் அருள்புரிந்து சிறை நீக்கினால், இனி ஒரு நாளும் அவள் அப்படி நடக்க மாட்டாள். தங்களுடைய பேரருளே அவளைச் சீர் திருத்திவிடும். இன்னசெய்தாரைத் திருத்துதற்கு, அவர் நாணும்படி நன்மை செய்துவிடுதலே ஏற்ற வழியாகும். தங்களுக்கு ஐயமிருந்தால், அவளுடைய ஒழுக்கத்தைப் பற்றித் தங்கள் உள்ளம் தெளியாவிட்டால், அவளால் எனக்கு ஏத்தகைய இன்னலும் இயற்றக் கூடாதபடி, தாங்கள் செய்யும் கட்டுப்பாடுகளுக்கெல்லாம் நான் உட்படுகிறேன். அவளுடைய மாளிகையில் அவள் தனியாய் வாழட்டும்; இழிவான சிறைமட்டும் வேண்டாம்; தங்கள் விடையின்றி நான் அவளைக் கண்டுபேசவு மில்லை. இதுமட்டும் தாங்கள் அருள் செய்தால், பிறகு, ஒரு குறையுமின்றி, நானும் தங்களைப்போலவே மகிழ்ந்திருப்பேன்.

சுத்:—மாயா! இருபத்தேழு ஆண்டுகளாக உன்னுடன் நெருங்கிப் பழகியும், இன்னும் உன்பெருந் தன்மையையும் தூய்மையையும் நான் முழுதும்தெரிந்து கொள்ளவில்லையே! இன்னும் வியப்பாகவே இருக்கின்றனவே! இப்படிப்பட்ட ஈடெடுப்பில்லாத பெருஞ் செல்வத்தை இழக்க அஞ்சியே அவளை நான் சிறையிலிட்டது. சிறைவிடுத்தால் இன்னும் அவள் யாது செய்வாளோ என்று என் நெஞ்சம் நடுங்குகின்றது.

மாயா:—அன்பரே! தாங்கள் அப்படி அஞ்ச வேண்டாம்: தங்கள் கட்டளையினால், நான் அவளுடன் அளவளாவி நேரில் அறிந்துகொள்ளவில்லையெனினும், அவளைத் தாங்கள் கொன்றுவிடாமல், சிறை செய்தமட்டில் பொறுத்துவிட்ட பேரருளை எண்ணி எண்ணி, அவளுடைய உள்ளம் மிகவும் கனிந்திருக்கிறது என்று கேள்வி. இப்பொழுது, அவளை முழுதும் நம்பிச் சிறைநீக்கிவிட்டால், அவள் குறையும் திருந்தி, நல்ல வழிக்கு வந்து விடுவாள் என்பதில் ஐயமேயில்லை. அன்பினால் ஆகாதது ஒன்றுண்டோ? மாந்தருடைய உள்ளப் போக்கைச் செப்பமிடுவதில் அதனினும் சிறந்தது ஒன்றுண்டோ? என்னுடைய வேண்டுதலுக்கு இரங்கி அவளை இப்பொழுது சிறை நீக்குங்கள்; மீண்டும் அவள் தவறினால், அவளுக்காக நான் பரிந்து பேசவேயில்லை. இந்த ஒருமுறையும் எனக்காக அருள்புரியுங்கள்.

இவ்வண்ணம் மாயாதேவி கெஞ்சி இரக்கவே, சுத்தோதனன், சில கட்டுப்பாடுகளை மட்டும் வற்புறுத்தி மொழிந்து, அவள் வேண்டுகோளுக்கு இணங்கிவிட்

டான். உடனே அவள் உளமகிழ்ந்து முகமலர்ந்து அவனுடைய நெஞ்சங் குளிர முகமன் கூறிவிட்டு, புதியதோர் உள்ளக் கிளர்ச்சியோடும் தன் தங்கையைக் காண விரைந்து சென்றாள். சிறைப்பட்ட நாள் முதல் கௌதமி அவளைப் பார்க்கவில்லை; ஆகவே, இப்பொழுது திடீரென்று தன் தமக்கை சிறையறைக்குள் வந்தவுடன், கௌதமி, ஒரு மூலையில் ஒதுங்கி, முகத்தைத் தன் கைகளால் மூடிக்கொண்டு, விம்மி விம்மி அழலானாள். "கௌதமீ!" என்று கூவிக்கொண்டு வந்த மாயாதேவி, அவளை அன்புடன் தழுவிக் கட்டிக்கொண்டு, தானும் தேம்பித்தேம்பி அழுதாள். இதைக்கண்ட சிறைக் காவலாளரும் சிலதியரும் வெளியே திகைத்து நின்றனர்.

சிறிது நேரம் இருவரும் ஒன்றும் பேசாது அழுது ஆறியபின், இறைவி, அங்கிருந்த கட்டிலின்மீது கௌதமியைத் தன் அருகில் உட்காரச் செய்து, கட்புனல் பெருக, மிக்க பரபரப்போடு பின்வருமாறு பேசலானாள்:—"இறைவர் அருள் சுரந்து உன்னைச் சிறை நீக்கிவிட்டார்; இனி நீ இங்கிருக்கவேண்டாம்; உன் மாளிகையில் முன்போலிருக்கலாம். இனிமேலாயினும் அவரைச் சினமூட்டாது நட. என்மீதும் பகைமைபாராட்ட வேண்டாம்; உனக்கு என்ன வேண்டியிருப்பினும் நான் செய்விக்கிறேன். நீ மட்டும் இறைவரைச் சினமூட்டாது, அவருடைய உள்ளம் உவக்கும்படி ஒழுகுவாயானால், என்னைவிட மேலாக அவர் உன்னைக் கொண்டாடுவர்; எனக்கும் அஃது எவ்வளவோ மகிழ்ச்சியைத் தரும். கௌதமீ! நம்முடைய தாய் தந்தையரோ மாண்டு

போய் விட்டனர்; உடன் பிறந்தார் உற்றார் ஒருவரும் இங்கில்லை; நாம் இருவருமே தனித்திருக்கிறோம்; இறைவரே நம்மிருவர்க்கும் ஒரு துணை; எப்பொழுதும் நீ என்னை விட்டுப்பிரியாமல் இருக்கவேண்டும் என்றெண்ணியே, நான உன்னை அவருக்கு மணம்புரிவித்தேன்; இல்லாவிடின், இந்த ஆட்சியும் அரண்மனையுமின்றி, வேறு எவருக்கேனும் வாழ்க்கைப்பட்டு, நீ தாழ்ந்தநிலைமையிலேயே வாழ்ந்திருப்பாய்; அவ்வாறாகாமல், உன்னை இறைவரே மணக்கும்படி நான் செய்தேன். என் உள்ளம் அறிய, இந்த இருபது ஆண்டுகளாக, உன்னை ஏமாற்றி நான் எதுவும் செய்ததில்லை. நீமட்டும்,—அதுவும் என் ஊழின் விளைவென்றே சொல்ல வேண்டும். இனியேனும், நாம் இளமையில், கோலிய நாட்டில், நமது அரண்மனையில் வாழ்ந்துவந்தபொழுது ஒருவர்மேலொருவர் கொண்டிருந்த அன்பையும் நட்பையும் நினைத்தேனும், நீ, என்மீது அன்புவைத்து ஒழுக மாட்டாயா? அந்தோ, கௌதமி! என் உள்ளம் உனக்காகப் புண்பட்டு நொந்து வருந்துவதையும், இத்தனை நாள்களாக நீ சிறையிலிருக்கையில் நான் பெருக்கிய கட்புனலையும், பட்ட சிறுமையையும் நீ அறிந்தால், இனி ஒரு நாளும் என்மேல் சினமுறமாட்டாய்.''

இவ்வாறு இறைவி பேசும்பொழுது, கௌதமிக்கும் கட்புனல் பெருகிக்கொண்டே இருந்தது; ஆனால், நாணமும் துயரமும் நெஞ்சையடைக்க, அவள், முதலில் ஏதும் பேசமாட்டாம லிருந்தாள். இறைவியின் கடைசிமொழிகளைக் கேட்டவுடன், கௌதமி, அவளை இறுகக் கட்டிக்கொண்டு, "மாயா! நீ இன்னும் ஒன்றும் சொல்லாதே. என்னால் பொறுக்க முடியவில்லை.

இத்தனை நாள்களாக என்னை ஒரு பேய்பிடித்திருந்தது, இன்றே உன் அன்பினால் அஃது என்னைவிட்டு நீங்கிற்று என்று எண்ணிக்கொள். நான் தீயவளே! மிகத் தீயவளே! கடவுள் அருளினால் இனிமேல் ஒரு பொழுதும் நான் அப்படி நடக்கமாட்டேன் என்றெண்ணுகிறேன். ஐயோ! மாயா! உன்னையும் நான் கொல்லப் பார்த்தேனே! அன்றே இறைவர் என்னைக் கொன்று விடாமல் நீ தடுத்து, காப்பாற்றினையே! தன்னைக் கொல்லவரும் ஆவையும் கொல்லலாம் என்பர். உடன்பிறந்தவளா யிருந்தும், நீ எனக்குத் தொட்டில் தொட்டு அன்று மட்டும் செய்திருக்கும் எல்லா நன்மைகளுக்கும் என்மீது வைத்துள்ள அன்புக்கும் எதிராக, உன்னை நஞ்சிட்டுக் கொல்ல முயன்ற கொலையாளி அன்றோ நான்!" என்றுரைத்து, தன் தீய செயல்களை எண்ணிப் பலவாறு வருந்தலானாள். இறைவி, அவற்றையெல்லாம் அறவே மறந்துவிடும்படி சொல்லி, அவளைத் தேற்றி, வேந்தனிடம் வலிய அழைத்துக் கொண்டு போனாள்.

மாயாதேவி கௌதமியைக் காணச் சென்றவுடன், சுத்தோதனன், நேராக அரண்மனையில் தன் அறைக்குள் சென்று, அங்கே, அவள் திரும்பிவருதலை எதிர் நோக்கிக் காத்திருந்தான். கௌதமி திருந்துவள் என்றேனும், மாயாதேவி அவள் மேல் வைத்துள்ள பேரன்புக்கு ஏற்றவாறு ஒழுகுவள் என்றேனும் அவன் நம்பவில்லை. பாம்புக்குப் பாலைவார்த்தாலும் நஞ்சையன்றி மற்றொன்றைத் தராததுபோல, கௌதமியும் சீர்ப்பட மாட்டாளென்றே அவன் நினைத்திருந்தான். இதன்மேலும் அவள் யாதானும் குறும்புசெய்ய முயன்

ருல், தன் தலைவி தடுத்தாலும் நில்லாது, அவளைக் கொன்றுவிடுகிறதென்றே அவன் தீர்மானித்திருந்தான். இவ்வாருகப் பல நினைந்து, தன் அறைக்குள் இருப்புக் கொள்ளாது, மாயாதேவியின் வரவை எதிர்பார்த்து, அவன் உலாவிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது, மாயாதேவியும், அவள் பின்னே மறைந்து ஒதுங்கி வெள்கித் தலைகுனிந்த கௌதமியும் உள்ளேவந்து சேர்ந்தனர். "அன்பரே! கௌதமி தன் குற்றத்துக்காக இப்பொழுது நம்மினும் மிக்கு வருந்துகிருள்; அவளை மன்னியுங்கள்" என்று இறைவி கூறினுள். அதுகாறும் பின்புறம் ஒதுங்கிநின்ற கௌதமி, சரேலென முன்னுக வந்து, திகைத்து நின்றுகொண்டிருந்த வேந்தன்முன் பணிந்து, அவன் அடிகளைத் தன் கைகளால் நன்கு பற்றிக்கொண்டு, "அன்பரே! நான் தீயவளே எனினும் என்னை மன்னியுங்கள். இனி என்றேனும் நான் சிறிதுமே பிழைத்தாலும், என் தலையை வீசிவிடுங்கள். என்னைப் பிடித்திருந்த பேய் இன்று நீங்கிவிட்டது; எனக்கு நன்மதி வந்துவிட்டது. அணங்கேபோன்ற இவளுடன் பிறந்தவள் என்றேனும், இந்த ஒரு முறையும் பொறுத்தருளுங்கள்" என்று, அழுது புலம்பி உரைத்தாள். கனவோ நனவோ என்று தியங்குவான்போல வேந்தன் நின்றுன். அவளுடைய புலம்பொலியைக் கேட்டவுடன் அவன் கண்களும் பனிக்கலாயின. "இறைவர் உன்னை மன்னித்தருளி, இனி உன்மீது அன்புடையவரா யிருப்பர்; எழுந்திரு, கௌதமி!" என்று சொல்லி, மாயாதேவி அவளைத் தூக்கியெடுத்தாள். ஆயினும், கௌதமி எழுந்திராமல், "அவர் தம் வாயால் சொன்னுலன்றி

நான் எழுந்திரேன்" என்று கூறினள். சுத்தோதனன், உள்ளங்கசிந்து, "எழுந்திரு, கௌதமி! எழுந்திரு. உன் தமக்கைக்காக இம்முறை உன் பிழையைப் பொறுத்தேன். இனியேனும், அவள் பெருந்தன்மையையும் நல்லொழுக்கத்தையும் பார்த்தேனும், அவள் உன்மீது கொண்டுள்ள பேரன்புக்குத் தக்க வண்ணம் நடந்து கொள்" என்று உரைத்தான். அதுமுதல், கௌதமி, இறைவனே வியந்து மெச்சி உள்ளம் உவக்கும்படி, அழுக்கறுத்தலை அறவே அறுத்து, தன் தமக்கைமீது மிக்க உள்ளன்பு பூண்டு ஒழுகுவாளாயினள்.

## 5. பிறப்பும் இறப்பும்.

பல்லாண்டுகளாய்த் தன்னை வாட்டிக்கொண்டிருந்த ஓயாப் பெருங்கவலை ஒழிந்து, விரைவில் தான் பிள்ளைப் பேற்றை எதிர்நோக்கும் உவகையினாலும்; தன் அருமைத் தங்கை சீர்திருந்தித் தன்னுடன் உளமொத்து வாழும் மகிழ்ச்சியினாலும்; எப்பொழுதினும் ஏற்றமாக வேந்தன் தன்மீது கொண்டுகொட்டும் பேரன்பினாலும் உள்ளம் விம்மினவளாய், மாயாதேவி, நாள் ஒருநாழிகையாக இனிது வாழ்ந்துவந்தாள். இப்பொழுது, அவள் விரும்பிய வண்ணம், சுத்தோதனன், தன் மனைவிமார் இருவரையும் அகம்படியர் புறம்படியர் மற்றுள்ள ஏவலாளர் மருத்துவர் இசைவலார் மெய்காவலர் முதலிய உரிமையோர்களையும் அழைத்துக்கொண்டு, உலும்பினிச் சோலையின்கண் உள்ள மாளிகையில் சென்று தங்கலாயினன். பொரிதர வெதுப்பும் பகலவன் கதிர்கள் எப்பகலிலும் உட்புக ஒண்ணாத பொதும்பர்களும்; நன்மணம் கமழும் பன்மலர்ச் செடி கொடிகளும்; இனிய

பல் கனிகளை நனிமிக நல்கும் மரவகைகளும்; கள்ளமில் குழவியர் உள்ளம்போல் தெள்ளிதாய், அன்னவர் மழலையினும் அருந்தமிழ் மொழியினுமே இனியதாய், கன்னங்கறேலென விளங்கித் தண்புனல் நிறைந்த பொய்கைகளும், வாய்க்கால்களும், மலிந்துள்ளது அந்த உலும்பினிக் கா. இறைவி மாயாதேவி, தனக்கினிய தன் மணவாளனேனும், தங்கையேனும், வினைக்கினிய தன் சிலதியரேனும் துணைவர, அச்சோலையின்கண் உள்ளமுவந்தபடி உலாவித் திரிந்தும், மலர் கொய்தும், விளையாடியும், பகற்பொழுதையெல்லாம் கழிப்பாள்; எல்லியில் கண்துயிலும் வரை, இன்னிசை இன்பத்தை நுகர்ந்து களிப்பாள்.

இங்ஙனம் நிகழ்ந்தது, ஈசான சகாப்தம் அறுபத்தெட்டாவது ஆண்டு வைகாசி மதியின் வளர்பிறை நாட்களிலேதான். இறைவி உலும்பினிக் காவை அடைந்த பின், எட்டாவது நாள், பூர்ணிமையும் விசாக நக்ஷத்திரமும் கூடிய வெள்ளிக் கிழமை; அன்று மாலையில், அவள், தோகைகள் ஆடுவதையும் குயில்கள் பாடுவதையும் கண்டு கேட்டு உளமகிழ்ந்து, தன்னுடனிருந்த தன் தங்கை கௌதமியோடும் சிலதியர் சிலரோடும் ஒரு பிண்டி மரத்தின் அடியில் பேசிக்கொண்டிருந்தாள். வேந்தன், கபிலைத் தலையூரில் தன் ஓலக்கம் சென்றிருந்தான். அப்பொழுது, கௌதமி, இறைவியை நோக்கி:—"மாயா! நான் தான் குள்ளம்; இனி வளரப்போகிறதில்லை; உலையில்வைத்துத் தட்டி நீட்டவும் ஒண்ணாது. நீ உயரம் என்கிறாயே: எங்கே, அதோ அந்தக் கொம்பரிலுள்ள மலர் உனக்கு எட்டுகிறதோ பார்ப்போம்; நீ மட்டும்

அதைப் பறித்துவிட்டால், நான் என் தலையில் ஒரு குட்டுக் குட்டிக் கொள்கிறேன்'' என்று விளையாட்டாகச் சொன்னாள். "இன்னும் ஒரு குட்டுக் கிடைத்தது'' என்று சொல்லிக்கொண்டே, இறைவி, பரபரப்புடன் எழுந்து சென்று, அம்மரக் கிளையை எட்டும்படி தனது கால்பட த்தின்மேல் நின்றுகொண்டு, வலக்கையை உயர்த்தினாள். 'அப்பொழுது இறைவி மாயாதேவியின் வயிற்றிலிருந்து, சிறிதும் அவளுக்கு வருத்தத்தை உண்டுபண்ணாமல், மெல்ல மெல்ல ஓர் ஆண் குழந்தை வெளியே வந்து பிறந்து விட்டது.'

இறைவி, பொறையுயிர்த்தலால் உண்டாகும் தளர்ச்சி சிறிதுமின்றி, பெருமகிழ் பூத்து, அம்மரத்தின் கீழ் வீற்றிருந்தாள். அப்பொழுது ஓர் இளங்காற்று வீசாநிற்க, அம்மரமே தலைவணங்கி மலர் தூவுவது போல, அவள் மேலும் குழந்தை மேலும் மலர்மழை பெய்தது; அச் சோலையிலுள்ள மாவினங்களும் புள்ளினங்களும், புதியதோர் உவகை மிக்காற்போல, துள்ளி யோடியும் சிறகர் விரித்தாடியும் களித்தன. இவற்றையெல்லாம் கண்ணுற்ற கௌதமியும் சிலதியரும் வியப்பையும் களிப்பையும் அடைந்தவராய், உடனே இறைவனுக்குச் செய்திவிடுத்தனர். கௌதமி, அன்புகூர்ந்து, அக் குழந்தையை எடுத்து, சீராட்டிப் பாராட்டுவாளாயினள்.

சுத்தோதனன், அன்று அரண்மனையிலுள்ள வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, இறைவியை மீண்டடையும் அவாவினனாய், உலும்பினிக் காவுக்குப் புறப்படும் பொழுது, வடக்கே மலை வாழும் மங்கோலியர் நாட்டி

விருந்தும், கிழக்கே லிச்சவி, மகத நாடுகளிலிருந்தும், மேற்கே ஸ்ரீரஸ்வதி நாட்டிலிருந்தும், செல்வம் மிக்க நாய்கர் சிலர், விலைமதிப்பில்லாத பட்டாடைகளையும் ஒளிக்கற்களையும் சிம்புளிகளையும் வேறு காணிக்கைகளையும் கொண்டு, அவனைக் காண வந்தடைந்தனர். அதே தறுவாயில், தெற்கே கோலிய நாட்டிறைவனான அவனுடைய மனைவியின் தம்பி, தன் தமக்கையாகிய மாயாதேவியின் நிலைமையை அறிந்து வரும்படி ஏவிவிடுத்த மறையோர்சிலர், அவளுக்கும் கௌதமிக்கும் வேந்தனுக்கும் ஏற்ற பரிசுகளைக்கொண்டு வந்துசேர்ந்தனர். இங்ஙனம் வந்தாரையும் அவர் கொண்டுவந்த பொருள்களையும் வேந்தன் கண்டு, உள்ளம் மகிழ்ந்து, அவரவர்க்கு ஏற்றவாறு முகமன் கூறிக்கொண்டிருக்கையில், உலும்பினிச் சோலையினின்றும் ஒரு குதிரையாள் விரைந்து வந்து, இறைவி மாயாதேவி ஆண்மகவு பெற்ற செய்தியையும், நிகழ்ந்த புதுமைகளையும் தெரிவித்தனனாக, சுத்தோதனன், அளப்பரும் உவகையுற்று, தனது மெய்ம்மும் நெஞ்சமும் விம்மலுற்றான். அப்பால், அவன், தன்னவர்களையும் வந்தவர்களையும் நோக்கி, "கடவுள் திருவருளால் இம்மகன் பிறந்தபொழுதே என் உள்ளத்துக் கிடந்த நீங்காப் பெருங்குறை நீங்க, அதே தறுவாயில் யான் விரும்பி உவததற்குரிய யாவுமே என்னை வந்து அடைந்திருக்கின்றமையால், இப்பிள்ளைக்கு "சர்வார்த்தசித்தி" எனப் பெயரிடுதலே பொருந்தும் என்று மகிழ்ந்து கூற, அனைவரும் அதனை ஒப்பி மெச்சினர். பிறகு அவன் தூப்புனலாடி, மறையவர்க்கும் மற்றவர்க்கும் விதை பொன் சருக்கரை முதலிய பொருள்களை வரம்பின்றி வழங்கிவிட்டு, ஆவலுடன் உலும்பினிக் காவுக்கு மீண்டனன்.

இறைவிமாயாதேவி, தான்பொறையுயிர்த்த பிண்டி மரத்தின் கீழேயே, உவகைக் கடலில் ஆழ்ந்தவளாயிருந்தனள். தன் மணவாளனைக்கண்டவுடன், அவள், சிறிது நாணமுற்றுப் புன்னகை பூத்து, முன்னையினும் மிக்க மகிழ்ச்சியை எய்தினளெனினும், அங்கிருந்து இடம் பெயர விரும்பவில்லை; ஆகவே, அவனும் அங்கே தங்கலாயினன். வியப்பின்மேல் வியப்பாக, இளங்கோப்பெண்டு கௌதமிக்குப் பால் சுரக்கவே, அவளே குழந்தையைப் பாலூட்டிப் பேணி வந்தாள்.

இதனிடையில், தமக்கு இளங்கோப் பிறந்ததை அறிந்த கபிலைப்பேரூரின்கண்வாழும் அனைவரும் களிபேருவகை மிக்கு, காவல்மூதூரை அழகுசெய்து, கோவில்களிலும் தமது வீடுகளிலும் திருவிழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். வருந்தாது தளராது இறைவி பொறையுயிர்த்ததும், அப்பொழுது நேர்ந்த வியப்பான நிகழ்ச்சிகளும், உவகை மிகுதியால் இடம் பெயராது அவள் அப்பிண்டி மரத்தின் அடியில்தானே வீற்றிருத்தலும், கௌதமி பால் சுரந்து குழவியைப் பேணி வருதலுமான செய்திகள் நாடெங்கும் பரந்தனவாக, நாட்டில் தலைமை மிக்கோர் பலரும் பெரியோர் பிறரும் வேந்தனைக் காணவந்தனர்.

அங்ஙனம் உலும்பினிச்சோலையை அடைந்தவருள் ஒருவர் அசிதர். அவர், நோன்பிலும் அறிவிலும் ஆண்டிலும்மிக்கவர். இறைவியிருந்த பிண்டிமரத்தை அவர் அணுகியவுடன், வேந்தனும் கௌதமியும் பொருக்கென எழுந்து சென்று, அவரை அடிபணிந்து வரவேற்று, அவருடைய தாள்மலர்களில் அக்குழந்தையைவைத்து, அதனை வாழ்த்தும்படி அவரை வேண்டினர். அசிதர்

கீழேயிருந்து அக்குழந்தையை உற்று நோக்கலாயினர். அப்பால், அவர், முளரிமலர்போன்ற அதன் அடிகளை மெல்லப் பிடித்துத் தம் தலையின்மேல் வைத்துக் கண்களிலும் ஒற்றிக்கொண்டு, பின்பு வேந்தனை நோக்கி, "புரவல! மக்களாகிய மரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை மலரும் மலரே இக்குழந்தை. இவனைப்பெற்ற உமது பெருமையை என்னவென்று சொல்வேன்! இவன் துறவுபூண்டு வையகத்தில் அனைவரையும் அளித்தருள்வான்" என்றனர்.

அதைக்கேட்ட சுத்தோதனன், "இவன் துறப்பது எப்பொழுதோ?" என்றான்.

அசிதர்:—"அஃது இப்பொழுது அறிவிக்கற் பாலதன்று. இதுகாறும் இவ்வுடலை நீங்க அவாவியுள்ள என் உள்ளம், இன்னும் சில ஆண்டுகள் ஈண்டிருந்து இவன் அறம் ஓதுவதைக் கேட்டற்கில்லையே என்று இப்பொழுது ஏங்காநிற்கும். இன்று இவனைக் கண்ணுற்றதே என் நோன்பின்பேறும். மற்றொன்றும் சொல்லுதற்குரியது: இவனைச் சூலுற்றுப் பெற்றுவிட்ட அன்னை, இன்னும் உயிருடனிருந்து, வாழ்க்கைக்குரிய இன்பு துன்புகளுக்கு உள்ளாவது தகாது; அதனால், அவள் இறந்து படுவள்.

'புத்தன் தாய், நண்டு, இப்பி, வாழை, புன மூங்கில்,
கத்தும் விரியன், கடுஞ்சிலந்தி,—இத்தனையும்,
வேலாலும் வாளாலும் அன்றியே, மேவிய தம்
சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு'

என்பது மூதுரை" என்றனர். ஆற்றொணாத் துயரம் நெஞ்சை அடைக்க, கண்களில் புனல்மல்க, சுத்தோதனன், "இவள் இறப்பது எந்நாளோ?" என்றான்.

அசிதர்: "அஃது இக்குழந்தை பிறந்த ஏழாவது நாளாகும். நீ வீணில் வருந்துதலை ஒழி" என்று சொல்லி, குழந்தையை மீண்டும் ஆர்வமுடன் வணங்கிவிட்டுச் சென்றனர்.

இறைவன், சாலத் துயரமுற்று, மருத்துவத்திற் சிறந்தோரால் மாயாதேவிக்கு ஏற்ற செய்ம்முறைகளைச்செய்வித்தும், கோவில்களில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கடவுளரை மகிழ்வித்தும், தன்னால் இயன்றமட்டும் அவளுடைய உயிரைக் காப்பாற்ற முயன்றனன். ஆயினும், எவ்வித நோவும் வருத்தமுமின்றி, தான் இருந்த இடத்ில்தானே, குழந்தை பிறந்த ஏழாவது நாளின் மாலையில், மாயாதேவி, மகிழ்ச்சி மிகுதியன்றி மற்றொரு பிணியுமின்றி, கொற்றவனும் கௌதமியும் பிறரும் அளப்பரும் துயரத்தில் ஆழ, உறங்குவாள்போல உயிரை நீத்தனள். அப்பால், இறைவன், அவளுடைய உடம்பை முறைப்படி எரித்து, என்பையும் சாம்பரையும் ஒரு பொற்கலத்தில் நிறைத்து, அவளிருந்துவந்த மாளிகையை அஸ்தமயகிரி என்னும் அருகிருந்த குன்றின்மேல் பெயர்த்துக் கட்டி, அதில் அக்கலத்தை அடக்கஞ் செய்தான். அவளுடைய பெருமையை யாவர்க்கும் புலப்படுத்தும் பொருட்டு, நூற்றறுபது அடி உயரமுள்ள ஒரு கோவிலை அம்மாளிகையின் அருகே எடுப்பித்து, மேற்கூறிய பிண்டி மரத்தையும் அந்தத் தளியின் எதிரே பெயர்த்து நட்டான்.

## 6. முளைப் பயிர்.

ஓய்வொழிவின்றி உருண்டு செல்லும் ஞாயிறும் திங்களும் நமது வாழ்நாளை ஈவிரக்கமின்றி அளந்து கொண்டே விரைந்து செல்கின்றன என்று குறை கூறுவோர், இவ் வாழ்க்கையில் இயலும் துன்பங்களின் கொடுமையை, அவை, தாம் செல்லும்போது தணித்தே செல்கின்றன என்பதை ஒப்புக்கொள்ளக் கடவர். மாயாதேவியின் பிரிவினால் வேந்தனுக்கும் கௌதமிக்கும் உண்டான உள்ளக் கொதிப்பு, அன்னவாறே நாளடைவில் மட்டுப்பட்டு, அவள் பெற்றுவிட்ட குழந்தையின் மாட்டு நாளுக்குநாள் வளர்ந்தேறும் அன்பின் பெருக்கினால் ஒருவாறு நீங்கியது. "சர்வார்த்த சித்தி" என்று பெயரிடப்பெற்ற அக் குழந்தை, கோதமர் வழித்தோன்றல் ஆதலின் 'கௌதமன்' என்றும், வேந்தனுடைய விருப்பத்தை நிறைவேற்றியதால் 'சித்தார்த்தன்' என்றும் பெயர் வழங்கப்பெற்று, தனது தந்தையும் சிற்றன்னையும் சீராட்டிப் பாராட்ட அருமையாய் வளர்ந்து வந்தான். அவனை வளர்க்கத் தொடங்கிய பின்னர், கௌதமிக்கு நந்தன் என்றொரு மகனும், உருபநந்தை என்றொரு மகளும் பிறந்தனர். இவளுடைய பெயர் கௌதமி என்றும், பிரஜாவதி என்றும், பிரஜாவதி கௌதமி என்றும், மஹாப் பிரஜாவதி கௌதமி என்றும் வழங்குவதுண்டு.

சித்தார்த்தனுக்கு எட்டாவது ஆண்டு நிறைந்தவுடன், சுத்தோதனன், காவலர் அறிதற்குரிய எல்லா நூல்களிலும் அவனை வல்லவனாகச்செய்ய விரும்பி, கல்

விக் கடல்போல் விளங்கிய மித்திரன் என்னும் அந்தணனை அவனுக்குக் கணக்காயன் ஆக்கினன்; அதுவுமன்றி, ஆனையேற்றம் குதிரையேற்றம் தேரேற்றம் விற்போர் வாட்போர் வேட்டையாடுதல் முதலிய கோவியற் பயிற்சிகளை அவனுக்குக் கற்பிக்குமாறு, அவற்றில் சிறந்து பேர்பெற்றார் சிலரையும் ஏற்படுத்தினன். இவ்வண்ணம் வேந்தனது கட்டளைப்படி கோவிளந் தோன்றலுக்குக் கல்விபயிற்றப் புகுந்த கணக்காயர் அனைவரும், வியப்பானதோர் உண்மையை விரைவில் அறியலாயினர்: சித்தார்த்தன் கல்வி பயில்வது, கணக்காயர் கற்பிப்பதை உணர்ந்து உள்ளத்தில் வைத்து ஊன்றி ஆராய்வதால் நாளடைவில் படிப்படியாக மற்றவர் அறிவில் வளர்ந்தேறுவது போலாது, இளமையில் ஐயந்திரிபற ஒரு நூலினைக் கற்றுக் கரைகண்டான் ஒருவன், இடையில் அதனை மறந்து, அப்பால் வேறொருவன் தனக்கு அதனை ஓதத் தொடங்கியபொழுது, தான் முன்பு கற்றதனைத்தும் பொருக்கென நினைவுக்கு வர, ஓதுவிப்பான் உதவியின்றியே, கடல் மடை திறந்தாற்போல, மளமளவென்று அந்நூலனைத்தையும் ஒப்பிப்பது போலவே இருந்தது. படைப் பயிற்சி முதலியவற்றிலும் இவ்வாறே கற்பிப்பார்க்குச் சிறிதுமே வருத்தமின்றிச் சித்தார்த்தன் ஒவ்வொன்றினும் தனது முதிர்ந்த தேர்ச்சியை வெளியிட்டானாக, கணக்காயர் அவனை வியந்து கொண்டாடினர். ஆகவே, பல்லாண்டுகளாக வருந்திப் பயின்றும் பிறர்க்குத் தெரியலாகாத கல்வி யாவற்றிலும், அரை வியாழவட்டத்துக்குள் அவன் தேர்ந்து விளங்கினன்.

சித்தார்த்தனது படிப்பு முடிவுபெறும் நாட்களில் ஒரு நாள் மாலைப் பொழுதில், அவனும், தொடக்கம் தொட்டு அவனுடன் கல்வி பயின்று வந்த பாங்கனான உதாயி என்னும் பார்ப்பனச் சிறுவனும், அரண்மனைத் தோட்டத்தில் உலாவிப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவனுக்குப் பதினைந்தாவது ஆண்டு; உதாயியும் ஒத்த ஆண்டினனே. இருவரும், அடிநாள் தொட்டுச் சேர்ந்துபழகி வளர்ந்து கல்விகற்றுள்ள தோழர், முகவனப்பும் வடிவழகும் வாய்ந்த கட்டிளைஞர் எனினும், அவர்களுக்குள் இயல்பாயுள்ள வேறுபாடு, தோற்றத்தில் மட்டுமோ, ஒவ்வொரு மொழியிலும் செயலிலும் நன்கு துலங்கிற்று. உதாயியின் முகத்தில் ஒளிரும் 'ப்ரும்ம தேஜஸ்ஸு'ம் அவன் அணிந்திருந்த முப்புரி நூலும் அவன் அந்தணன் என்பதை விளக்கின. ஆயினும், சித்தார்த்தனுடைய முகம், பாராள்வார் மரபுக்குரிய பேராண்மையையும் நிலை கலங்காத உறுதியையும் காட்டியதும் தவிர; அவனுடைய பெரிய அழகிய கண்களில் மலிந்து பொலிந்த ஆர்வமும் அடக்கமும் அமைதியும், இன்னதால் என்று இயம்ப ஒண்ணாத அவனுடைய ஏற்றமான தோற்றமும், கனிவோடும் பரபரப்போடும் இனிய மொழிகளைப் பேசும்பொழுதன்றி மற்றைப்போதுகளில் பொதுவாய் ஆழ்ந்த எண்ணத்தில் அமர்ந்திருப்பவன்போற் காணும் அவனது உள் நோக்கிய பார்வையும், உதாயியைவிட்டு அவனை வேறுபடுத்திக் காட்டின. அவ்விருவருடைய பேச்சைச் சிறிது கேட்போம்:—

உதாயி:—மித்திரர் அளவு கற்றவர் இந்நாட்டிலே இல்லை என்கிறார் என்தந்தையார்: நீயோ அவருக்கும்

மேற்போய்விட்டாய். உனக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, எனது ஐந்தாவது ஆண்டில் தானே, நான் மறைகளை ஓதத்தொடங்கினேன்; வேட்டை, சிலம்பம், படைப்பயிற்சி முதலியவற்றில் நான் நேரத்தைச் செலவிடவுமில்லை. எனினும், என் படிப்பு இன்னும் பாதிகூட முடிந்தபாடில்லை. ஆளப்பிறந்த உனக்கு இத்துணை மூளைத்திறனையும், தன்வலிகொண்டு அம்பல மேறிப் பிழைத்தற்குரிய எனக்கு இத்துணை மூளை மெலிவையும் கடவுள் அளித்திருப்பது குருட்டுத் தனமே.

சித்தார்த்தன்:—மூளைவலியும், அதனால் திரட்டிய கல்விச்செல்வமும், ஒருவன் கண்டு அழுக்காறடையும் அளவு சிறந்தன என்று எனக்குத் தோற்றவில்லை. மித்திரர் கல்விக்கடல், என் சிற்றன்னை கௌதமிப் பிரஜாவதியோ, அவரில் நூற்றில் ஒருபங்கும் கல்வியில்லாதவள்; ஆயினும், அன்பு மிக்க அவளுடைய தன்மையே அவருடைய இயல்பைவிடச் சாலவும் மேலாக எனக்குப் பிடித்திருக்கின்றது. அவள் எனது சிற்றன்னை என்பதாலன்று; அவளுடைய கழிபேரன்பின் பொருட்டே. இன்னும், அவளுமே, நினைக்குந்தோறும் கனிந்து வியந்து பெருமிதத்தோடு எடுத்துக்கூறும் என் தாயின் அளப்பரிய அன்புப் பெருக்கு, எவ்வாறிருந்திருக்குமோ!

உதாயி:—அன்புக்கென்ன, தாய்மாரெல்லாம் அப்படித்தான். சென்ற ஆடியில் நான் காய்ச்சலால் வருந்தியபொழுது, என்னுடைய தாய், மூன்றுநாள் ஊணுறக்கமின்றி என்னைவிட்டு அகலாமலிருந்தாள். நீ கூட, வேந்தர் தடுத்தும் கேளாமல், அப்பொழுது என்னை வந்து பார்க்கவில்லையா?

சித்தார்த்தன்:—ஆம்; அம்மட்டில், மித்திரரைவிட மேலாகவே உன் தாயை நான் மதிப்பேன். நாள்தோறும் வாழ்க்கையில் சேர்ந்து பழகுவார்க்குள் ஒருவர் மேல் ஒருவர்க்கு இருக்கவேண்டிய உள்ளன்பு, மிக்க படிப்பினுல் வறண்டுபோகக்கூடும் என்றே சில போதுகளில் நான் எண்ணுகிறேன். மித்திரரின் இயற்கையை நான் கண்டறிந்தவரை,—'' என்று கோவிளங் குரிசில் பேசி முடியுமுன், அவன் எதிரில் இரண்டு விற்கிடையளவுக்கு அப்பால், ஓர் ஓதிமப் பறவை, மேலிருந்து தொப்பெனக் கீழே விழுந்தது. பாலென வெளுத்த மினுமினுப்பான அதன் ஒருபுறச்சிறகு, குருதியால் கறைப்பட்டிருந்தது. கீழே விழுந்த அக்குருகு, மீண்டும் மேல்கிளம்ப மாட்டாமல், தன் இறகுகளை வீணில் அடித்துக்கொண்டு துடித்தது. முதலிற் சிறிது திடுக்கிட்ட சித்தார்த்தன், உடனே ஓடிச்சென்று, அப்புள்ளை அன்புடன் தன் கைகளில் அணைத்தெடுத்தான். அப்பொழுதுதான், அதன் அடிப்புறத்தில் ஒரு கூரிய அம்பு பாய்ந்து தைத்திருப்பதை அவன் அறிந்தான்; அப்புள்ளின் மார்பினை அணைத்திருந்த அவனுடைய கைக்கு, அச்சத்தாலும் நோவினுலும் அதன் நெஞ்சம் பதைபதைப்பதும் தெரியவந்தது. கண்களில் புனல்மல்க, அவன், தரையில் உட்கார்ந்து, பறவையைத் தன் மடிமேல் அணைவாய் வைத்துக்கொண்டு, ''உதாயி! நான் இந்த அம்பை மெல்லப் பிடுங்குகிறேன்; நீ அதற்குள் ஓடிப் போய்ச் சிறிது தேனும் தளிரும் கொண்டு வா'' என்று சொல்ல, உதாயி அவ்வாறே சென்றான்.

பிறகு, சித்தார்த்தன், ஓதிமத்தைத் தன் கைகளால் தடவிக்கொடுத்தும், மெத்தெனத் தன் மார்

போடு அணைத்தும், இன்னுரைகளை மெல்ல மொழிந்தும், அதன் அச்சத்தைத் தவிர்த்தான். அப்பால், அவன், அவ்வாளியை மெல்லப் பிடுங்கிவிட்டான்; உடனே, அப்புண்ணிலிருந்து குருதி பெருகிற்று; அவனுடைய கட்புனலும் பெருகி அதனுடன் கலந்தது. உதாயி வரும்வரை, அவன், அப்புண்ணின்வாயில் தன் விரலை வைத்து அழுத்திக் குருதி பெருகாமல் காத்துக்கொண்டிருந்தான். தேனையும் மருந்துத்தளிரையும் உதாயி கொணர்ந்தவுடன், அவற்றை அப்புண்ணில் அப்பி, அப்புள்ளின் நோவைத் தீர்த்து, அதைத் தன்மடிமேல் அணைத்துத் தைவரலானான்.

அசிதர் கூறியவாறு தன்மகன் துறக்கலாகும் என்று அஞ்சிய சுத்தோதனன், எத்தகைய நோவு துன்புகளையும் சித்தார்த்தன் என்றுமே உணராதவண்ணம், மிக்க கவலையோடு அவனை அரண்மனையிலே வைத்து வளர்த்துவந்திருந்தான். ஆகவே, அதுகாறும், நோவு இத்தன்மையது என்பதைச் சித்தார்த்தன் அறியான். அதனால், அவன், ஓதிமத்தின் உடலில் தைத்திருந்த அம்பின் முனையை இப்பொழுது தன் கைமேல் வைத்து அழுத்திப் பார்த்தான். உடனே தனக்குச் சுருக்கென உண்டான வலியினால் நொந்து, அத்தகைய நோவினை அந்தப் புள் எங்ஙனம் பொறுத்திருந்ததோ என இரங்கி, மீண்டும் அதனை ஆர்வமுடன் அணைத்துத் தைவரலானான்.

அப்பொழுது, பணியாளன் ஒருவன் விரைந்து வந்து, கோமகனை வணங்கி, "பெரும! அடியேன் தங்கள் தமையனார் தேவதத்தரின் ஊழியன். அவர் இப்பொ

மூதே ஓர் ஓதிமப்புள்ளை எய்தார்; இவ்விடத்தில்தான் அது விழுந்தது; தாங்கள் வைத்திருக்கும் இப்புள்ளே போலும். தாம் எய்து வீழ்த்திய புள்ளை எடுத்து வரும்படி அவர் என்னை ஏவினர்'' என்றான். தேவதத்தன் என்பவன் சித்தார்த்தனது தோழன்; அவனுடைய சிற்றப்பனான சுக்கிலோதனனது மகன்; அவனுக்குச் சில்லாண்டுகளுக்கு மூத்தவன்.

பணியாளன் கூறியதைக்கேட்ட சித்தார்த்தன், "இதுதான் அந்தப்பறவை; ஆயினும், இதன்விசையை மட்டும் அண்ணன் அழித்தானேயன்றி, இதைக்கொன்றிலன்; அதுவும் கடவுளின் அருளே. நானே இதைக் காப்பாற்றினேன்; நான் இதைத் தரமாட்டேன்'' என்று விடையளித்து, அவனைத் திரும்பிப் போகவிடுத்தான். பிறகு, அன்பின் பெருமையையும் புள் விலங்குகளை வேட்டையாடுதலின் கொடுமையையும் பற்றி உதாயியுடன் அவன், பேசிக்கொண்டிருக்கையில், தேவதத்தனே அங்கு வந்து, "தம்பீ! நீ கூறுவது ஒவ்வாது: உள்ளம் உவந்தபடி காட்டிலோ வானத்திலோ திரியும் புள் விலங்குகளில் எதையேனும் ஒருவன் எய்து வீழ்த்தினால், அவனுக்கே அஃது உரியது என்பதுதான் நாட்டு வழக்கு. வானத்தில் பறந்து போகையில் இப்பறவை எவனுக்கும் உரியதன்று; நான் எய்து வீழ்த்தியபின், எனக்கே உரியது; அதனால் என் கையில் இதைக் கொடுத்துவிடு'' என்று கேட்டான்.

அப்பொழுது, சித்தார்த்தன், அப் புள்ளைத் தன் அழகிய முகத்தோடு அணைத்துக்கொண்டு, பின்வருமாறு அமைதியாய் உறுதியாய்ப் பதில் உரைத்தான்:—

"அண்ணா! நான் இதைத் தரமாட்டேன்: நீ இதனைக் கொல்ல நாடினவன்; நான் காப்பாற்றினவன்; உயிர் என்பது நம்மால் மதித்தற்குரிய ஒரு பொருளானால், உயிர்பெற்றுள்ள எதுவும், அவ்வுயிரை அழிக்க நாடினவனுக்கு உரியதாகுமோ, அல்லது, அதனைக் காப்பாற்றினவனுக்கு உரியதாகுமோ, நீயே எண்ணிப் பார்! இது தவிர, அண்ணா! மற்றொன்றையும் கூறுவேன், கேள்: இப்பொழுது எனது உள்ளத்தில் பொங்கியெழும் இரக்க உணர்ச்சியினாலும் அருள் வெள்ளத்தினாலும், உயிருள்ள ஒன்றையும் துன்புறுத்தாது கொல்லாது வாழும் பேரொழுக்கத்தின் சிறப்பை மாந்தர்க்கெல்லாம் நான் எடுத்தோதுவேன் என்றும், அந்த உரிமையினால், எண்ணிறந்த உயிர்கள் என்னுடையன ஆகுமென்றும் எனக்குத் தோற்றுகின்றது. அங்ஙனம் நான் ஓம்பலாகும் உயிர்களில், இவ்வோதிமப் புள்ளை முதலாவது. ஆகவே, இதை நான் ஒருபொழுதும் தரமாட்டேன்."

இதைக் கேட்டவுடன் தேவதத்தன் சினமுற்று, "வேந்தன் மகனாயிருத்தலினால் செருக்குற்று, நீ இவ்வாறு வழக்குமீறிப் பேசுகின்றனை போலும்; இது தகாது. இனி ஒருபொழுதும் உன் நட்பை நான் வேண்டேன்" என்று கூறிப் போய்விட்டான். அது முதலாக, தேவதத்தன், சித்தார்த்தன்மீது அழுக்காறுற்று, தீராப்பகைமை பாராட்டலாயினன்.

இவற்றையெல்லாம் உதாயிகூறச் செவியுற்ற சுத்தோதனன், தன்மகன் துறவு புகுவனோ என்ற கவலை மிக்கு, நாட்டுச் சிறப்புக்களை எடுத்துக்காட்டி அவனு

டைய உள்ளத்தைத் திருப்ப நினைத்து, தன்னுடன் நாடு காணச் செல்லும்படி அவனை அழைத்தான். அவ்வாறே தந்தையும் மகனும் குதிரையேறி, ஒரு நாள் வெளிச் சென்றனர். அப்பொழுது இளவேனில்: மரஞ் செடி கொடிகள், பொன்னிறமான இளம்பசும் தளிர்களாலும், பலநிற மலர்களாலும், தளதள வென்று விளங்கிக்கொண்டிருந்தன; ஊர்வன நடப்பன பறப்பனவான எண்ணிறந்த சிற்றுயிர்களும் புள்ளினங்களும் விலங்குகளும் எங்கே பார்க்கினும் களித்துக் கூவிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இரைதேடிக்கொண்டுமிருந்தன; மிக்க விளைவை அடைய விரும்பினவராய், உழவர், தமது கலப்பைகளை மண்ணில் ஆழப் பதியும்படி அழுத்தி, அதனால் இழுக்கமாட்டாமல் வலித்து வலித்து வருந்தும் எருதுகளைத் தட்டிக்கொடுத்துத் தாற்றுக்கோலாற் குத்தி மேற்செலுத்தி உழுதுகொண்டும், விதைகளை விதைத்துக் கொண்டும், பயிர்களுக்குப் புனலிறைத்துப்பாய்ச்சிக் கொண்டும், களைபிடுங்கிக்கொண்டும் இருந்தனர். நாடெங்கும் புனல்வளமும் நிலவளமும் உயிர்வளமும்செழித்துக் கண்கவர் காட்சியதாயிருந்தது. அவற்றையெல்லாம் தன் மகனுக்குச் சுட்டிக்காட்டி, குடிகளின் செல்வப் பெருக்கையும் வாழ்க்கை நலத்தையும் பற்றிப் பேசிக் கொண்டு சென்றான் சுத்தோதனன். சித்தார்த்தனோ, அவ்வளவில் நின்றுவிடாமல் ஆழ்ந்து நோக்குவானாகி, நெற்றியின் வேர்வை நிலத்தில் வீழக் குடியானவர் வயிற்றை நிரப்புவதற்காக இடையறாது உடல் உழைத்துப் பாடுபடுவதையும்; அதன் பொருட்டு, வாயில்லாத உயிர்களான எருதுகளைக் குருதி பெருகத் தாற்றினால் குத்தி வருத்தி வேலை வாங்குவதையும்; எறும்பை

பல்லியும், பல்லியைப் பாம்பும், பாம்பையும் பல்லியையும் பருந்தும், மீன்களை மீன் கொத்திப்புள்ளும், மீன் கொத்தியை வல்லூறும், உயிருள்ளன பலவற்றை வேடனும் பிடித்துத் தின்பதனுல், இயற்கையில் எங்கு நோக்கினும், ஒன்றை ஒன்று கொன்று தின்று, பிழைத்து, சாக்காடு நிறைந்திருப்பதையும்; இங்ஙனமாக, வாழ்க்கை முழுதும், ஒருயிரை ஓம்ப வேறுயிரை வருத்துவதும் கொல்வதுமாய் ஒரே குழப்பமாக இருப்பதையும் அவன் உணர்ந்தான்.

அப்பால், அவன், தன் தந்தையை நோக்கி: "தந்தையே! இதைக் காணவோ என்னை அழைத்து வந்தீர்கள்! இதுவோ நமது பெருவாழ்வும்? உழவர் உண்ணும் ஊண், அவருடைய வேர்வைப் பெருக்கினுல் உப்பு மிகுந்து கரியாதோ? எருதுகள் படும் வருத்தம் சிறிதோ? காடு புதர்களில் போலவே வானத்தில் பறப்பனவற்றுள்ளும் நீர்வாழ்வனவற்றுள்ளுங்கூட, வலியில்லனவற்றை வலியுற்றவை வாட்டி வருத்தி மாய்த்து வயிறு வளர்ப்பதே வழக்காயிருக்கின்றதே. அந்தோ! இதையோ நான் காண வந்தேன்" என்று கூறி, குதிரையை விட்டிழிந்து, அருகிருந்த ஒரு நாவல் மரத்தின் அடியில் உட்கார்ந்து, தன் கவலையில் ஆழ்ந்து, தன் தந்தையையும் தன் உடலையுமே மறந்து, உயிர் வாழ்க்கையின் துன்புகளை எண்ணி ஆராய்பவனுய், நெடுநேரம் வரை இருந்துவிட்டான்.

இதைக்கண்ட வேந்தன் முன்னிலும் மிக்க கவலையுற்று, கோவியனுக்குரிய சிறப்புக்களினுலும் வரிசைகளினுலும் ஒருவாறு தன் மகனது உள்ளத்தை மயக்கி

மாற்றலாகும் என்றெண்ணி, நல்லதோர் நாளில், அவ னுடைய பதினைந்தாவது ஆண்டிலே, அவனை இளங் கோவாக முடிசூட்டி வைத்தான். தவிர, சுத்தோத னன், ஒரு பெரிய தோட்டத்தில், வேனில் மழை பனி ஆகிய இம்மூன்று பெரும்பொழுதுகளிலும் தங்கி வாழ் தற்குத் தகுதியாக, முறையே, சுட்ட செங்கல் பளிங்குக் கல் செம்புளிச்சை மரம் இவற்றினால் மூன்று மாளிகை களை எடுப்பித்து; தன் மகன், உள்ளம் உவந்தவாறு, உதாயி முதலிய அவனது தோழர்களுடன் உலாவித்திரிந்தோ, அல்லது, அவனை மகிழ்விக்கும் பொருட்டு நிகழும் புதிது புதிதான வேடிக்கைகளைக் கண்டுகளித்தோ, நினைக்கு முன்னரே அவன் நினைத்ததை நேர்மையாய் நிறைவேற் றும் வினைவல்ல ஏவலாளரின் நடுவே, இவ்வாழ்க்கையைப் பற்றிய நினைப்பேயின்றி, இனிது பொழுதுபோக்கும் படி ஏற்படுத்தினான்.

## 7. காதற்சிறை.

"குதிரையைக் குளத்துக்குக் கொண்டுபோக ஒரு வன் போதும்; அது விரும்பாவிட்டால், அதைப் புனல் குடிக்கும்படிச்செய்ய இருபது பேர்களாலும்முடியாது" என்பது ஆங்கிலப் பழமொழி. "வெண்ணெய்க் கட்டி யும் சீனியும் ஊட்டலாம்; விக்கிக்கொள்வதற் கென் செயலாம்?" என்றார், தமிழ்ப் பாவலர் ஒருவர். சித் தார்த்தனைப்பற்றிச் சுத்தோதனன் செய்த சூழ்ச்சி களும் அவ்வண்ணமே யாயின. அத்தனை இன்பங்களி னிடையில், அவனுடைய உள்ளம் எதையும் பற்றாமல், வேறுநினைப்பில் ஆழ்வதாயிற்று. அதைக்கண்ட வேந்தன் கவலை மிக்கு, தனது தேர்ச்சித்துணைவரைநோக்கி:—

"அசிதர் கூறியவாறே நிகழ்ந்துவிடும்போல் காண்கின்றதே: முடியையும், ஆட்சியையும், நுகர்தற்குரிய இன்பங்களையும் வெறுத்துத் துறந்தபின்னர், என் மகன் என்ன நன்மையை அடையப் போகிறான்? பிறருக்குத்தான் அவன் என்ன நன்மையைச் செய்யப் போகிறான்? கைகடந்துபோகுமுன் அவனுடைய உள்ளத்தை வாழ்க்கை வழியில் திருப்புதற்கு நீவிர் எவரேனும் தக்கதோர் சூழ்ச்சி உரைக்க மாட்டீரோ?" என்று வினவினான்.

அப்பொழுது, முதியோன் ஒருவன் எழுந்து:— "கொற்றவ! மாதரார் தரும் காதலே இந்த நோய்க்கு ஏற்ற மருந்தாகும். மானிளங்கன்றுபோல இப்பொழுது வான் நோக்கி எழும் அவனுடைய உள்ளம், கருங்குழல் முருக்கிதழ்க் கட்டழகிகளின் காதல்வலையிற் சிக்குண்டு, அந்த அணங்கனைய மெல்லியலார் நுதற் சிலை வளைத்து எய்யும் அன்பென்னும் நஞ்சு தோய்ந்த பொரும் பெரிய கொழுங்கண் வாளிகள் தைக்கப் பெறின், இத்துள்ளல் எல்லாம் தவிர்ந்து, பாம்பாட்டிகைப் பாம்புபோல் ஒடுங்கிவிடும் என்பது திண்ணம். இருப்புச் சங்கிலிகைகளாலும் கட்ட ஒண்ணாது மேல் நோக்கி யெழும் எண்ணங்கள் யாவும், தான் விருப்புற்ற மெல்லியலின் மெல்லோதி ஒன்றினால் கட்டுண்டு கிடக்கும் அன்றோ? அழகிற் சிறந்த நங்கையரைத் தேடி உடனே அவனுக்கு மணஞ்செய்து வைத்தால் எல்லாம் திருந்திவிடும்" என்று கூறினான். அதைக்கேட்ட வேந்தன், "நானும் அவ்வாறே நினைத்தேன். அவனுக்கு ஆண்டு பதினெட்டு நிறைகிறது; அதற்கேற்ற வேட்கை யுண்டாகலாம். ஆயினும், காத

லுக்குக் கண்ணில்லையே; நாம் காட்டியவழி அது செல்லுமென்பது உறுதியில்லையே'' என்றான்.

அதற்கு, முதியோன்:—''வேந்தே! அவனுடைய உள்ளபோக்கை எளிதில் அறிந்து கொள்ளலாம். அடுத்த மதியில் அவனுடைய பதினெட்டாவது பிறந்த நாளை அரண்மனையில் நாம் கொண்டாடும் பொழுது, கபிலை மூதூரிலுள்ள மடந்தையர்களான கோக்குடி மாதர் அனைவரையும் வரவழைத்து, அவரவர்க்கு ஏற்ற வண்ணம் இளங்கோவே பரிசுகள் உதவும்படி செய்தால், எவள்மீது அவனுடைய உள்ளம் ஓடுகின்றது என்பதை உற்று நோக்கித் தெரிந்துகொண்டு, அவளையே அவனுக்கு மணம் புரிவிக்கலாம்'' என்றான்.

அவ்வாறே இறைவனும் கட்டளையிட்டான். சித்தார்த்தனது பிறந்தநாளன்று, விண்மீன்கள் யாவும் ஒரே நேரத்தில் வானத்தின்கண் ஒருமித்துக் கூடியது போலவும், பகலிலும் எல்லியிலும் வெவ்வேறு பொழுதுகளிலும் பூத்தற்குரிய மலர்கள் யாவும் ஒரே சோலையிலும் பொய்கையிலும் ஒரே பொழுதில் அலர்ந்து விளங்கியது போலவும், கபிலைப் பேரூரிலும் அயலூர்களிலுமுள்ள சாக்கிய மடந்தையர் அனைவரும் அரண்மனையில் வந்து கூடினர். கௌதமிப் பிரஜாவதியே அவர்களை நல்வரவேற்றனள். ஆடியும் பாடியும் யாழ் வாசித்தும் ஓவியம் வரைந்தும் பலவாறாக மடந்தையரெல்லாம் கூடிக்களித்த பின்னர், மாலையில் தத்தம் மாளிகைகளுக்கு மீளுமுன், கொலுக்கூடத்தில் வீற்றிருந்த இளங்கோவிடம் அவர்கள் வந்து, பரிசுகள் பெற்றுச் சென்றனர். சித்தார்த்தனுடைய கட்டிளமையும் பேரழகும் அவனைக்கண்ட பெண்களுக்கெல்லாம்காதலை உண்டு

பண்ணினவெனினும், அவனுடைய ஏற்றமான தோற்றமும் உள்ளத்தில் கள்ளமில்லாத பொதுநோக்கமும் அச்சத்தையும் நாணத்தையும் பெரிதும் விளைத்தன. ஆதலின், ஒவ்வொருத்தியும், அவனை ஏறட்டுப் பார்க்கவும் அஞ்சித் தலைகுனிந்து, நெஞ்சம் பறையடிக்க, பரிசினைப் பெற்றவளவிலே விரைந்துமீண்டு தன் ஆயத்தைச் சேரலாயினள். இன்னணம் பரிசுகளெல்லாம் கொடுத்து முடிந்த பின், அதுகாறும் தனியாய் ஒரு புறத்து நின்ற யசோதரை என்பவள், சித்தார்த்தன் பிறந்த அன்றே அவனுக்கு இரண்டு நாழிகைக்குப் பின் பிறந்து, அன்றே தானும் பதினெட்டாவது ஆண்டு நிறைபவள், அவனுடைய தாய்மாமனும் மாயாதேவியுடன் பிறந்தவனுமான சுப்பிரபுத்தன் என்பவனுடைய மகள், அழகிலும் பெண்களுக்குரிய பயிற்சிகளிலும் சாக்கிய மடந்தையரில் எல்லாம் சிறந்தவள், அவனெதிரே வந்து நின்று, அஞ்சாது நாணாது முகமெடுத்துப் புன்னகை பொலிய அவனை நோக்கி, "அத்தான்! எனக்கும் யாதேனும் ஒரு பரிசில்லையோ?" என்றனள். அவளைக்கண்ட உடனே பொருக்கெனத் தனது இருக்கைவிட்டெழுந்த சித்தார்த்தன், உளமகிழ்ந்து முகமலர்ந்து அவளை எதிர் நோக்கி, "யசோதரா! நமது நாட்டுக்கோர் அணிகலம்போல் விளங்குமவளே! உன்னை யான் கண்டு சில ஆண்டுகள் ஆயினவே! இங்கிருந்த பரிசுகள் யாவும் அளித்தாய்விட்டன. ஆயினும், என் அருமை அம்மான்மகளே! என் பொருட்டு, இதனை நீ ஏற்றுக்கொள்" என்றுரைத்து, தான் அணிந்திருந்த ஒரு முத்துக்கோவையைக் கழற்றி அவளுடைய கழுத்தில்

அணிந்தான். அப்பொழுது அவர்களுடைய கண்கள் தம்முள் களிகொண்டு கலந்தன.

"பருகிய அன்பெனும் பாசத்தால் பிணித்(து)
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்,
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்(கு) இதயம் எய்தினர்."

கௌதமியும் ஆங்கிருந்த பிறரும் நிகழ்ந்ததை வேந்தனுக்கு அறிவிக்க, அவன் மகிழ்வுற்று, சுப்பிரபுத்தனிடம் சென்று, யசோதரையைத் தன் மகனுக்கு மணமகளாக வேண்டினன். சித்தார்த்தன் துறப்பான் என்று அசிதர் கூறியதும், அவனது உள்ளப்போக்கும் சுப்பிரபுத்தனுக்கு நன்கு தெரியும். தன் ஒரே மகள் இளங்கோவை மணப்பதில் அவனுக்கு உவப்பேயெனினும், ஆண்தன்மை யின்றித் துறவில் நாட்டமாகத் திரியும் ஒருவனை அவள் மணக்க அவன் சிறிதும் விரும்பவில்லை. அதனால், அவன் சுத்தோதனனை நோக்கி:—"மன்னவ! என் மருமகனும் இளங்கோவுமாயிருப்பவனை என் மகள் மாலையிடுவது எனக்கு விருப்பமே; எனினும், வேந்தர் மரபினராகும் நம்முள், ஒரு மடந்தையை விரும்புமவன், வில், வாள், குதிரையேற்றம் முதலிய வேத்தியற் பயிற்சிகளில் தன்னோடொத்த பிறரை வென்று தன் முதன்மையை நிலைநாட்டி, அதன் பின்னரே அவளைத் தனக்கு உரியவளாகக் கைப்பிடித்தல் தொன்றுதொட்டு வழக்கமாயிருப்பது, யாவரும் அறிந்ததே. அவ்வண்ணமே சித்தார்த்தனும் செய்யின், இன்றே என் மகளை அவன் அடையலாம். துறவை நாடித் திரியும் ஒருவன் இதனை எப்படி செய்யப்போகிறான்?" என்று விடையளித்தான்.

அதைக்கேட்ட வேந்தன் வெள்கி, அரண்மனைக்கு மீண்டு, கவலையில் ஆழ்ந்திருந்தான். அப்பால் சித்தார்த்தனே தன் தந்தையிடம் சென்று, தனது அம்மான் மகளான யசோதரைமீது தனக்குள்ள வேட்கையை வெளியிட்டு, அவளைத் தனக்கு மணம்புரிவிக்க வேண்டினன். அப்பொழுது வேந்தன், அவள் தந்தை அளித்த விடையை அவனுக்குக்கூற, சித்தார்த்தன், "தந்தையே! அங்ஙனமே ஆகுக. நானும் அப்பயிற்சிகளை அறிவேன். விரைவில் ஒரு மணப்போர்க் கூட்டம் கூட்டுங்கள்; அதில் என்னை வெல்பவர் யசோதரையைப் பெறலாம்" என்றான்.

அவ்வாறே இறைவனது கட்டளையின்படி, கபிலையின் கீழ்ப்பாலுள்ள ஊர்வெளியில், யசோதரைக்காக ஒரு பெரிய மணப்போர்க் கூட்டம் கூடிற்று. பல்லாயிரரான ஆடவரும் மாதர்களும், மணமகளைக் கைப்பிடிக்க விரும்பித் தம்முள் இகலிப் பொருவார்க்கு நடுவில் இடம்விட்டு, சூழ்ந்து குழுமியிருந்தனர். இறைவன் சுத்தோதனனும் இறைவி கௌதமிப் பிரஜாவதியும் அரண்மனைப் பணியாளர்களும் தேர்ச்சித்துணைவர்களும் மற்றைய பெரியோர்களும் அங்கு வந்திருந்தனர். அழகிற்சிறந்த யசோதரை, தனது பணிப்பெண்களும் தோழிகளும் தன்னைப்புடைசூழ, மணவணி கொண்டு, பல்லியங்கள் முழங்க, அவ்விடத்தை வந்தடைந்தாள். நடுவெளியில், சித்தார்த்தனும், தேவதத்தன் நந்தன் அருச்சுனன் ஆனந்தன் முதலிய சாக்கியக் காளையர்களும் மணப்போரை எதிர்நோக்கி நின்றனர்: சிலதர் பலர் வேண்டிய படைகளைத் தாங்கி நின்றனர். விண்மீன்களின் நடுவே நிலாமதி போலவும், ஆம்பற் பொய்கை

யின் நடுவே முளரி போலவும், மாதர் குழாத்தின் நடுவே அழகிற் சிறந்த யசோதரை மணவணி விளங்க வீற்றிருப்பதைக் கண்ணுற்றவுடன், சித்தார்த்தனது உள்ளம் காதலால் கிளர்ந்தோங்கியது. அப்பொழுதும் அவ்விருவர் கண்களும் களிகொண்டு கலந்தன.

அப்பால், சித்தார்த்தான், மற்றை இளைஞரை நோக்கி:—"பாங்கரே, ஒப்புயர்வற்ற இப் பெண்கள் தலைவி ஆண்மையிற் சிறந்தவனுக்கே உரியள்; மற்று யாவனுக்கும் உரியளல்லள். இவள் எனது மாமன் மகள் என்பதனாலேயும் நான் இளங்கோ என்பதனாலேயும், நான் இவளை அடைய விரும்பவில்லை. எனது பேராண்மையினால், நான் இவளை என் உரிமையாகக் கருதுகிறேன்; இதை மறுப்பவர், எவ்வாற்றானும் தமது மேன்மையை இங்கு விளக்கலாகும்" என்றுரைத்தான். அதைக் கேட்ட தேவதத்தன் முதலியோர் தம்முள் சிறிது முறுவலித்தனர். பிறகு, நந்தன், ஆறு கூவொலித்தொலையில் ஒரு குறிப்பை வைத்து, தன் வில்லை வளைத்து அதனை எய்து, பிறரையும் அவ்வாறு செய்யச் சொன்னான். அருச்சுனன் அவ்வண்ணம் எய்தனன். தேவதத்தன், எட்டுக் கூவொலித்தொலைக் கப்பால் ஒரு குறிப்பை வைத்து, அதனை எய்து நிமிர்ந்து நின்று, இளங்கோவை நோக்கி, "தம்பீ! அன்று நான் எய்து வீழ்த்திய ஓதிமப் புள்ளை நீ எடுத்துக்கொண்டது போல் இன்று செய்ய முடியாது. எங்கே, அந்தக் குறிப்பை நீ எய்தால் ஆண்பிள்ளைதான்" என்று, இறுமாப்புடன் கூறினான். சித்தார்த்தன், மறுமொழி யுரையாது, பின்னும் இரண்டு கூவொலித் தொலைக்கு மேலாகப் பத்துக் கூவொலித்தொலைக் கப்பால் கண்ணுக்குப்

புலப்படுவதே அரிதாக ஒரு குறிப்பை வைக்கச் செய்து, சிலதர் உதவிய ஒரு வில்லை வாங்கி வளைத்தான். அவன் இழுத்ததனால் அவ்வில் முறிந்து போயிற்று. பிறகு, அவன், அங்கிருந்தாரை நோக்கி:—"இஃதென்ன, விளையாட்டு வில்லே; காதற் போருக்கு ஏற்றதன்று. சாக்கிய ஆண்பிள்ளைகள் கைக்கொள்ளுதற் கேற்ற வில் ஒன்றும் இல்லையோ?" என்று கேட்டான். முதியோன் ஒருவன்:—"சிங்கபானுவின் வில் ஒன்று, உருக்கினால் செய்தது, கோவிலில் இருக்கின்றது. எனக்கு ஆண்டு தொண்ணூறாகிறதெனினும், எவரும் அதை வளைக்க நான் கண்டதில்லை. இளங்கோ அதை வருவித்து நோக்கலாம்" என்றான். இறைவனுடைய ஏவலின்படி இருவர் சென்று, பண்டைநாளையதான அந்த மிகப் பெரிய வில்லினை எடுத்து வந்தனர். அதைக் கையில் வாங்கிச் சித்தார்த்தன் சிறிது நோக்கிய பின்னர், தன் எதிரிகளைப் பார்த்து: "பாங்கரே! உங்களுடைய விற்கள் இருக்கட்டும்; இதை வளைத்துப் பாரும்" என்றனன். வில்லாண்மையில் மிக்க தேவதத்தனாலுமே அதை நாணேற்ற முடியவில்லை. பிறகு, சித்தார்த்தன், அவ்வில்லைத் தன் கையில் வாங்கிக் கொண்டு, அதையும் தன் எதிரிகளையும் ஒருங்கே தலைகுனிந்து நாணேறச் செய்து நிமிர்ந்து நின்று, அம்பு ஒன்றினை எடுத்து அதில் தொடுத்தான். குறிவைத்திருந்த நெடுந்தொலையையும் அது கண்ணுக்கு நன்கு தெரியாமல் சிறுகிக் காண்பதையும் எண்ணி, அத்தறுவாயில், யசோதரையின் உள்ளம் சிறிது கவன்றது. ஆயினும், அவன் விடுத்த அம்பு அக்குறியின் நடுவே ஊடுருவிப் பாய்ந்து செல்லவே, அனைவரும், "சித்தார்த்தனே வில்லாளிகளிற்

சிறந்தவன்'' என்று கைகொட்டி மகிழ்ந்து கொண்டாடினர்.

அப்பால், தேவதத்தன், தனது வாளையுருவி, ஆறு விரற் பருமையுள்ளதாய் அருகில் நின்ற ஒரு மரத்தை ஒரே வெட்டாக வெட்டி வீழ்த்தினன்; அருச்சுனன் எழுவிரற் பருமையுள்ள மரத்தினை வெட்டினான்; நந்தனோ, ஒன்பது விரல் அளவுள்ளதை வெட்டி விட்டான். பிறகு, சித்தார்த்தன், நந்தன் வெட்டியதுபோன்ற இரண்டு மரங்கள் சேர்ந்து நின்றவற்றைத் தன் வாளையுருவி வெட்டினான். வெட்டிய பின்னும் அவ்விரு மரங்களும் சாயாமல் நிமிர்ந்து நிற்கவே, நந்தன், "வாள் பிழைத்தது" என்று கூவி, நகைத்தான்; யசோதரையின் நெஞ்சமும் திகைத்தது. அப்பொழுது இளங்காற்று வீச, கோளிழைத்த கோவினது கொற்றம்போல, அவ்விரு மரங்களும் துண்டுபட்டுக் குப்புறவிழுந்தன. "சித்தார்த்தனே வாள் உழவிற் சிறந்தவன்'' என்று யாவரும் புகழ்ந்து கொண்டாடினர்.

அதன் பின், மேன்மையான குதிரைகள் கொண்டு வரப்படவே, தேவதத்தன் முதலியோர் அவற்றையேறி நடாத்தினர்; ஆனால் சித்தார்த்தனது கண்டகம் என்னும் குதிரை அவற்றை யெல்லாம் பின்கண்டது. அப்பொழுது அவர்கள்:—"இது புரவியின் மேன்மையால் விளைந்த வெற்றியே யன்றி மற்றில்லை; கண்டகத்தை ஒத்ததோர் பாய்மா எங்களுக்கு மிருப்பின், நாங்களே வெல்வோம். இதுகாறும் ஏறிப்பழகாத கொய்யுளை ஒன்றினைக் கொணரின், அப்பொழுதே அவரவர் உண்மைத் திறன் வெளிப்படும்'' என்றனர். அவ்வாறே மல்லர் சிலர் சென்று, இருண்ட மேனியும் சிவந்து வெருண்ட

விழிகளும் குயவன் திகிரி போன்ற சுழல் நடையுமுள்ள புதியதோர் மாவினை, சங்கிலிகைகளால் கட்டி ஈர்த்து வந்து நிறுத்தினர். சாக்கியக் காளையர் ஒவ்வொருவரும் மும்முறை அந்த இவுளியின் முதுகையடைய முயன்றும் முடியவில்லை. அருச்சுனன் ஒருவன் மட்டும் அதனை மேற்கொண்டு சிறிது நடத்தினன். அதற்குள் அக் குதிரை, தலையைத் திருப்பித் தன்பற்களால் அவனுடைய காலைக் கவ்வி, அவனைக் கீழே இழுத்தெறிந்து விட்டது; மல்லர் ஓடி விலக்கி யிராவிட்டால், அவனை அது கொன்றே யிருக்கும். இதைக் கண்ணுற்ற யாவரும், "இஃது ஒரு கூளியே யன்றிக் குதிரையன்று. இளங்கோன் இதனை அணுகற்க" என்று ஓலமிட்டனர். [1]சித்தார்த்தன், அஃதொன்றையும் மதியாமல், மல்லர் பிடித்திருந்த சங்கிலிகைகளை விடச்செய்து, அந்தக் கொய்யுளையின் உச்சி மயிரைமட்டும் தன்கையில் பிடித்துக்கொண்டு, அதன் முகத்தை அன்புடன் மெல்லத் தடவிக் கொடுத்து, அதன் வலது காதுக்குள் ஏதோ கூறினன். உடனே அந்தப் புரவி கண்டகத்தினும் அமைதியாய் நின்றதாக, அவன், அதையேறி, ஐவகை நடைகளும் நிகழ்த்திக் காட்டினன். அதைக் கண்டார் அனைவரும், தேவதத்தன் முதலியோரும் உள்பட, "சித்தார்த்தனே யாவரினும் சிறந்தோன்; அவனுக்கே யசோதரை உரியள்" என்று மெச்சிப் புகழ்ந்தனர்.

அப்பொழுது சுப்பிரபுத்தன் எழுந்து, அவன் அடக்கியேறிய பாய்மாவின்மேல் கை வைத்துக்கொண்டு அதன் அருகில் புன்னகை பொலிய நின்ற சித்தார்த்தன் முன்னிலையில் தன் மகள் யசோதரையை அழைத்து வந்து நிறுத்தி, "என் அருமை மருகனே! நீயே

ஆணென்று என்பதை விளக்கி விட்டாய். இன்றளவும் என்னவளா யிருந்த இவள், இனி உன் உடைமையே'' என்று உளமகிழ்ந்து கூறினன். உளத்துக்களிப்பு முகத்தே விளங்க நின்ற யசோதரையும், சித்தார்த்தனை வணங்கி, மணத்தொடையலை அவன் கழுத்திலிட்டு, "அத்தான்! எப்பொழுதும் நான் தங்கள் உரிமையே'' என்று கூறி, நாணத்தால் சிறிது தலைசாய்த்து முறுவலித்து, அவன் அருகே நின்றனள். பிறகு நாடெல்லாம் களித்து விழாவயர, அவ்விருவர்க்கும் நல்ல நாளில் முறைப்படி மணவினை நிகழ்ந்தது.

இன்ப நுகர்ச்சிக்கு இணையெடுப்பில்லாத இடங்களான முற்கூறிய மூன்று மாளிகைகளிலும் தமது உள்ளம் உவந்தவாறு வாழும்படி, வேந்தன், தன் மகனையும் மருமகளையும் வேண்டிய பணியாளர்களுடன் இருத்தினன். அதுவுமன்றி, அவ்வாறு சிற்றின்ப நுகர்ச்சியில் மூழ்கிக் கிடக்கும் நாட்களிலே அவனுக்குப் பழைய எண்ணங்கள் உண்டாகாமலும், அவன் வெளியேறி வாழ்க்கைத் துன்புகளை அறியாமலும், அம்மாளிகைகள் இருந்த தோட்டத்தைச் சுற்றிப் பெரியதோர் மதிலை எடுப்பித்து, அதிலுள்ள ஒரே வாயிலுக்குத் திண்ணிய இருப்புக் கதவினை அமைத்து, தன் விடையின்றி எவருமே வெளியேகாவண்ணம் படையாட்களைக் காவல் வைத்தான்; தவிர, அந்தத் தோட்டம் மாளிகைகளுக்குள் பிணி மூப்புக்களால் வருந்தும் எவருமே செல்லக்கூடா தென்றும், ஆங்குள்ளார் எவரேனும் நரை திரை பிணிகளுறின் உடனே வெளியேறி விடவேண்டுமென்றும், பிணி மூப்புச் சாக்காடுகளைப் பற்றி எவரும் பேசவே கூடாதென்றும், அன்றன்று வைகறையில்

இளங்கோ துயிலெழு முன்னர், வாடியும் முதிர்ந்துதிர்ந் தும் நோயுற்றுமுள்ள இலை மலர் கனிகளை அவன் காணு தபடி பொறுக்கி யெடுத்து வெளியாக்கிவிட வேண்டு மென்றும், உள்ளத்துக்கு இன்பத்தை ஊட்டவல்ல ஆடல் பாடல்கள், கூத்துக்கள், இசை ஓவியம் முதலிய பயிற்சிகள், வேறு விளையாட்டு வேடிக்கைகள் முதலியன, கங்குல் பகல் இடைபறுது ஆங்கு நிகழ வேண்டுமென்றும் கட்டளையிட்டான்.

இவ்வண்ணமாக, சித்தார்த்தன், 'சொல் நலம் கட ந்த இன்பச் சுவையை ஓர் வடிவமாக்கி, இன் நலம் தெரிந்த வல்லார் இயற்றிய பாவையன்ன' யசோதரை யின் அளப்பருங் காதல் என்னும் சிறையிலே, அவளு டைய அழகும் பயிற்சியும் மிக்க பாங்கியரும், வீணை வல்ல ஏவலாளரும், ஆக்க வல்ல மடையரும் ஒருங்கு சேர்ந்துதவிய பல்வகை நுகர்ச்சிப் பொருள்களை நுகர் ந்து, தனது பழைய எண்ணங்களைப் பெரும்பாலும் மறந்து, இனிது வாழ்ந்து வந்தான்.

## 8. மூப்பினை அறிதல்.

ஒருமதி ஒருநாள்போலத் தோன்ற இவ்வாறுகப் பத்து ஆண்டுகள் இனிமையாய்க் கழிந்தன; இறுதியில் யசோதரையும் சூல்கொண்டாள். இதனிடையில் சித் தார்த்தனுக்குப் பழைய நினைப்புக்கள் முற்றிலுமே எழா மலிருக்கவில்லை: சில போதுகளில், யசோதரை மெல்ல விசிற அவளுடைய தோளின்மேல் சாய்ந்து அவன் துயிலும்பொழுதுகூட, '' அந்தோ! என் வையமே! உன் துன்பொலி கேட்கின்றது; நான் அறிவேன்; இதோ வருகிறேன்'' என்று கூவிக்கொண்டு, அவன் பொருக்கென விழித்தெழுவான். அப்பொழுது அவ

னுடைய பேரருள் பொலியும் கடவுள்தன்மையான பார்வையைக் கண்டு அஞ்சினவளாய், "அன்பரே! தங்களுக்கு என்ன நோவு?" என்று அவள் கேட்பாள். அவன், தன் உள்ளநிகழ்ச்சியை வெளியிடாது, அவளுடைய கட்புனலைத் துடைத்துவிட்டு, மற்று யாதேனும் கூறி இளநகையாடி, யாழை வாசிக்கச் செய்வான். நாளடைவில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நேரலாயின. இன்னண மிருக்கையில் ஒருநாள், யசோதரையின் பாங்கிகளில் ஒருத்தி, யாழ் நரம்புகளின்மீது தானாகக் காற்றுப் படுவதாலுண்டாகும் ஒலியைக் கேட்கவிரும்பி, திறந்துள்ள ஒரு பலகணி வாயிலில் தன் யாழை வைத்திருந்தாள். பிறகு காற்றுவீச, அந்த யாழின் நரம்புகள் ஒலிக்கலாயின. அவ்வொலி சித்தார்த்தனது காதுகட்குமட்டும் பின்வருமாறு விண்ணோர் பாடுவதுபோலக் கேட்டது:—

மாருதகீதம்.

(1) மாநிலம் எங்கும் வருந்தி அலைந்துறும்
மாருதம் ஓதுவ கேளும்:— கண
மேனும் சுகமாய் இருக்க விரும்பினும்
இல்லை ஒழிவொரு நாளும்!—உங்கள்
வாழ்வாவதும் வளிமாதிரி
தாழாது சஞ்சல மேவுமே—(மாநிலம்)

(2) எங்கிருந் துற்றனம், யாது குறித்துயாம்
இங்கு வந்தேம் எனத் தேரேம்;—உயிர்
எங்கிருந் துற்றது? இனி எங்குச் செல்லுமோ
என்பதை நீவிரும் தேரீர்:—எனின்,
இருவோருமே இருபேய்களில்
திரிவோர்களே,—தெரியீர்சுகம்—(மாநிலம்.)

(3) வையக வாழ்வொரு யாறு, முகிலென
மாறிவரும் பாவையாட்டம்:—இதை
ஐயகோ ! மக்கள் அறியாமலே, மயல்
ஆகி, உறுவர் திண்டாட்டம்,—எங்கள்
வழியாவுமே துயர்மேவுமே,
அழவோ, நகைசெயவோ, சொலும்—(மாநிலம்.)

(4) மாயை மகனே ! நீ ஓய்வொழி வின்றி
மகிழும் சுகங்களும் வம்பே !—உங்கள்
நேயமாம் காதல் நிலைத்திடுமே யெனில்,
நிச்சயமாய், இவை இன்பே ;—ஐயோ !
சுழல் சூறையே என மாறியே
விழையாவுமே ஒழிவாகுமே !—(மாநிலம்.)

(5) இன்னும் உறக்கமோ? உன்வர வெண்ணியே
ஏங்குவ யாவுமே தேராய் !—பழி
துன்னும் உலகு குருடர்கள் போலச்
சுழன்றே இடருறல் பாராய் !—நீயும்
ரக்ஷித்திட வந்தோன் எனில்
பக்ஷத்தொடும் இன்றே எழு—(மாநிலம்.)

(6) ஓதிய போதுமே உற்றது; நீ வினை
யாட்டொழிந் துண்மையை நாடி,—பிறர்
சாதுயர் கண்டெய்து நோதலும், காதலர்
மீதுறு வாஞ்சையும் கூடி,—இனி
உலகும், ஒரு நீயும், மயல்
விலகும் வழி தனை மேவுக—(மாநிலம்.)

(7) கண்ணுக்கினிய நிழல்களோடாடி நீ
களித்துக் கண்ணயர் வாயோ ?—இந்த
மண்ணுக்குள் ஏதும் அறிகிலை, மைந்தனே!
மையலை நீங்கி எழாயோ?—எனப்
பாரும் வளி பரிவாகவே
யாழின் மிசை இசையோதுவ—(மாநிலம்.)

அன்று மாலை சித்தார்த்தன் யசோதரையுடன் தோட்டத்தில் வீற்றிருந்தபோது, சித்திரை என்னும் பாங்கி, நினைத்தவிடம் செல்லவல்ல ஒரு பொறிக் குதிரையையும், நெடுந்தொலைக்கு அப்பாலுள்ள வியப்புக்கள் மிக்க நாடுகளையும், அங்குள்ள வெள்ளை நிற மாந்தரையும், அந்நாட்டிலே கதிரவன் மாலையில் கடலுள் ஆழ்வதையும் பற்றிய பழைய புனையுரை ஒன்றினைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவன் அதைக் கேட்டுப் பெருமூச்செறிந்து, தன் காதலியை நோக்கி:-"யசோதரா! சித்திரை கூறுவது, அந்த யாழின் நரம்புகள் குழறிய பாட்டினை எனக்கு நினைவூட்டுகின்றது. உன் முத்து வடத்தை அவளுக்குப் பரிசாகக் கொடு. அவள் கூறியபடியுள்ள கதிரவன் கடலில் மூழ்கும் நாடுகளையும், நம்மைப் போன்ற உள்ள நிகழ்ச்சிகளை யுடையவராகும் அங்குள்ள மாந்தரையும் நாம் அறியோமே. நாம் அவரை அறிந்தால், அவருக்கு நாம் யாதேனும் உதவி செய்யலாகும் அன்றே. காதலீ! கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிக் கதிரவன் செல்லுவதைக் காணும் தோறும் பல முறை, உன்னுடன் இன்புற்றிருக்கும் பொழுதினுங்கூட, காலையில் எழுகையில் அவன் முதலில் காண்பவர் யாவர், மாலையில் அவன் மறையும் பொழுது காண்பவர் யாவர் என்று, நான் எண்ணி எண்ணி வியப்பதுண்டு. நாம் நேசித்தற்குரிய மாந்தர், நாம் அறியாதார், எத்தனையோ பேர் இருக்கவேவேண்டும். அவரையெல்லாம் என்று நான் சென்று காண்பது? உனது முத்தத்தினாலும் தீராதது ஒன்றே இந்த என் ஏக்கம். சித்திரை கூறிய பொறிக்குதிரை எனக்குக் கிடைக்குமாயின், இந்த என் நாட்டையே அதற்

குப் பதிலாக நான் கொடுத்து விடுவேன். வானில் அதோ பறக்கும் பருந்துக்குள்ள சிறகர் எனக்கிருப்பி னும், எங்கும் நான் சென்று காணலாகும். கூட்டுள் கிளி போலன்றோ நாம் இந்த அரண்மனைக்குள் அடைபட்டு வாழுகிறோம். சித்திரா! உனக்குத் தெரியுமோ, நமது கபிலை மூதூருக்கு வெளியே வேறென்ன இருக்கின் றது?'' என்றான்.

அதற்குச் சித்திரை: "பெரும்! நமது கபிலைக்கப் பால் இந்நாட்டின் குறைப் பகுதியும், தோட்டம், துரவு, காடுகளும் இருக்கின்றன; அப்புறம் மன்னன் பிம்பஸா ரன் நாடு இருக்கிறது; அதற்கப்பால் வேறு நாடுகள் உள; எத்தனையோ எண்ணிறந்த மாந்தர்களும் உளர்'' என்று சொன்னாள்.

உடனே அவன்: "நாளையே நான் தேரேறி வெளிச் சென்று, நமது பேரூரையும் அதன் வெளிப்புறத் தையுமேனும் முதலில் நன்கு காண்பேன். இதை இறை வருக்குத் தெரிவி'' என்றேவினன்.

சுத்தோதனன் அதைக்கேட்டு: "நல்லதே; நாடெல் லாம் சென்று அவன் பார்க்கவேண்டியதுதான். எங்கும் திருவிழா நாட்கள்போல அழகுசெய்து, பிணி மூப்புச் சாக்காடுகளைக் குறிப்பிக்கும் எதுவும் யாருமே அவன் கண்ணுக்கு நாளைப் புலப்படாதபடி இப்பொழுதே பறை அறைக'' என்று கட்டளையிட, அவ்வண்ணமே கபிலை எங்கும் பறையடிக்கப் பட்டது. கபிலை மாக் கள் அனைவரும் தமது வீடுகளையும் தெருக்களையும் தூத்து விளக்கி, கோலங்களிட்டும் வாழை பூகம் முத லியன நட்டும் கொடிகள் கட்டியும் அழகு செய்து,

விலையுயர்ந்த ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முகமலர்ச்சியுடன் இளங்கோவை எதிர்நோக்கி யிருந்தனர்.

சந்தகன் என்னும் தேர்ப்பாகன் தேரோட்ட, சித்தார்த்தன், தனது நண்பன் உதாயியோடு தேரேறி, தெருக்களில் வந்தவுடன், குடிகள் மலர்தூவி வாழ்த்தி, ஆலாத்தியெடுத்து, உள்ளமுவந்து பேரொலி செய்தனர். அவர்களுடைய மகிழ்ச்சியைக் கண்டு அவனும் உவகையுற்று: "இவ்வையக வாழ்க்கை இனிமையாகவே இருக்கின்றது. என்னைக் காணவே இவர்களெல்லாம் இத்துணை மகிழ்வராயின், இப்படிப்பட்ட ஆட்சியானது உள்ளம் உவப்பதொன்றேயாகும். இச்சிறிய வீடுகளில் வாழ்வோரே இவ்வளவு இன்பெய்துவராயின், என்னுடைய மாளிகைகளில் எத்தனையோ பொருள்கள் எனக்கு மிகையாகும் அன்றோ? சந்தகா! இந்த அழகிய வையகத்தை நான் இன்னும் சிறிது பார்ப்பேன்: தேரைக் கபிலையூர்க்குப் புறம்பே நடாத்துக" என்றான். அவ்வாறே, "வாழி! வாழி!" என்று குடிகள் புடைசூழ்ந்து கொண்டாடிப் போற்ற, தேரானது கபிலைமூதூரின் கோட்டை வாயிலைக் கடந்து செல்லும்பொழுது, கிழமே வடிவெடுத்து வந்தாற்போன்ற ஓர் இரவலன், மூப்பினால் உடல் வளைந்து கூனியவன், திரைந்து சுருங்கிய தோலும் எலும்புமேயாக மெலிந்தவன், பீளை வழிந்து குழிந்து ஆழ்ந்து சுருங்கி மங்கலுற்ற கண்களையுடையவன், ஒரு கையில் கோலூன்றி மற்றொருகையால் மூச்சிளைக்கும் விலாப்புறத்தைத் தாங்கிக்கொண்டு தள்ளித் தடுமாறி அரிதில் நடப்பவன், கழிபேருவகை பொங்கி மலைவெள்ளம்போல வரும் அப்பெருங் கூட்

டத்தைக் கண்டு சிறிது தியங்கி, "அறஞ்செய்வாரே! ஒருகை ஐயம் இடுமின்" என்று வழியருகே கூவினன். இருமலினால் மேற்பேச முடியாமல், இருமலின் இடையே, "ஐயம்!" "ஐயம் !" என்று மட்டும் அவன் அரிதில் கூவினன். அதைக்கண்ட சிலர்: "இளங்கோ வருவது உனக்குக் கண் தெரியவில்லையோ? போ, உன் குடிசைக்குள்" என்று அதட்டி, அவனை வழியினின்றும் ஒதுக்கித் தள்ளினர். சித்தார்த்தன் பொருக்கெனத் தேரைவிட்டிழிந்து அவர்களைத் தடுத்து, அக்கிழவனை உற்றுநோக்கி, பிறகு உதாயியைப் பார்த்து:--"உதாயி ! ஓர் ஆளைப் போலவே காணும் இவ்வடிவம் யாது ? இவ்வளவு அச்சத்தைத் தரத்தக்க அருவருப்பான வடிவத்தோடு சில மக்கள் பிறப்பதும் உண்டோ ?" என்று கேட்டான்.

**உதாயி:**—இவன் ஒரு கிழவன்; இவனும் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் உடல்நிமிர்ந்து ஒளிமிக்க கண்களோடு உலாவித் திரிந்தவனே. இதைப்பற்றி நீ ஆராய்வதேன்? நாம் மேற்செல்வோம்; தேரில் ஏறுக.

**சித்தார்த்தன்:**—இல்லை, இஃது எனக்கு விளங்கவில்லை. உதாயி! நீ எப்பொழுதும் இவ்வாறுதான்,— ஒன்றும் நேராகச் சொல்வதில்லை. சந்தகா! நீ சொல்: இவன் ஏன் இப்படியிருக்கிறான்?

**சந்தகன்:**—பெருமானே! தங்கள் நண்பர் கூறியபடி இவன் கிழவனே: மூப்பு என்னும் கள்வன், இவனுடைய வலியையும் மதியையும் திருடிச் சென்று விட்டான். இவனது உயிர்வாழ்க்கையாம் விளக்கில், உடல் வலியாகிய எண்ணெய் இன்மையால், உயிர்த்திரி கருகி எரிகின்றது. மூப்பு இத்தன்மையது.

சித்தார்த்தன்:—ஆனால், இது மற்ற எவர்க்கும் நேருமோ? இவர்கள் யாவர்க்குமே நேருமோ, அல்லது, மிகச்சிலர்க்கே அருமையாய் நேருமோ?

சந்தகன்:—இவன் அளவு நீடித்து உயிரோடிருந்தால், இவர்கள் யாவருமே இப்படியாவர்.

சித்தார்த்தன்:—நானும் உதாயியும் இப்படியாவோமோ? யசோதரை எண்பது ஆண்டுகளிருந்தால், இந்த மூப்பு அவளையும் அடையுமோ? கௌதமி, கங்கா, சித்திரை, இவர்களை அடையுமோ?

சந்தகன்:—ஆம், பெருமானே! நீடுவாழ்வார் யாவரையும் மூப்பு அடையும்.

சித்தார்த்தன்:—"தேரைத் திருப்பு; நான் பார்த்தது போதும்." தன் மாளிகைக்குத் திரும்பியபின், சித்தார்த்தன், கங்குலெல்லாம் கண்மூடாது விழித்துக் கவலையில் ஆழ்ந்திருந்தான்; ஒன்றும் உண்ணவுமில்லை. யசோதரை, அதைக்கண்டு உள்ளம் நொந்து கட்புனல் பெருக்கி, அவனுடைய அடிகளில் பணிந்து, "என் அன்பருக்கு என்மீதும் காதல் இல்லையோ?" என்று கூறி அழுதனள். அதற்குச் சித்தார்த்தன்: "என் தேனே! உன்மீதுள்ள அளப்பருங் காதலினாலே தான், 'அது முடிவுறுமே, நாம் இருவரும் மூப்படைவோமே' என்று நான் ஏங்குகின்றேன். 'அழகழிந்து, வலிதளர்ந்து, உடல்மெலிந்து, காதலை இழப்போமே' என்று வருந்துகின்றேன். இதழோடு இதழ்பூட்டி இன்பம் திளைத்துக்கொண்டே நமது காதலைப் பாதுகாக்கினுங்கூட, மூப்பென்னும் கள்வன் மெல்ல மெல்ல இடையூர்ந்து நுழைந்து, உன் அழகையும் என் காதலையும்

கெடுத்து விடுவேன் என்பது திண்ணம். இன்றே நான் இதை அறிந்தேன். காதலை மூப்புக் கெடுக்காமல் காப்பது எவ்வாறென்றே என் உள்ளம் கவல்கின்றது" என்று சொன்னான்.

உதாயியின் வாயிலாக இந்நிகழ்ச்சிகளைத் தெரிந்த வேந்தன் சுத்தோதனன், அதே கங்குலில் ஏழு தீக்கனவுகளைக் கண்டான். அவை தன் மகனது துறவின் நெருக்கத்தைக் குறிப்பன என்று மறுநாள் கேட்டறிந்து, அவன் வாழும் அரண்மனையைச் சூழ்ந்துள்ள காவலை இரட்டிப்பித்து, அதனுள் நிகழும் இன்பங்களைப் பெருக்கும்படியும் திட்டம் செய்து, கவலை கூர்ந்திருந்தான்.

## 9. பிணி சாக்காடுகளை அறிதல்

சித்தார்த்தனது உள்ளமோ அவ்வின்பங்கள் ஒன்றினும் செல்லவில்லை; மீண்டும் வெளிச் சென்று வையகவாழ்க்கையை உள்ளபடி முழுதும் காணவேண்டும் என்ற வேட்கையே அவனுக்குண்டாயிற்று. ஆகவே, அவன் தன் தந்தைக்குப் பின்வருமாறு செய்தி அனுப்பினான்,—"இறைவ! நமது குடிகளின் வாழ்க்கை நலத்தை நான் உள்ளவாறு காணும்படி விடையருளுக. முன்பு நான் சென்று கண்ட பொழுது, என் மீதுள்ள பேரன்பினால், தீதோன்றுமே என் கண்களுக்குப் புலப்படாவண்ணம் தாங்கள் ஏற்படுத்தியிருந்தீர்கள்; ஆயினும், இவ்வாழ்க்கை, இன்புகளால் மட்டுமே இயைந்ததன்று என்பதை நான் அறிந்துகொண்டேன். தங்கள் மகனும் இந்நாட்டின் இளங்கோவுமாகிய நான், நமது குடிகளின் இன்புகளைப் போலவே துன்புகளையும், வேந்தரல்லாத மக்கள் வாழும் வாழ்க்கையின் பண்பையும், தெரிந்

திருக்க வேண்டும் அன்றோ? ஆதலின், தந்தையே, யாரும் அறியாதபடி நான் நமது காவன் மூதூரைச் சென்று காணும்படி எனக்கு விடையருளுங்கள். நான் காண்பன வற்றால் எனது உள்ளம் மகிழ்ச்சியை அடையாவிடினும், இதுதான் உண்மை என்று தெளிவதனால் அறியாமை நீங்கி, அமைதியை அடையலாகும்.''

இதைக் கேட்ட வேந்தன், "இதுதக்கதே: கண்மூடி பூட்டியுள்ள வல்லூறு, மூடியைக் கழற்றியவுடன் எதைக் கண்டாலும் திடுக்கிடுவதையும், மூடியின்றிச் சிறிது பழகியபின் அச்சமின்றி நன்கு வேட்டையாடு வதையும் போல, இவனும் உள்ளதை உள்ளபடி கண்ட றிந்த பின் நெஞ்சந்தேறி அமைதி அடையலாகும். ஆண்டு முப்பதாகப் போகின்றது; இனி எத்தனை நாள் மூடி மூடி வைத்திருப்பது?'' என்று நினைந்து உள் ளம் தேறி, அவ்வண்ணமே விடையளித்து விட்டான்.

மறு நாள் நடுப்பகலில், ஒரு நாய்கனும் அவனு டைய கணக்கனும், வேந்தனது பொறியாழியைக் காவ லாளர்க்குக் காட்டி விடைபெற்று, அரண்மனைக்கு வெளியே சென்றனர். அவர்கள்தாம் அவ்வாறு மாறு வடிவம்கொண்ட சித்தார்த்தனும் சந்தகனும் என்பதை யாரும் அறியார்.

அரண்மனையை நீங்கிய பின் அவ்விருவரும் கபில பூரினை நோக்கி விரைந்து நடந்தனர். அப்பொழுது சித்தார்த்தன்:—"சந்தகா! உதாயி உண்மையை விரித் துக் கூறுவதில்லை, மறைக்கவே பார்க்கிறான் என்றே அவனை இம்முறை அழைத்து வரவில்லை; இதனால் அவனுக்குச் சிறிது சினமும் உண்டு. நீ யாவற்றையும்

எனக்கு நன்கு காட்டுவதுமன்றி, நான் கேட்கும் வினக்களுக்கும் ஒளியாமல் விடையளித்து, என் ஐயங்களைத் தீர்க்க வேண்டும்'' என்றனன். அதற்குச் சந்தகன், “நம்பீ! நான் அப்படியே செய்வேன்; ஒரு பொழுதும் பொய்பகரேன்; தங்களுடைய கட்டளையைமீறியும் ஒழுகேன். எல்லாம் ஊழின்படி நிகழுவது என்று நம்பும் நான், ஒன்றுக்கும் அஞ்சேன்'' என்று விடை கூறினன்.

இதற்குள் இருவரும் கபிலையூர்க்குள் புகுந்து, ஓவியங்கள் தீட்டிய சுவர்களையும் வெண்ணீறு செம்மண்களால் அழகு செய்யப்பட்ட திண்ணைகளையுமுடைய பெரிய வீடுகள் இருபுறமும் நிமிர்ந்து விளங்க, பல நிறப் பொடிகளால் கோலமிடப் பெற்ற முன்றில்களுடன் பொலியும் அகன்ற தெருக்களையும்; எலம் கிராம்பு தக்கோலம் முதலிய விரைப் பொருள்களையும், பலவகைக் கூலங்களையும், வேறு பண்டங்களையும் குவித்துக் கொண்டு, அவற்றின் நடுவே விற்பவர் கால் நீட்டி வீற்றிருந்து விலைபகர, தமது முன்தானைகளில் பணத்தை முடிந்து வைத்திருக்கும் கொள்வோர், விலையை இறக்கிக் கேட்பதால் விளையும் சொற்போரின் பேரோசையும், கல்லுருளைகள் அமைந்து பெரிய எருதுகளால் இழுக்கப்படும் வண்டிகளை ஓட்டுவோரும், பல்லக்குக்களைச் சுமந்து செல்வோரும் வழியைப் பெற விரும்பி, 'விலகுங்கள்! விலகுங்கள்!' என்று கூவும் பேரொலியும் முழங்கும் ஆவணங்களையும்; ஓர் இடுப்பில் புனற்கலமும் மற்றோர் இடுப்பில் குழந்தையும் தூக்கிக்கொண்டு, கிணறுகளிலிருந்து தண்புனல் மொண்டு செல்லும் இல்லக்கிழத்தியரையும்; ஈக்கள் மொய்க்கும் சிற்

றுண்டிக் கடைகளையும்; ஆடைகளை நெய்தறிகளில் நெய்வோர்களையும்; மா அரைப்போர்களையும்; ஒரே உலையில் ஈட்டியும் மண்வெட்டியும் பழுக்கக்காயும் கொல்லர் உலைகளையும்; தமது கணக்காயனைச் சூழ வீற்றிருந்து சாக்கியப் பிள்ளைகள் நூல்களை ஓதும் பள்ளிகளையும்; பலநிறப்பட்ட சாயத் தொட்டிகளில் தோய்த்தெடுத்த ஈரத் துணிகளைக் கைக்கோளர் உலர வைப்பதையும்; தமது கத்தி வரிசைகள் உராய்ந்து ஒலிக்க, இறுமாப்புற்றவராய்ப் பொருநர் செல்வதையும்; பாம்பாட்டிகள் பாம்பாட்டுவதைச் சூழ்ந்துநின்று நோக்கும் கூட்டங்களையும்; பல்லியங்கள் முழங்க மணவணியுடன் செல்லும் குழுக்களையும்; பொருள் தேடும் பொருட்டுப் பிறநாடு சென்றுள்ள தமது கணவர் விரைந்து மீளுவதை வேண்டியோ, தம் வயிற்றுச்சூல் ஆண்மகவாய்ப் பிறத்தலை வேண்டியோ, நெய் மலர் கனிகள் முதலிய காணிக்கைப் பொருள்களை எடுத்துக் கொண்டு நாணி ஒதுங்கிக் கோவிலுக்குச் செல்லும் மனைவியரையும்; இன்னும் பல காட்சிகளையும் பார்த்துக் கொண்டு, செப்புத் தகடுகளையும் பித்தளைத் தகடுகளையும் ஓயாது புடைக்கும் கம்மாளரின் உறைவிடங்களைக் கடந்து, ஊரின் உட்புறத்தை நீங்கி, உரோகிணி ஆற்றுப் புறத்தை அடைந்தனர்.

அப்பொழுது, "அறவோரே! கை கொடுங்கள்! என்னைச் சிறிது தூக்கி விடுங்கள்!" என்று தாழ்ந்த குரலில் ஒருவன் கூவுவது வழியின் அருகே கேட்டது. சித்தார்த்தன் அந்தப் புறம் திரும்பி நோக்கவே, கொள்ளை நோயினால் தாக்குண்டு, அதன் வலிப்பினால் கீழே விழுந்துவிட்ட ஒருவன், உடலெல்லாம் பதற,

வாய் ஒரு புறமாய் இழுக்க, கண்கள் உள்ளே செருக வெயர்வை பெருக, கை கால்கள் முறுக்குண்டு திருக, பொறுக்க ஒண்ணாத நோவினால் துடிதுடித்துப் புரண்டுகொண் டிருப்பதையும்; மூச்சு விட முடியாமல் தரையின்மேலுள்ள புல்லினைப் பிடித்துக் கொண்டு எழுந்திருக்க முயன்று, மறித்தும் தள்ளாடிக் கீழே விழுவதையும்; இதனிடையே, "ஐயோ! வலி பொறுக்க முடியவில்லையே!" என்று முணங்கி அழுவதையும் கண்ணுற்றான். உடனே அவன் விரைந்தோடிச் சென்று, அந்த நோயாளியை மெல்லத் தூக்கி எடுத்துத் தன் மடிமேல் இருத்தி மார்பிலே சார்த்திக் கொண்டு, அவனை அன்புடன் தடவிக்கொடுத்து, "நீ ஏன் இப்படி வருந்துகின்றாய்? உனக்கு என்ன செய்கின்றது? உன்னால் ஏன் எழுந்திருக்க முடியவில்லை? சந்தகா! இவன் ஏன் இப்படி மூச்சுவிட முடியாமலும் பேச முடியாமலும் வருந்துகின்றான்?" என்று கேட்டான். அதற்குச் சந்தகன்: "இளங்கோமானே! இவனுக்கு ஏதோ கொள்ளைநோய் கண்டிருக்கிறது. அதனால் இவன் உடல் தளர்ந்து, நெக்குவிட்டு, மூட்டுக்கள் எல்லாம் தொய்வுற்று, வலியழிந்து, தடுமாறி இளைப்புற் றிருக்கிறான். அந்நோயின் வலிப்பு இப்பொழுது வந்திருக்கிறது; அதனால்தான் இப்படி வருந்துகிறான். இவனுடைய கண்கள் குருதி செறிந்து சுழலுவதையும், பற்கள் நெறு நெறுப்பதையும், மூச்சு இறுகுவதையும் பாருங்கள்; இவன் நாடிகளி லுள்ள குருதி, இப்பொழுது கொதிப்புண்டு குதித்தோடுகிறது. இன்னும் சிறிது நேரத்தில் எல்லாம் ஒய்ந்துவிடும். பிறகு இந்நோய் மற்றொருவன்மேல் தொத்திக் கொள்ளும். பெரு

மானே! தாங்கள் இவனை இப்படி அணைத்துக்கொள்ள லாகாது; ஒருபோது தங்களையுமே இந்நோய் பற்றிக் கொள்ளும்; இவனைக் கீழே விட்டுவிடுங்கள்'' என்றான்.

சித்தார்த்தன், அங்ஙனம் செய்யாது, நோயாளியை மெல்லத் தடவிக் கொடுத்துக்கொண்டு, மீண்டும் சந்தகனை நோக்கி, "ஆனால், இவனைப்போல் வருந்துவோர் இன்னும் பலர் உளரோ? யானுமே இவ்வாறாகக் கூடுமோ?'' என்று வினவினான்.

சந்தகன்:—பெருமானே! நோய்கள் பலவாம், எல்லா மாந்தர்க்கும் பலவழிகளால் வரும்: புண்கள், கரப்பான்கள், வலிப்புக்கள், காய்ச்சல்கள், விறைப்புவாதங்கள், கொள்ளை நோய்கள், தொழு நோய்கள், கழிச்சல்கள், புனற்கோவைகள், பருக்கள், பிளவைகள், இவை போல்வன பிறந்தோர்க் கெல்லாம் பொதுவே; எவர்க்கும் நேரக்கூடியனவே.

சித்தார்த்தன்:—இவை, தெரியாமல் கரவாக வருமோ?

சந்தகன்:—மறைவாய் ஊர்ந்து வந்து கடிக்கும் நச்சுப்பாம்புபோலவும், ஒளித்துப் பதுங்கியிருந்து பாயும் வேங்கைப்புலிபோலவும், சிலரைத் தாக்கியும் சிலரை நீக்கியும் மேல்விழுந்து கொல்லும் மின்னலைப் போலவும், மக்கள் எதிர்பாராமலே இந்நோய்கள் வருகின்றன.

சித்தார்த்தன்:—ஆயின், மாந்தர் யாவரும் இவை நேரலாம் என்ற அச்சத்தோடேதான் எப்பொழுதும் வாழ்கின்றனரோ?

சந்தகன்:—ஆம், பெருமானே.

சித்தார்த்தன்:—ஒருவனுமே, "இக்கங்குல் நான் மகிழ்ந்து படுத்துறங்கி, நாளைக் காலையில் எழுவேன்" என்று உறுதியாய்ச் சொல்ல முடியாதோ?

சந்தகன்:—முடியாது, பெருமானே. அப்படி உறுதியாய்ச் சொல்வார் எவருமில்லை.

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு."

சித்தார்த்தன்:—மாந்தர் எதிர்பாராமலே இவ்வாறு வரும் நோய்கள் துன்பங்களின் முடிவு, உடல் வலியழிந்து தளர்ந்து, உள்ளம் நொந்து, அப்படியே மூப்பினை எய்துவதா?

சந்தகன்:—அதுவரையில் உயிருடனிருந்தால் மூப்புவரும்.

சித்தார்த்தன்:—ஒருவனால் அந்நோவுகளைப் பொறுக்க முடியாவிட்டாலோ, ஒருவன் அவற்றைப் பொறுத்திருக்க விரும்பாமல் தீர்த்துவிட நினைத்தாலோ, அல்லது, இவனைப்போல, இயன்றமட்டும் பொறுத்துக்கொண்டு, துன்பத்தில் கிடந்துழன்று, நாளுக்கு நாள் மூப்புற்றாலோ, பின்பு முடிவு என்ன?

சந்தகன்:—முடிவு சாவுதான்!

சித்தார்த்தன்:—சாவா?

சந்த ன்:—ஆம், பெருமானே! ஏதோ ஒரு வழியில், ஏதோ ஒரு பொழுதில், உயிருள்ளவை யாவற்றுக்கும் சாவுதான் முடிவு. மூப்படைவார் சிலரே; நோயுற்று வருந்துவார் பலராவர்; எவ்வாறாயினும், நோயற்றாரும் நோயுற்றாரும், மூப்புற்றாரும் இளைஞரும், யாவரும்

சாதற்குரியவரே. அதோ பாருங்கள், செத்தானைச் சாவார் தூக்கி வருகின்றனர்.

சந்தகன் காட்டிய வழியில் சித்தார்த்தன் அண்ணுந்து நோக்க, யாவர்க்கும் முன்பாக ஒருவன் தீச்சட்டியோடு வருவதையும், ஆற்றங்கரையை நோக்கிச் சிலர் அழுது புலம்பிக்கொண்டும், "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூவிக்கொண்டும், ஒரு பாடையைச் சுமந்து விரைந்து வருவதையும் கண்டான். பச்சைக் கொம்புகளினாலும் மூங்கில் பிளவுகளினாலும் பிணைக்கப்பட்ட அந்தப் பாடையின்மீது, ஒரே உரப்பாய் விறைத்ததும், தாடைகள் உள்ளாழ்ந்து வாய் திறந்ததும், கண்கள் உட்குழிந்து மூடியதும், எலும்பும் தோலுமே எஞ்சியவென மெலிந்ததும், வெண்ணீறு செந்தூள் அணியப்பெற்றதுமான ஒரு சவம், கால்கள் முற்புறமாக வைத்துக் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சவத்தைத் தூக்கி வந்து, ஆற்றின் அருகே அடுக்கப்பட்டிருந்த ஈமக்கட்டைகளின்மீது கிடத்தி, அதன்மேலும் கட்டைகளை அடுக்கி மூடினர். பிறகு ஒருவன் தீயைக் கொளுத்தி விடவே, அத்தீயானது, தோலும் மூட்டுக்களும் சடசட என்று வெடிக்க, அந்தச் சவத்தின் தசை மூளைகளைத் தன் நாவுகளினால் சுவையறிந்து உண்பதுபோல வளர்ந்தோங்கிக் கொழுந்துகள் விட்டெரிந்து, இரண்டொரு எலும்புத் துண்டங்களைத் தவிர மற்றெல்லாவற்றையும் சாம்பராக்கிவிட்டது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த சித்தார்த்தன், சந்தகனை நோக்கி, "உயிர் வாழ்வார்க்கெல்லாம் இதுதான் முடிவோ?" என்று கேட்டான். அதற்குச் சந்தகன், "ஆம், பெருமானே! எல்லார்க்கும் இதே முடிவு

தான். அதோ நமது கண்காணப் பிடி சாம்பராகி விட்டவனும், நம்மைப்போலவே உண்டுடுத்துக் கண்டுகளித்து வாழ்ந்து வந்தவனே. அப்பால் ஒருநாள், மலைக் காய்ச்சலோ, இடறி விழுந்ததோ, குடித்த புனலின் குற்றமோ, பாம்பு கடியோ, மற்றொருவன் சினந்து கத்தியினுல் குத்தியதோ, தொண்டையில் மீன் எலும்பு சிக்கிக்கொண்டதோ, மண்டையின்மேல் ஓர் ஓடு விழுந்ததோ, யாதோ ஒரு நிகழ்ச்சியினுல் உயிரை நீங்கிச் சவமாய் விட்டான். செத்தபின்பு, பசி விடாய் ஏது, இன்பு துன்பேது, விருப்பு வெறுப்பேது? இதழ்களில் முத்தமிட்டாலும் ஒன்றுதான், மார்பில் நெருப்பை வைத்தாலும் ஒன்றுதான்; தன் தசை எரிந்து, தீ நாற்றம் வீசுவதும் அவனுக்குத் தெரியாது, அகில்கட்டை எரிந்து நறுமணம் கமழ்வதும் தெரியாது; செத்த பிறகு, நாவில் சுவையில்லை, காதுகளில் ஓசையில்லை, கண்களில் ஒளியில்லை. உற்ருரும் சுற்றமும் அழுது புலம்புவர்; ஏனெனின், உயிர் விளக்குக்கு ஒரு திரிபோலிருந்த அந்த உடலைக்கூட எரித்துவிட வேண்டும்; இன்றேல், அதன் புலால் நாறி, புழுக்களுக்கும் பூச்சிகளுக்கும் விருந்தாகி விடும். மேலோர்க்கும் கீழோர்க்கும், நல்லோர்க்கும் பொல்லோர்க்கும், எல்லோர்க்கும் இது பொதுவே; யாவரும் சாகவேண்டியவரே. பிறகு, மீண்டும் வந்து பிறந்து,—எங்கேயோ, எப்படியோ, யாவரே கண்டார்?—மீண்டும் உயிர் வாழ்ந்து, பிணி மூப்புச் சாக்காடுகளுக்கு மீண்டும் மீண்டும் உள்ளாக வேண்டுமென்று பழைய நூல்கள் கூறுகின்றனவாம். இதுவே மக்களின் பிறப்பு வளையமாகும்.”

இதற்குள் சித்தார்த்தனது கண்கள் புனல் பெருகி விட்டன; நெடுநாளைக்குமுன் தான் கண்டதொன்றை நினைத்துப் பார்த்து முன்னுள்ளதையும் பின்னுள்ளதை யும்பொருத்த முயலுவான் போல, அவன், மேலும் கீழும் மாறி மாறி நோக்குமவனாய், சிறிது நேரம் எண் ணத்தில் ஆழ்ந்திருந்தான். அப்பால், அளப்பரிய பேரரு ளின் மலர்ச்சியும் வரம்பற்ற நம்பிக்கையின் கிளர்ச்சி யும் தன் முகத்தில் பொலிந்து விளங்காநிற்க, அவன், பின்வருமாறு கதறினான்:—

"வையகத்தில் மக்கள் வாழும் வாழ்க்கையிலுள்ள துன்பங்களின் பெருமையும் இன்பங்களின் பொய்ம் மையும் இன்றே எனக்குத் தெரியவந்தன; இப்பொழு தே நான் அவற்றை உணருகிறேன். இன்பமெல்லாம் துன்பத்திலும், இளமைமூப்பிலும், காதல் அதனை இழத் தலிலும், உயிர்வாழ்க்கை சாவிலும், சாவு நம்மால் இப் பொழுது தெரியக்கூடாத பொய்ம்மையான இன்பு களும் பொய்ம்மை யல்லாத துன்புகளும் நிறைந்துள்ள வேறு பிறப்புக்களிலும் முடிகின்றன என்பதை அறியா மல், நானும் இதுகாறும் மயங்கி யிருந்தேன். வையக வாழ்க்கை, என்றும் முடிவின்றி அமைதியாய் ஓடும் ஓர் இன்பவெள்ளம் போலவே தோற்றிற்று. மினு மினுத்துக் குதித்தோடும் இந்த இன்பவெள்ளம், எவ் வளவு விரைந்தோடுகின்றதோ அவ்வளவு விரைவில், யா வற்றையும் பாழாக்கி விழுங்கிவிடும் சாவாகும் கடலையே அடையும் என்பதை, நான் இதுகாறும் அறிந்திலேனே! என்கண்களை மறைத்திருந்த இருள்திரை இன்றே நீங்கி விட்டது. "கடவுளே! கடவுளே!" என்று தொண்டை கிழிய வீணாக ஓலமிட்டு அலறி, ஒரு துணையுமின்றி

வருந்தி உழலும் மற்றெல்லா மக்களையும் போன்ற வனே நானும்! ஆயினும் என்? உதவியே இல்லாமல் இருக்குமா? எனக்கும் இவர்களுக்கும் யாவருக்கும் எங் கேனும் உதவி யிருக்கத்தான் வேண்டும். பொறுக்க முடியாத வருத்தத்தில் மாந்தர் தம்மை நோக்கிக் கதற, அவர்களுக்கு உதவமாட்டாத இக் கடவுளர்களும் மக்களைப் போலவே துணையின்றித் தியங்குகின்றனர் போலும்! நான் கடவுளா யிருந்தால், என்னால் காப் பாற்றக் கூடிய எவ்வுயிரையும் ஒரு சிறிதும் வருந்த விடமாட்டேன். மலரவன் ஒரு வையத்தைப் படைத்து அது வருந்தியுழலும்படி விட்டிருப்பானோ? எல்லா வன் மையும் பொருந்தி யிருந்தும் இவ்வண்ணம் விட்டிருப் பின், அவன் நல்லவன் ஆகான்; எல்லா வன்மையும் இன் றேல், அவன் கடவுள் ஆகான். சந்தகா! நாம் திரும்பு வோம் ,வா; இன்று பார்த்தது போதும்.”

சுத்தோதனன் நிகழ்ந்ததை யெல்லாம் கேள்வி யுற்ற வுடன், இளங்கோ வாழும் அரண்மனையைச் சூழ்ந்து காக்கும் காவலாளரை மும்மடங் காக்கி, பகலோ எல்லியோ யாவராகினும் தான் அறியாமல் வெளிப் போகக்கூடாதென்று கட்டளையுமிட்டு, கவ லையில் ஆழ்ந்திருந்தான்.

## 10. பெருந்துறவு.

இவ்வண்ணம் பிணி மூப்புச் சாக்காடுகளின் பண் பையும் வையக வாழ்க்கையின் நிலையாமையையும் சித் தார்த்தன் அறிந்த பின்னர், மாந்தர் யாது துணையுமின் றிச் செத்துப் பிறந்து கிடந்துழலும் வருத்தங்களுக் காக அருள் வெள்ளம் ஊற்றெடுத்துப் பொங்கும் உள்

ளத்தினனாய், சிற்றின்ப நுகர்ச்சிகளில் வேட்கையற்று, ஓயாக் கவலையுடன் உயிர்வாழ்க்கையைப்பற்றித் தன்னுள்ளே ஆராய்வானாயினன். அந்நாளிலே, யசோதரை ஓர் ஆண் மகவைப் பெற்றாள். அச்செய்தியை முதலில் அறிந்தவுடன், நிலையற்ற வையகவாழ்க்கையில் தன்னைப் பிணித்தற்கு அதனை மற்றொரு பற்றாகவே மதித்து, "உமக்கு மகன் பிறந்தான்" என்று வந்து கூறியவனுக்கு, "மகனோ பிறந்தான்? என் மதியை முழுதும் விழுங்குதற்கான இராகு வன்றோ பிறந்தான்" என்று இருபொருளாக விடையளித்தனனாம். அதனால் அம்மகனுக்கு இராகுலன் என்று பெயரிட்டனராம்.

இங்ஙனம் நிகழுகையில் இளவேனில் வந்தடைய இளங்கோவினது அரண்மனையைச் சூழ்ந்துள்ள பெரிய சோலையிலுள்ள மரங்கள், நன்மணம் வீசும் பன்னிற மலர்களும் கனிகளும் மலிந்து பொலிந்தன. சித்தார்தனது இருபத்தொன்பதாம் பிறந்த நாளான சித்திரைப் பூர்ணிமையும் வந்தடைந்தது. அந்த இன்பமாளிகையில் யசோதரை முதலியோரால் அது மிக்க சிறப்புடன் கொண்டாடப் பட்டது. சித்தார்த்தன் மட்டும் உள்ளங் கவன்று ஒதுங்கியே இருந்தனன். அன்றைப் பொழுது பட,முழுமதி கிளம்பி,உருக்கிய வெள்ளி போன்ற தனது கதிர்களை அந்தச் சோலையிலுள்ள மரங்களின் மேலும், சுட்டசெங்கலால் கட்டப்பட்ட அந்த மாளிகையின் மேலும் வாரி வீசிய போது, மிகவும் அழகாயிருந்தது. அக்கங்குலில் பாட்டும் கூத்தும் விருந்தாட்டும் கழிந்து யாவரும் கண்பட்ட பின்னர், அரண்மனைக் காவலாளர் இடை யிடையே தங்களுள் வினாவிடையாகச் சொல்லிக் கொள்ளும் காவற்குறி மொழிகளைத் தவிர மற்றோர் ஒலி

யுமின்றி அவ்வின்ப வீடெங்கும் அமைதியாயிருந்தது. வெளிக் கூடங்களில் வேலையாளரும், உள்மாடத்தில் யசோதரையின்பாங்கிமாரும்,அன்றுவிழாவயர்ந்தஅலுப்பினால் நன்று உறங்கிக்கொண்டிருந்தனர். அதற்கும் உள்ளான அழகிய பள்ளியறையில், பொற்காற் கட்டில் அமளியின்மீது சித்தார்த்தனும், அதைச் சேர்ந்துள்ள மற்றொரு கட்டிலின்மீது தன் குழந்தையுடன் யசோதரையும் துயின்றுகொண்டிருந்தனர். பொற் சங்கிலிகையில் தொங்கும் விளக்கொன்று நறுமணத்துடன் எரிந்துகொண்டிருந்தது. சாளரங்களின் வழியே வெள்ளிய நிலாக்கற்றையும், சோலையினின்றும் மலர்களின் மணத்தைச் சுமந்து தவழ்ந்துவரும் இளங்காற்றும் மெல்ல நுழைந்துகொண் டிருந்தன.

அப்பொழுது யசோதரை திடுக்கிட்டு விழித்தெழுந்து, அருகில்கிடந்த தன் கணவனது கையை எடுத்து முத்தமிட்டு,கண்களில் புனல்பெருக, "அன்பரே! எழுந்திருங்கள்; என்னுடன் பேசி எனக்கு யாதேனும் ஆறுதல் கூறுங்கள்" என்றாள். சித்தார்த்தன் உடனே விழித்தெழுந்து "என் உயிரே! என்ன? உனக்குற்றது யாது?" என்று வினவ, யசோதரை, "அன்பரே! தாங்கள் ஒருபடியாகவே இருப்பினும், தங்களுடைய பிறந்த நாளை இன்று நான் மகிழ்ந்து கொண்டாடி, இனிமையான எண்ணங்களோடும் கண்ணயர்ந்தேன். ஆனால், தூக்கத்தில் மூன்று கனவுகளைக் கண்டேன். அவற்றை நினைக்க இப்பொழுதும் என் உடல் நடுங்குகின்றது" என்றாள்.

**சித்தார்த்தன்:**—அவை என்ன கனவுகள் தேனே?

யசோதரை:—முதலில், மிகப் பெரியதான ஓர் எருது; விண் மீன்போல் ஒளிரும் சிறந்த பருத்த ஒளிக் கல்லினைத் தன் கொம்புகளின் இடையே உடையது, தெரு வழியே நடந்து கபிலைப்பேரூர்க்கு வெளியே சென்றது. அப்பொழுது, "இவ்விடை யேற்றைத் தடுக் காவிடின் இவ்வூரின் சிறப்பெல்லாம் வெளியே போய் விடும்" என்று ஒரு பேரொலி இந்திரன் கோவிலினின் றும் கேட்டது. ஆனால், அதனைத் தடுப்பார் எவருமே யில்லை. நான் மட்டும் அழுதரற்றிச் சென்று, அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, கோட்டை வாயிலின் கத வைத் தாளிடும்படி சொன்னேன். அதற்குள் அவ் விடையேறு என்னை உதறிக் கீழேதள்ளி விட்டு, வாயிற் கதவினை முறித்தெறிந்து, தன்னைத்தடுக்க முயன்றாரையும் துகைத்துக்கொண்டு, புறம்பே ஓடி விட்டது.

சித்தார்த்தன்:—அப்படிப்பட்ட ஒரு விடையேற் றினை உன்னால் தடுக்க முடியுமோ, என்கண்ணே! பிறகு என்ன நிகழ்ந்தது?

யசோதரை:—அடுத்த கனவில், கண் கவர் வனப் பும் பேரொளியும் வாய்ந்த பெரியோர் நால்வர், விண்ண வர் பலர் புடைசூழ இந்தக்கபிலைக்குள் நுழைந்து, இந்தி ரன் கோவிலை நோக்கி வந்தனர். உடனே அக் கோவிலில் நட்டிருந்த பொற் கொடி கீழே விழ, அஃது இருந்த இடத்தில், அதனினும் பதின் மடங்கு அழகுள்ளதும் சிறந்த பொருள் தரும் வார்த்தைகள் வரையப் பெற் றதுமான ஒரு பெரிய கொடி மேலே கிளம்பிற்று. அப்பொழுது காற்று வீசி அக் கொடிச் சீலையை விரிக்கா

சிறக, அதன் மேல் எழுதியிருந்த அறநெறி மொழி களைப்படித்து அனைவரும் மகிழ்ச்சி கூர்ந்தனர்; வானத்தி னின்றும் அழகாய் மலர் மழையும் பொழிந்தது.

சித்தார்த்தன் :—என் அன்பே! இவை எல்லாம் பார்க்க இனிமையான காட்சிகளே! நீ எதற்காக நடுக்க முற்ருய்?

யசோதரை—அன்பரே! மூன்ருவது கனவையும் கேளுங்கள்: பிறகு, "நேரம் நெருங்கி விட்டது! நேரம் நெருங்கி விட்டது!" என்ற பேரொலி யாவ ரும் அச்சமுறும்படி ஊரெங்கும் முழங்கிற்று. அப்பால், நான் தங்களை இந்த நம்முடைய படுக்கையில் தேடிப் பார்க்க, வெறுந் தலையணையையும் தங்கள் மேலா டையையும் தவிர, தங்களைக் காண வில்லை: நான் அணி ந்திருக்கும் தங்களுடைய முத்தரைக் கச்சையும், நச் சுப் பாம்பாக மாறி, என்னைக் கடிக்க லாயிற்று; எனது காற் சிலம்புகளும் கைக்காப்பு பொற்ருெடிகளும், தறிப் புண்டும் கழன்றும் விழுந்து விட்டன, இப்படுக்கையே திடீரென மண்ணுக்குள் ஆழ்ந்து மறைந்து விட்டது. பிறகு, அந்த எருது நெடுந்தொலையில் உறுமி முக் காரஞ் செய்யும் பேரொலியும், அக்கொடி காற்றில் வீசும் ஓசையும், "நேரம் நெருங்கி விட்டது! நேரம் நெருங்கி விட்டது!" என்று அச்சமுறுத்தும் பேரொலி யுமே முழங்க, நான் நடுநடுங்கி விழித்தேன். என் இறைவ! நான் இறப்பேன், அல்லது, அதனினும் கொடிதாக, தாங்கள் என்னைத் துறப்பீர்கள் என்பதை யன்றி, இக்கனவுகள் வேறு எதைக் குறிக்கும்?

இவ்வாறு கூறி அழும் தனது இன்னுயிர்க் காத லியை, சித்தார்த்தன், அன்பும் ஆர்வமும் நிறைந்த கண்

களோடு இனிது பார்த்து, பின் வருமாறு பரிந்துரைத்தான்:—"என் கண்ணாட்டி! மாறுதலில்லாத அன்பினால் ஆறுதல் உண்டாகுமாயின் நீ வருந்துவதை ஒழி. உன் கனவுகள், ஒருபோது, இனிமேல் வருவனவற்றையே குறிக்கலாகும்; வையகத்து வாழ்வோர் யாரேனும் ஒரு சிறந்த துணையைப் பெறும் நல்ல நேரம் நெருங்கிக் கொண்டிருக்கலாம்; இவை எவ்வாறாயினும், நான் உன்மேல் எப்பொழுதும் மாறாத உழுவல் அன்பு உள்ளவனே என்பதை மட்டும் நீ உறுதியாய்க் கொள். இப்பொழுது சில நாட்களாக, இவ்வையக வாழ்க்கையின் வருத்தங்களை நான் கண்ணுற்று அறிந்தது முதலாக, அவ்வருத்தங்களை நீக்கும் வழியினை நாளும் எண்ணி எண்ணிக் கவலுற்றிருப்பதை நீ அறிகுவையன்றோ. நேரம் உற்றபோது நிகழ்வது நிகழ்ந்தே தீரும். நான் நேரில் அறியாத உயிர்களுக்காக இவ்வாறு கவலைமிக்கு, எனதல்லாத் துயரங்களுக்காக இவ்வளவு உள்ளம் வருந்துவேனானால், என் வாழ்வை இதுகாறும் இனிதாக்கிவந்த இங்குள்ளார் மேலும், யாவரினும் எல்லா வகையிலும் சிறந்தவளும், என் உயிர்நிலை போன்றவளும், என் மகனுக்குத் தாயுமான உன் மேலும் எனக்கு இருக்கக் கூடிய பேரன்பை நீயே நினைத்துப் பார். என் அருமைக் கண்ணாட்டி! என் ஆருயிர்த்தேனே! எல்லாரிடத்திலுமே அன்புள்ளவனாயிருக்கும் நான், உனக்கும் எனக்கும் மற்றென்ன நேர்ந்தாலும், யாவரினும் மேலாக என் உள்ளம் உவக்கும் காதலியான உன்மீது மாறாத அளப்பரிய பேரன்புள்ளவனாயிருக்கிறேன், அவ்வாறே என்றும் இருப்பேன் என்பதையும்; பிறர்படும் பிறவித் துன்புகளுக்காக நான் தேடும்

மருந்தை, மற்றெல்லார் பொருட்டினும் முதன்மையாக உன் பொருட்டுமே தேடுகிறேன் என்பதையும் நீ உறுதியாய் எண்ணு. இதை நன்று நம்பி, நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. இனி நீ தூங்கு; நான் விழித்திருப்பேன்.''

இதைக் கேட்டுச் சிறிது தேறினவளாய், யசோதரை மீண்டும் கண்துயின்றாள். அவ்வாறு துயிலும் தனது காதலியையும் மகனையும் அன்புடன் நோக்கி, சித்தார்த்தன், தனக்குள் பின்வருமாறு நினையலானான்:- "உங்களுக்காக இனி நான் தாழ்ப்பேனாயின், இப்பொய்யான இன்பங்களில் இன்னும் வீணே பொழுது போக்குவேனாயின், உங்களையுள்ளிட்ட இந்த வையகம் உய்யப்போவதில்லை; நான் எதற்காகப் பிறந்தேனோ அப்பேற்றினை நான் பெறப்போவதுமில்லை. நான் ஆட்சியையும் வேண்டேன்; முடியையும் வேண்டேன்; போரிலே பல்லாயிரரைக் கொன்று குவித்துப் பெறும் பொல்லாப் பெருஞ்சீர்த்தியையும் நான் விரும்பவில்லை. மாந்தர்படும் துன்பங்களைக்கண்டு என் உள்ளம் உருகி மறுகுகின்றது. எப்பாடுபட்டேனும், என் உடலை எவ்வாறுவருத்தியேனும் அவற்றை நீக்கும் வழியையே நான் தேடமுயலுவேன்; பெரியோரென்றும் சிறியோரென்றும் பெயர் படைத்து வழங்கும் எத்தனையோ கடவுளர் மாநிலத்திலே கொண்டாடப்படுகின்றனரே: அவரில் ஒருவரையேனும் எவரேனும் கண்டதுண்டோ? தம்மைப் போற்றிப் பணியும் அடியார்க்கு அவர்கள் என்ன உதவி செய்திருக்கின்றனர்? பலவகையான நேர்த்திக் கடன்களை உதவியும், உள்ளம் உருகிப்போற்றிப் பாடியும், மறையுரைகளை ஓதியும், பதறிக்கதறும்ஆடுமாடு சேவல்களை இட்டுக்கொடுத்தும், கோவில்களைக்கட்டியும்,

அடியார்களைவிருந்தூட்டிமகிழ்வித்தும்,"திருமாலே!சிவ பெருமானே! இந்திரனே! சூரியனே!" என்று கூவி ஓல மிட்டும், இந்த மாநிலத்திலே இதுகாறும் மக்கள்பெற்ற நலன் யாது? இப்படிச்செய்ததால், என்னுடன் பிறந் தவரான மாந்தரில் எவராயினும், பிறவித்துன்புகளை யேனும், காதலரைப் பிரிவதையேனும், பிணி மூப்புச் சாக்காடுகளையேனும், எள்ளளவாயினும் நீங்கியதுண் டோ? என்னுடன் பிறந்தவரான மெல்லியலாரில் எவ ரேனும், பட்டினியும் பசியும் கிடந்திளைத்து, மலர்,பால் நெய் முதலியன கொண்டு கடவுளரை வழிபட்டதன் பேறாக, மகப்பெறும் நோவில் சிறிதேனும் குறையப் பெற்றதுண்டோ? கடவுளரில் சிலர் நல்லோராயிருக் கலாம், சிலர் பொல்லோராயிருக்கலாம்; எல்லோருமே, மாந்தர்க்காக இரங்குவோர் இரங்காதோர் அனைவருமே, மக்களைப்போலவே, எவ்வித உதவியையும் செய்ய மாட்டாதவராகவே இருக்கின்றனர். மக்களைப்போலவே கடவுளரும் மாறிமாறிப் பிறந்து வருந்தி அழிபவரே; ஏனெனின், நமது பழைய நூல்கள் கூறுகிறபடி, உயி ரானது எப்பொழுது எதிலிருந்து முதலில் உண்டான தென்பது தெரியாமல் போனாலும்; அது, புல்லாய், பூண்டாய், மரமாய், புழுவாய், பல்லியாய், மீனாய், பற வையாய், விலங்காய், மக்களாய், விண்ணோராய்,மீண்டும் ஏறியபடியே இறங்கிச் சுழன்று வருகின்றது. இந்தப் பொதுத்தன்மையினால் வையகத்திலே உள்ளன எல்லாம் நமக்கு உறவாகின்றன; ஆகவே, மக்களைக் காப்பாற்றி னால் இவ்வையமனைத்தையுமே காப்பாற்றியதாகும். ஆனால், மக்களைக் காப்பாற்றுவது எங்ஙனம்? யாதே னும் எங்கேனும் காப்பாற்றும் வழி இருக்கத்தான்

வேண்டும்! கதிரவனது வெப்பத்தைக் கரந்து வைத்திருக்கும் தீத்தட்டிக் கற்களினின்றும் முதலில் ஒருவன் நெருப்பைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தும்வரை, மாந்தரெல்லாம் குளிரினால் வருந்தி மாண்டனர். ஒருவன் பேசத்தொடங்கி, மிக்க பொறுமையுடன் எழுத்துக்களை அமைக்கும் வரை, எல்லோரும் வாயில் வந்தபடி உளறிக்கொண்டு விலங்குகளைப் போலவே இருந்தனர். ஒருவன் பருத்தியினால் நூலை நூற்றுத் துணியை நெய்யுமட்டும், அனைவரும் தோல்களையும் மரப்பட்டைகளையும் இலை குழைகளையுமே உடுத்துத் திரிந்தனர். இவ்வண்ணமாக மாந்தர் இப்பொழுது பெற்றிருக்கும் நன்மைகள் யாவும் முன்னுள்ள மாந்தர் பல்லாண்டுகளாகத் தேடியுழைத்து வருந்திக் கண்டுபிடித்தனவேயன்றி வேறில்லை. இங்ஙனமிருக்க, எல்லார்க்கும் மேலாக, மன்னர்மன்னனாக, ஆளவேபிறந்தவனும்; பிணி மூப்பு வறுமை நோவு முதலிய பிறவித்துன்புகள் ஒன்றினையுமே அறியாதவனும்; எல்லாவகை இன்பங்களையும் இயற்கையிலே பெற்றவனும்; இன்பச்சுவை தெவிட்டி அலுத்துப்போகாமல், இன்னும் அதில் மிக்க விருப்பத்தை உடையவனும்; நரைதிரைகளால் உடல் தளர்ந்து அழகழிந்து இன்பங்களை நுகரும் வலிகுன்றிப் போகாமல், கட்டிளமையும் ஆண்மையும் பொருந்தித் தன் உள்ளம் உவந்தவிடத்து உவந்தவாறு தடையின்றி இன்பங்களை நுகரவல்ல ஆற்றல் அமைந்தவனும்; தனக்கென்று ஒருகுறையும் ஒரு நோவும் ஒரு கவலும் ஒரு துயரும் இல்லாது, பிறர்க்குள்ள குறை நோவு கவலை துயரங்களுக்காகவே வருந்துபவனுமான என்போன்ற ஒருவன், தனக்குள்ள யாவற்றையுமே மற்ற மாந்தர் பொரு

ட்டுத் துறந்திழந்து, இப்பிறவிநோயின் மருந்தினைத் தேடுவதையே கடைப்பிடியாகக் கொண்டு, தன் வாழ்நாளை அவ்வுழைப்பிலேயே செலவிடுவதா யிருந்தால், ஓய்வொழிவின்றி எங்கும் துருவித்திரியும் அவனுடைய உட்கண்களுக்கு, இப்பிறவிநோயை மாற்றவல்ல பெரிய உண்மையை மறையாநிற்கும் திரை, என்றேனும், யாதேனும் ஒரு புறத்தில் திறக்கவே செய்யும்; இடைவிடாது அலைந்துவருந்தும் அவன் அடிகளுக்கு, அவ்வுண்மைக்குவழி முடிவில் புலப்படாமல் போகாது; இந்த வையகவாழ்க்கையைத் துறந்ததால் வரும் பெரும்பேற்றை அவன் அடையவே செய்வன். ஆளப்பிறந்த நான், என் குடிகளின்மீது எனக்குள்ள பேரன்பினாலும், எனக்குத்தெரிந்தோரும் தெரியாதோருமான இங்விலத்திலே இருந்துவருந்தும் எண்ணிறந்த மாந்தருக்காக என்னுள்ளம் உருகிநைவதனாலும், என் ஆட்சியைத் துறந்து, இப்பொழுது இம்முயற்சியைக் கைக் கொள்வேன். வருந்திப் புலம்பும் வையகமே! உன்பொருட்டே, உன்மீது வாழும் உயிர்த்தொகுதிகளுக் காகவே, என் இளமையையும் ஆட்சியையும் இன்பங்களையும் இனிய வாழ்நாள்களையும் மகிழ்ச்சிக்கு உறைவிடமான இவ்வின்பவீட்டையும் உற்றோர்பெற்றோரையும் துறத்தற்கரிய இளங்காதலனையும் என் இன்னுயிர்க்காதலியையும் நான் இப்பொழுது துறக்கிறேன். என் உயிர்நிலையே போன்ற யசோதரா! இப்படி உன்னைத் துறப்பதால், வையகத்தோடு உன்னையும் நமது அருமைமகனையும் நான் காப்பாற்றலாகும் அன்றோ! ஆதலால், என் காதலீ! என் மகனே! என் தந்தையே! என் குடிகளே! வையமெல்லாம் உய்யும்பொருட்டு இத்தறுவாயில் நான் பிரிவதால்

உண்டாகும் வருத்தத்தை நீங்கள் சிறிது பொறுத்திருக்க வேண்டுகிறேன். நான் தேடுவதைக் கண்டுபிடித்தாலன்றி இனி நான் திரும்பேன்.''

அப்பொழுது, யசோதரை, தூக்கத்தில் கண்கள் நீர்வடியப் பெருமூச்செறிந்து, மீண்டும் அக்கனவைக் கண்டனளென, ''நேரம் நெருங்கிவிட்டது! நேரம் வந்துவிட்டது!'' என்று புலம்பினுள். அதைக்கேட்ட சித்தார்த்தன், பொருக்கெனத் தன் அமளியை விட்டிறங்கி, சாளரத்தின் வழியே வெளிநோக்கி, திங்கள் நண்டின் வீட்டில் விளங்குவதைக் கண்டான். அதுவே புத்தனுவான் துறப்பதற்கு உற்ற தறுவாய் என்று பழைய நூல்கள் கூறுவது உடனே நினைப்புக்கு வர, அவன், 'தான் உள்ளே யிருக்கும்பொழுது தன் வீடு தீப்பற்றிக் கொண்டதென்பதை அறிந்த ஒருவன் அதை நீங்குவதற்கு எவ்வளவு பரபரப்புடன் எழுவானே அவ்வாறே எல்லாவற்றையும் துறந்து வேற்றிடம் செல்லுதற்குத் துணிந்தான்.' மெய்ம்மறந்துறங்கும் தனது இன்னுயிர்க் காதலியை நோக்கி, ''நம்மை இப்பொழுது பிரிப்பதாயினும் உன் வாயில் வரும் சொற்களே வையகம் உய்யும் வழியை விரைந்து நாடிச்செல்ல என்னைத் தூண்டாநின்றன'' என்று எண்ணிக்கொண்டு; தான்இனி என்றுமே படுக்கப்போகாத அந்த இன்ப அமளியை வலம் வந்து மேல் 'இன்ன செய்கிறதென்று தெரியாமல் தியங்கி, அளப்பரிய காதலோடு தன் மனைவியையும் மகனையும் பார்த்துக்கொண்டே வாயிற்படியில் சிறிது பொழுது நின்றுன். நின்றவன், தடுமாறிக்கொண்டிருந்த உள்ளம் தெளியப்பெற்று, ''நாம் இவளுக்கும் இவனுக்கும் மெய் வழியை ஓதலாகும்'' என்று எண்ணிக்கொண்டு புறப்

பட்டான். அவ்வாறு நினைந்து மும்முறை காலெடுத்து வைத்தும் உள்ளம் ஒட்டாமல் திரும்பிவந்து, முடிவில் தன் நெஞ்சத்தை எப்படியோ உறுதிப்படுத்திக் கொண்டு, துணிந்து வெளியே சென்றான்.'

வெளியறையில், தனது வாழ்நாளைப் பத்தாண்டுகளாக இனிக்கச் செய்தவரும், தன் மனைவியின் பாங்கிகருமான கங்கை கோதமி சித்திரை முதலியோர் படுத்துறங்குவதைக் கண்ணுற்று, "என் இனிய தோழிகளே இவர்! இவரை விட்டுப் பிரிவது எனக்கு வருத்தமாகவே யிருக்கிறது. ஆயினும், இப்பொழுது கிடப்பதுபோலவே அழகையும், இளமையையும், இனிமையையும் இழந்து முடிவிலும் இவர் செத்துக்கிடப்பர் என்பதை நினைந்து, இவரைப்பிரிகிறேன். பித்திகைமலர்வாடியபின், அதன் வனப்பும்மணமும்எங்கேபோகின்றன? விளக்கு அவிந்தபின், அதன் ஒளி நாம்காணாமல் எங்கே மறைகின்றது? இவர்களது அன்பினால், இது காறும் துன்பத்தையே அறியாது, இன்பவெள்ளத்திலே திளைத்து, நான் வாழ்ந்து வந்தேன். என் வாழ்நாளெல்லாம் அப்படியே வாழக்கிடைப்பதா யிருப்பினும், இனி, அதை நான் வேண்டேன். துளிர்த்தும் பசத்தும் பழுத்தும் இலை உதிர்த்தும் மாறிமாறி வளர்ந்து, முடிவில் வெட்டி வீழ்க்கப்படும் மரஞ் செடிகளையேபோல, நானும் வாழ விரும்பிலேன். இவர்களில் எவளேனும் விழித்து என் செலவைத் தடுக்காமல், அனைவரும் நன்று உறங்குவாராக" என்று நினைத்துக்கொண்டு, மெல்லெனஅடிபெயர்த்து, மாளிகையின் வெளிப்புறத்தை அடைந்தான்.

பேரருளால் தூண்டப்பட்டு மக்கள்உய்யுமாறு இன்னணம் வெளிப்போந்த இளங்கோவினைக் கண்டு திங்

கள் முன்னினும் ஒளிமிக்கு அழகாய் நிலவு வீசுவது போலவும், விண்மீன்கள் அன்போடும் களிப்போடும் ஒளிர்வன போலவும், இரவிற் குவியும் மலர்களும் அலர, அவற்றின் நறுமணத்தைத் தாங்கிவந்து இளங்காற்று அவனை மகிழ்விப்பது போலவும், வையகமெல்லாம் புதிய தோர் உவகைபூத்து விளங்குவதுபோலவும் தோன்றின.

சித்தார்த்தன், சரேலெனக் குதிரைச் சாலைக்குச் சென்று, சந்தகனைத் துயிலெழுப்பி, தன் குதிரையைக் கொண்டுவரச் சொன்னான். சந்தகன், வியப்புற்று, "பெருமானே! இப்பொழுதோ? கழுதும் கண்படுக்கும் இத்தறுவாயில் எங்கே செல்வீர்கள்?" என்று கேட்டான்.

சித்தார்த்தன் :—சந்தகா! மெல்லப் பேசு. கண்டகத்தை உடனே கொண்டுவா. இந்தப் பொற்சிறையை நீங்கி உண்மையைத் தேடி நான் வெளியேற விரும்புகின்றேன். எல்லா மாந்தர்க்காகவும் நான் தேடிச் செல்வதைக் கண்டுபிடிக்கும்வரை இடைவிடாது உழைப்பேன்.

சந்தகன் :—ஐயோ, இறைவனே! கற்றுணர்ந்த பெரியோர் சிலர், பலநாடுகளை வென்று மன்னர்மன்னராய்த்தாங்கள் புகழுற்றிலங்குவீர்கள் என்று சொன்னது வீணோ? இவ்வளவு பெரிய ஆட்சியைத் துறந்து, இரந்து பிழைக்கவோ செல்வீர்கள்? இன்பங்களால் நிறைந்த இவ்வரண்மனையை நீங்கி, அறிமுக மில்லாத இடங்களிலும் காடுகளிலும் அலையவோ போவீர்கள்?

சித்தார்த்தன் :—இதற்கே நான் பிறந்தேன்; நாடாளுதற்கல்ல. இவ் வையகவாழ்க்கையோ மாறிமாறி அழிவது; நான் விரும்பும் ஆட்சி இதற்கு மேலானது.

சந்தகன் :—பெரும! தாங்கள் இப்படிச் செல்வ தால், எனது இறைவரான தங்கள் தந்தையாரும், தங் களையே தமது உயிர்நிலையாகக் கொண்டு வாழும் மற் றோரும் அடையலாகும் துயரத்தைப் பற்றி நினைத்தீர் களோ? முதலில் அவர்களை ஆறாத துன்பத்தில் ஆழ்த்தி விட்டு, பிறகு அவர்களுக்கு என்ன நன்மையைச் செய் யப் போகிறீர்கள்?

சித்தார்த்தன் —நண்பனே! தன்னயமே கருதி, அன்பினால் விளையும் இன்பங்களுக்காகவே பாராட்டப் படும் அன்பானது மெய்யன்பாகாது. என் உள்ளம் மகிழ்வதினும் மேலாக, இவர்களுக்கே உண்டாகும் உவகையினும் மேலாக, இவர்கள்மீது நான் அன்பு கொண்டிருப்பதால்தான், இவர்களது நிலைத்த நன்மை யையே நாடி, இவர்களையும் பிறரையும் காப்பாற்றும் வழியைத் தேடப் போகிறேன். கண்டகத்தை உடனே கொண்டுவா.'' சந்தகன், மேல் ஒன்றும் பேசாது கண்ட கத்தைக் கொண்டுவந்து நிறுத்த, சித்தார்த்தன், அக் குதிரையின் மினுமினுப்பான கழுத்தைக் தடவிக் கொடு த்து, அதைப்பார்த்து, ''என் அருமைக்கண்டகமே! இப் பொழுது நான் உண்மையைத் தேடி வழிக்கொள்கி றேன்; எனது தேட்டம் எங்கு, என்று, கைகூடுமோ நான் அறியேன்; உண்மையைக் கண்டுபிடிக்கும் வரை ஓரிடமும் நிலையாக நில்லேன் என்பது மட்டும் உறுதி; யார் தடுத்தாலுமே, மேடாயினுமே, பள்ள மாயினுமே ஒன்றையும் மதியாமல், காற்றிலும் கடுமையான விரை வோடு, இக்கங்குலில் நீ என்னைக் கொண்டுசெல்லவேண் டும். இதனால், வையகத்துக் கெல்லாம் உதவியாகும். இப் பெருஞ்செயலின் சீர்த்தி, என்னைப் போலவே

உன்னையும் சேரும். நான் செல்வது மக்கள் பொருட்டு மட்டும் அன்று; வாயில்லாமல் மக்களைப் போலவே வருந்தியுழலும்எண்ணிறந்த உயிர்கள்பொருட்டுமே. அவைகளும் நான்செல்வதால் நலத்தைஅடையும். ஆகையால், என் கண்டகமே, இப்பொழுது என்னைத் தாங்கித் தளராது விரைந்து செல்" என்று கூறிவிட்டு, கண்டகத்தின்மேலேறிக்கொண்டு புறப்பட்டான். ஊழ்வலியோ, அன்று நிகழ்ந்த விருந்தாட்டின் விளைவோ, அரண்மனைக் காவலாளரும் அப்பொழுது அயர்ந்து தூங்கினராக, கதவைத்திறந்து கொண்டு சித்தார்த்தனும் சந்தகனும் வெளியேறி விட்டனர்.

அவர்கள் சிறிதும் இடையே தங்காமல் கங்குலெல்லாம் விரைந்து சென்று, கோலியநாட்டுக்கு அப்பாலுள்ள அநோமநதியின் கரையைப் பொழுதுவிடிய அடைந்தனர். அங்குள்ள பார்க்கவ ரென்னும் துறவியினது இருக்கையின் அருகில் குதிரை தானாகவே நின்று விட்டது. அவ்வாறு துறவிருக்கையின் அருகே தன் குதிரை தானாகவே நின்றமை, தான் இனி ஒழுக வேண்டும் வழியைக் குறிப்பித்ததாகச் சித்தார்த்தன் நினைத்து, உடனே குதிரையை விட்டிழிந்து, அவ்வளவு தொலை தன்னைத் தாங்கி வந்ததற்காகக் கண்டகத்தை மெச்சித் தடவிக்கொடுத்துவிட்டு, தன்னுடைய கழுத்தில் அணிந்திருந்த விலையுயர்ந்த கோவையைக் கழற்றிச் சந்தகனுக்கு இன்சொல்லோடும் நன் கொடையாக அளித்தான். பிறகு, உடைவாளினால் தனது நீண்ட அழகிய முடிமயிரைக் கொய்து, அதனையும், முடியணியையும், உடைவாளையும் சந்தகன் கையில் கொடுத்து: "சந்தகா! இவற்றை என் தந்தையாரான வேந்தரிடம்

சேர்ப்பி. பிறவித்துன்பங்களை நீக்கும் வழியினை நாடி, நான் இல்வாழ்க்கையைத் துறந்து பிரிந்தேன் என்று அறிக்கை செய். உண்மையைக் கண்டுபிடித்து, அப் பேருதவியினால்வையமனைத்தையுமேஎன்னதாக்கி, மன்னரெவராலும்அடையவொண்ணாத பெருஞ்சீர்த்தியோடும் நான் திரும்பிவரும்வரை, என்மீது கொண்டுள்ள காதலை மறந்து விடும்படி நான் வேண்டினேன் என்றும் தெரிவி. மனிதனுக்கு மனிதனையன்றி வேறு துணையோ இல்லை. மக்களுக்காக முடியையும் பெருஞ் செல்வத்தையும் இன்ப வாழ்க்கையையும் காதலையும் காதலியையும் காதலனையும் துறந்து செலலும் என்னைப்போல, இது காறும் எவருமே உண்மையைத் தேடத்துணிந்த வரு மில்லை. ஆகவே, என் அன்பின் மிகுதியினாலேயே பிறவி நோய்க்கு மருந்தினை நான் கண்டு பிடிப்பேன் என்பது திண்ணம். அம்மருந்தைக் கண்டுபிடித்தாலன்றி நான் மீளேன்'' என்று கூறினான்.

சந்தகன், ''பெரும! தாங்கள் இப்பொழுது துறத்தல் தக்கதன்றே'' என்று பின்னும் பலவகையாக மறுத்துப்பேசியும் சித்தார்த்தன் இணங்காமையினால், அவன், முடிவில், ''நானும் உடன் வருவேன்'' என்றான். சித்தார்த்தன் அதற்கும் இசையாமல், இனிய வார்த்தைகளால் அவனைத் தேற்றி, அவன் அன்று தனக்குச் செய்த பேருதவியை மெச்சி, மீண்டும் கண்டகத்தை அன்புடன் தடவிக் கொடுத்து, அதைக் கொண்டு வந்த வழியே மீளும்படி அவனை ஏவினன். ஆகவே, சந்தகன், கட்டளையை மறுத்தற்கஞ்சி, கட்புனல் பெருக, காலோய்ந்து, நெஞ்சம் புழுங்கி, கபிலைமூதூருக்குத் திரும்பினான்.

## 11. உண்மையை ஆராய்ந்து தேடுதல்.

அப்பால் தனக்கு உண்மைவழியை ஓதவல்ல பெரியோரைத் தேடிபடைய விரும்பின சித்தார்த்தன், பிம்பஸாரனது நாட்டைச் சார்ந்த அவ்வாற்றின் அருகேயுள்ள காட்டினை அணுகி, அங்கே கடுநோன்பு புரிந்து கொண்டிருந்த துறவிகள் பலரைக் கண்டான். அவர்கள் உடலை உயிருக்குப் பகையாகக் கருதி, அதனைப் பலவழியாலும் வாட்டி வருத்தி வீடுபெற முயன்றுகொண்டிருந்தனர்: கைகள் உலர்ந்து பட்ட மரத்தின் கொம்புகள் போலாகும் வரை இடைவிடாது அவற்றை உயர்த்திக்கொண்டிருந்தும்; சூம்பிச்சுருங்கும்படி ஒருகாலை மடக்கி ஒரு காலால் நின்றும்; உகிர்கள் கைகளைச்சுற்றியும் ஊடுருவியும் வளரும்வரை விரல்களை மடக்கியும்; கூரிய கற்களின் மேற்கிடந்தும்; முள்ளாணிகள் தைத்த மிதியடிகளைப்பூண்டு நடந்தும்; அதனால் கிழிப்புண்ட தசையை நெருப்பினாலும் முள்ளினாலும் பின்னும் நோவுறுத்தியும்; நரி கழுகுகளுடன் சவங்களைத் தின்று சுடலையில் வதிந்தும்; இலைகாய்களை யன்றி மற்றொன்றும் அருந்தாது பட்டினியிருந்தும்; நாவின் சுவையைக் கெடுக்கநாடிக் கசப்பான சருகுகளையே தின்றும்; தம் உடல்களுக்குத் தாமே இழைத்த துன்பங்களினால், கண்ணிழந்தும், நொண்டி முடமாயும், பலவாறாகக் கொடிய நோன்புபுரிந்து வந்தனர். அவர்களைக் கண்ணுற்ற சித்தார்த்தன், உள்ளம் நொந்து, அவர்களின் தலைவனை நோக்கி, "மிக வருந்தும் பெரியோரே! இந்தவாழ்க்கையிலுள்ள துயரங்கள் போதாமலோ, இன்னும் நீங்களே

உங்களுக்குத் தீங்கிழைத்துக் கொள்கிறீர்கள் ?" என்று வினவினான். அதற்கு அந்த நோற்பவர் தலைவன், "தம்பீ! ஒருவன், சாவினை இன்பமாக மகிழ்ந்து விரும்பும்படியான அளவு தனது உடலினையும் ஐம்புலன்களையும் அடக்கி வருத்துவானாயின், நம்மால் எண்ணுதற்கரிய இன்பங்கள் நிறைந்த விண்ணவருலகை அடைவானென்று பெரியோர் சொல்லியிருக்கின்றனர். அதற்காகவே நாங்கள் இவ்வாறு நோற்கின்றோம்" என்றான். அதைக்கேட்ட சித்தார்த்தன்: "அதோ வானத்தில் பொன்னுடைபோல் அழகாய் மிதக்கும் மஞ்சானது கடலினின்றும் எழுந்து, மழைத்துளிகளாய் மீண்டும் கீழேவிழுந்து, தான் எழுந்த கடலையேசென்றடைவதுபோல,விண்ணவருலகில் இன்பம்திளைப்பாரும், தமது நோன்பின் கூலி முழுதையும் பெற்றானவுடன், மீண்டும் இந்நிலத்தில் பிறத்தற்குரியரே அன்றோ? நாம் விலைக்குக் கொள்வது விரைவில் செலவாய் விடுகிறது போல, இப்பொழுது நீங்கள் வலியத்துன்புற்று வாங்கும் இன்பங்களும் முடிவுறும் அன்றோ? திரும்பியும் நீங்கள் இப்பாரில் பிறக்க நேரும் அன்றோ?" என்று வினவினான்.

துறவி:—வந்தாலும் வரும்; நாங்கள் அறியோம்; கங்குலின்பின் பகலும் குழப்பத்தின்பின் அமைதியும் வருகின்றன: அவ்வண்ணமே, இவ்வுடலைத் தன் போக்குப்படி திரியவிடாமல் பிடித்துக்கட்டி வருத்துதலினால், கடவுளரிடமிருந்து பெரியபேறுகளை அடையலாம் என்றெண்ணி இவ்வாறு செய்கிறோம்.

சித்தார்த்தன் :—எண்ணிறந்த ஆண்டுகள் நிலைத்திருந்தாலும், முடிவில் அப்பேறுகள் அழிவனவே

அன்றோ? நீவிர் பரவும் கடவுளர்கள் என்றும் நிலைத்தவரோ, சொல்லும்.

துறவி:—இல்லை; பிர்ம்மம் ஒன்றே அழியாதது. விண்ணவர் எல்லோரும், மக்களைவிட எவ்வளவோ நீடித்த வாழ்வினரெனினும், முடிபவர்களே.

சித்தார்த்தன்:—நீங்கள் தூய உள்ளத்தினராயும் உறுதிப்பாடுடையவராயும் அஞ்சாத நெஞ்சினராயும் காணுகின்றீர்கள். இவற்றுடன் தெள்ளறிவும் இருந்தால், நிலையற்ற இன்பங்களுக்காக உங்களையே இவ்வளவு துன்புறுத்திக்கொள்ள மாட்டீர்கள். உயிரின் நன்மையையே நாடும் நீங்கள், அதற்கு நிலையாயிருக்கும் உடலை, தான் பெறுதற்குரிய பேற்றை அது தேடியடைவதன் முன், இவ்வாறு வருத்திச் சிதைக்கலாமா? முன்வினை விளைவாக நாம் பெற்று, நமக்கு எவ்வழியிலும் பெரும்பாலும் ஒன்றும் தெரியாமல் நம்மைச் சூழ்ந்து மறைத்துக்கொண்டிருக்கும் இவ்வுடலாகிய வீட்டில் குடியிருக்கின்றோம். இப்படிக் குடியிருக்கும் பொழுது, அறியாமையாகிய இருட்டு நீங்கிப் பேரறிவுச் சுடர் தோன்றும் வரையும், நமக்குக் கிடைத்துள்ள சிற்றறிவாகிய விளக்கைத் தூண்டித் துலக்கி இயன்ற அளவு ஒளி பெரிதாகச் செய்துகொண்டும், ஐம்பொறிச் சாளரங்களின் வழியாகத் தெரியக் கூடியனவற்றைத் தெரிந்து கொண்டும் இருப்பதை விட்டு, வீட்டினுள் இருந்து கொண்டே அதனை இடித்தாற் போல, உடலினுள் இருந்துகொண்டே அதைச் சிதைப்பது எவ்வளவோர் அறிவின்மை!

துறவி:—தம்பீ! நாங்கள் ஏதோ இந்த வழியைப் பிடித்துக் கொண்டு, சாவையே எதிர் பார்த்து, வாழ

நாள் கழித்துக் கொண்டிருக்கிறோம். உனக்கு இதனினும் நல்ல வழிதெரியுமானால், சொல்; இல்லாவிட்டால், உன் வழியே நீ போ. வேண்டுமாயின், அதோ தெரியும் பாண்டரமலைக் குகையில் அராளராம முனிவர் இருக்கிறார்; அவர் பேர்பெற்றவர்; அவரைக் கேட்டுப்பார்.”

பிறகு, சித்தார்த்தன், அந்நோன்பிகளை நீங்கி, மலர்கள், தமது நிறம் மென்மை மணம் அழகு ஒன்றினையும் கெடுத்துக்கொள்ளாமல், துன்பத்தையும் உணராமல், கதிரவனது ஒளிமுகம் பார்த்து மகிழ்ந்து வாழ்வதையும்; மரங்கள், விதையினின்றும் முளைத்துப் பழம் உதவும் வரை, பனி மழை வெயில்களை உவந்தேற்று வானத்தைத் துளைத்துக்கொண்டு மேற்கிளம்பி வளர்ந்தோங்கி, காற்றில் ஆடி மகிழ்ந்து பேரொலிசெய்து வாழ்வதையும்; புள் விலங்குகள், தமக்கு இயற்கையிலே கிடைப்பனவற்றை வெறுத்து வேறு பெரிய பேறுகளை விரும்பித் துன்புறாமல், உள்ளதைக் கொண்டு மகிழ்ந்து, பாடி ஆடி வாழ்வதையும்; இவை யாவற்றினும் அறிவிற் சிறந்த மக்கள் மட்டும், அவ்வறிவினால் மற்ற உயிர்களைத் தமக்குக் கீழ்ப்படுத்தித் துன்புறுத்திக் கொல்வதுமன்றி, தாமுமே வீணில் வருந்துவதையும் எண்ணியாராய்ந்து கொண்டு, பாண்டர மலையை நோக்கி நடந்தான். மாலையில் அம்மலையை அடைந்து, ஆங்கிருந்த அராளராம முனிவரைக்கண்டு வணங்கி, பிறவித்துன்புகளின் மருந்தினைத் தனக்குக் கூறும்படி, அவரை வேண்டினான். அம்முனிவர், அவனுக்கு யோக நெறியைக் கற்பிக்க, அவன், அதன்படி ஒழுகத் தொடங்கினான். துறவிகளைப்போல் துவராடை உடுத்து, இரந்து வந்த ஊணை ஒருபோது உண்டு, மழை காற்று வெயில் பனி ஒன்றையும் கருதா

மல், கங்குல் பகல் என்றும் எண்ணுமல், புல்லாந்தரையில் களைத்துப் படுத்துறங்கும் சிறிது பொழுதைத் தவிர மற்றநேரத்தை யெல்லாம் ஐம்புலன்களை யொடுக்கி உள்நோக்கிச் செய்யும் ஆராய்ச்சியில் கழித்து வந்தான். அவ்வாறு அவன் யோகத்தில் ஆழ்ந்திருக்கும்பொழுது, அணில்கள் அவன் மேலேறி விளையாடும்; புருக்கள் அவன் அருகே ஐயக்கலத்திலுள்ள உணவைக் கொத்திச் செல்லும்; எல்லியில், நரிகள் சூழ்ந்து திரிந்து ஊளையிடும்; அடுத்த காட்டில், புலிகள் உறுமும்; அவனே, ஒன்றையும் உணராதவனுய் உள்நோக்கத்தில் ஆழ்ந்திருப்பான். கானல் பறக்கும் நண்பகலில் வெயிலில் உட்கார்ந்து, பொழுதின் செலவையும் ஓராமல், நடுக் கங்குல் வரையில், வையக வாழ்க்கையின் துன்பங்களையும் மக்களது உள்ளப் போக்குக்களையும் பற்றி எண்ணி யெண்ணி ஆராய்ந்து கொண்டிருப்பான். அப்பால், சிறிது நேரமே மண்ணிற் படுத்துறங்கி, கருக்கலில் துயில் நீங்கி, தனது குகையின்முன் உள்ள ஒரு பாறையின்மேல் நின்று, பேரன்பு ஒழுகும் கண்களுடன், இப்பாரினையே நோக்கிக்கொண்டிருப்பான். கிழக்கு வெளுக்கத் தனது பொன்னிறமான ஒளியினுல் யாவற்றையும் அழகு செய்து கொண்டு கதிரவன் புறப்படவே, சித்தார்த்தன், புனலாடித் தன் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, அக்குன்றின் அருகிலுள்ள ஊரைநோக்கி ஊணிரக்கச் செல்வான். அவனுடைய ஏற்றமான தோற்றத்தையும், அருள் பொழியும் விழிகளையும், உடல் வனப்பையும் இளமையையும் கண்டோர், உவந்து வந்து ஐயமிடுவர்; ஐயக்கலமும் விரைவில் நிரம்பிவிடும். ஐயம் உதவினேர்க்கு இன் சொல்வழங்கி நன்றி கூறி

விட்டு, தன் குகைக்கு மீண்டு, அராளராமருடன் அவ் வுணவைப் பகுத்துண்டு, அவரோடு அளவளாவியும், பெரும்பான்மையும் யோகவழிகளிற் பயின்றும், நேரத் தைச் செலவிட்டு வருவான். இது நிற்க:

இளங்கோனையும் சந்தகனையும் கண்டகத்தையும் காலையில்காணுமல், கபிலைமூதூர் குழப்பமுற்றது. எல் லோரும் திகைத்து வருந்தி எங்கும் தேடுவாராயினர். அப்பொழுது குதிரையுடன் அழுதுகொண்டு சென்ற சந்தகன்,நிகழ்ந்தவற்றை அவர்களுக்குத்தெரிவித்தான். அவற்றைக் கேட்ட எல்லோரும் துயர்க்கடலில் ஆழ்ந் தார்கள். தன் மகன் துறந்தானென்பதை அறிந்த மஹாப்பிரஜாவதி கௌதமி, 'பெருங் காற்றால் தாக் குண்ட இளவாழை போலக் கைகால் முதலிய உறுப்புக் கள் சோர்ந்து உணர்வழிந்து சிறிது பொழுது கீழே விழுந்து கிடந்து, பின்பு ஒருவாறு உணர்ச்சியுற்று எழுந்து, மிகவும் பெரு மூச்செறிந்து கொண்டு, "அந் தோ! என் அருமைமகனே! இருண்டு வலப்புறத்தே சரிந்து தூய்மையையுடையதாய் அழகிதாகி விளங்கிக் கட்டுண்ணுத போது தரையைத் தொட்டும் கட்டிய போது முடிபோன்று திரண்டும் மினுமினுப்பாகவிருந்த அந்தக் குடுமி குறைக்கப்பட்டுப் புல்லிற்கிடக்கின்றதே; ஆ! அந்தத் திரண்ட தோள்கள், அந்தச் சிங்கநடை, ஆனேற்றின் கண்கள் போன்ற அந்தக்கண்கள், மினுமினுப்பான பொன் போல் ஒளியை வீசி விளங் கும் அந்தமேனி, அந்தக்கண்ணகல்மார்பு முதலிய வற்றை யுடையாய், நீ துன்பத்திற்கிடமாகிய காட் டிற் சென்றனையே! தூய்மையிலும் நிறத்திலும் மென் மையிலும் அல்லிமலர் போன்ற அந்த அடிகள்

கற்களாலும் முட்களாலும் கிழிக்கப்படுகின்றனவே! ஆ! அவ்வடிகள் அத்துன்பத்தை எவ்வாறு பொறுக்கும்? காவலுள்ள மன்னர்மாளிகையிற் பிறந்து, இனிதுவளர்க்கப்பெற்று, மிகவும் மெல்லிய ஆடையை யுடுத்து, சிறந்த நறும்புனலிலாடி, இனிய அறுசுவையையுடைய நால்வகை அடிசிலுமுண்டு விளங்கிய நீ, இப்பொழுது தாக்கி விறைக்கச் செய்யும் குளிர்காற்றில் அடிபட்டுப் பட்டினியுற்றுப் பனிக்குள்ளாகி வருந்துகின்றனையே! மிக்க வெப்ப நேரத்திலும் மிக்க தட்பநேரத்திலும் இளைப்பாறுமிடம் உனக்கு அங்கே எவ்வாறு கிடைக்கும்?'' என்று தன் பிள்ளையை நினைந்து நினைந்து புலம்பி விம்மி ஆற்றொணுதவளாய் மீண்டும் நிலத்திலே விழுந்து கிடந்தாள். ஏவல் மகளிர் அவளை யெடுத்துத் தாங்கிக் கட்புனலைத் துடைத்துத் தேற்றுவாராயினர்.'

தனது ஆருயிர்க் காதலனை இழந்த யசோதரை பட்ட துயரத்தை யாவரே கூறவல்லார்? இவ்வாறு நேருமென்பதை முன்னமே அறிந்தவனாயினும், வேந்தன் சுத்தோதனனும் அளப்பரிய வருத்தத்தை அடைந்தான். அப்பொழுது வேந்தனது புரோகிதன் அவனைத் தேற்றி, "நான் சென்று சித்தார்த்தனை அழைத்து வருகின்றேன்'' என்று கூறி, சூழ்ச்சித் துணைவன் ஒருவனுடன் புறப்பட்டான். அவ்விருவரும் பலவிடங்களில் தேடியலைந்து, கடைசியில் அராளராமரின் நோன்புப் பள்ளியை அடைந்து, சித்தார்த்தனைக் கண்டு, வேந்தனும் பிறரும் அவனது பிரிவாற்றுதவராய்ப் படும் பெருந்துயரத்தை எடுத்துரைத்து, தம்முடன் கபிலைக்கு மீளும்படி அவனை வருந்தியழைத்தனர். சித்தார்த்தன், வையகவாழ்க்கையிலுள்ள

இன்பங்களெல்லாம் பொய்யாகவும், நிலைத்தஇன்பத்தைப்பெறுவதே தன் கருத்தாகவும்இருத்தலால், அது கைகூடினலன்றித் தான் மீளுவதில்லை என்று ஒரே பிடியாய் மறுத்துவிட்டான். ஆகவே, அவ்விருவரும் வருத்தத்தோடு திரும்பிச் சென்றனர்.

நெடுநாள்களாக யோகமுறைகளில் பயின்றும், அதனல் தான் தேடும் பொருளைச் சிறிதும் அணுகுவதாகச் சித்தார்த்தனுக்குத் தோற்றுததால், உண்மையை வேறு வழிகளில் நாட அவன் விரும்பினுன். இங்ஙனமிருக்கையில் ஒருநாள், ஐயக்கலத்துடன் காலையில் அவன் ஊரைநோக்கிச் செல்லுகையில், இடையர் இருவர் திரளான ஆடுகளை ஒட்டிக்கொண்டு போவதைக் கண்டான். அந்த ஆட்டுமந்தையில், ஒரு பெண்ணுட்டின் இரண்டு குட்டிகளில் ஒன்று நொண்டியாயிருந்தது. நலல குட்டி முன்னே தள்ளியோட, நொண்டிக் குட்டி பின்னேதங்க, தாயாடு, அதற்கும் இதற்குமாக முன்னும் பின்னும் ஓடியோடித் தியங்கிக் கொண்டிருந்தது. இதைக்கண்ட சித்தார்த்தன், "தாயே நீ வருந்த வேண்டாம். நீ போகிற இடத்துக்கு உன் குட்டியை நான் தூக்கிக்கொண்டு வருகிறேன். அக்குன்றத்திலிருக்கும் துறவிகளோடிருந்து வையத்தின் வருத்தங்களை வறிதே பார்த்துக்கொண்டிருப்பதைவிட, யாதாயினும் ஓர் உயிரின் வருத்தத்தைத் தீர்ப்பதே மேலாகும்" என்று கூறி, நொண்டிக்குட்டியைத் தூக்கித் தன் தோளின் மேல் போட்டுக்கொண்டு, தாயாடு மகிழ்ந்து தன்பின்னைத்துவர, அவ்வாடுகளுடன் சென்றுன். பின்பு அவன் இடையரைப்பார்த்து, "நண்பரே! வழக்கம்போல் மாலையில் மேய்புலம் நீங்கி வீடுதிரும்புவதை விட்டு, இன்று

180104 சென்னை 600

காலேயே ஆடுகளை ஊருக்குத் திருப்புவதேன்?" என்று கேட்டான்.

அதற்கு அவ்விடையர், "எங்கள் வேந்தர் இன்று செய்கிற வேள்விக்கு இந்த இருநூறு ஆடுகளையும் ஓட்டிக்கொண்டு போகிறோம்" என்று விடை யளித்தனர்.

சித்தார்த்தன், "ஆனால் நானும் அந்த வேள்விக்கு வருகிறேன்" என்றுரைத்து, அவர்களுடன், பிம்பஸாரனது தலையூராகிய ராஜகிருகத்துக்குச் சென்றான். அங்ஙனம் செல்லும் வழியில் கிருசாகௌதமி எனபவள் வந்து அவனை வணங்கி, "பெருமானே! என் ஒரே மகன், சின்னஞ்சிறு குழந்தை, செடி மறைவில் நேற்றுப் பாம்புடன் விளையாடிக்கொண் டிருந்தபொழுது, கீழே துவண்டு விழுந்து, நிறமாறி, பாலும் குடியாமல் கிடந்தான். அவனைக் கண்ட சிலர், "பாம்பு கடித்துவிட்டது; இவன் செத்தான்" என்றனர். என் ஒரே குழந்தையை இழக்க முடியாமல், நான் அவனைத் தங்களிடம் தூக்கிக்கொண்டு வந்து, அதற்கு யாதேனும் மருந்துதவும்படி இரந்தேன். தாங்கள் என்மீது பேரருள் சுரந்து, "இது காறும் எவருமே இறவாத ஒரு வீட்டிலிருந்து ஒரு பலம் கடுகு வாங்கி வந்தால் உன் குழந்தையைப் பிழைப்பித்துத் தருகிறேன்" என்றீர்கள். அப்படியே என் குழந்தையை எடுத்துச் சென்று, நான் வீடு வீடாய்க் கேட்டேன். பலர் என் துயரத்தைக் கண்டிரங்கி ஏராளமான கடுகை உதவ வந்தனர். 'உங்கள் வீட்டில் யாரேனும் இறந்ததுண்டோ?' என்று நான் அவர்களைக் கேட்க, அவர்கள் என்னைப் பார்த்து நகைத்து, 'இப்படி கேட்க நீ என்ன மதி இழந்தனையோ? இருப்போர் சிலர், இறந்தோர் பல

ராவர். இருப்பவரும் இறப்பவரே' என்றனர். எந்த வீட்டில் சென்று கேட்டாலும், தந்தையிறந்தான் தாயிறந்தாள் அண்ணனிறந்தான் தம்பியிறந்தான் தமக்கையிறந்தாள் தங்கையிறந்தாள் கணவனிறந்தான் மனைவியிறந்தாள் மகனிறந்தான் மகளிறந்தாள் என்று கூறினரே யன்றி, இறப்பில்லா வீடு ஒன்றையும் காணேன். என் பிள்ளையுமே இறந்து விட்டான் போலும்! இனி நான் என் செய்வது?" என்று உருக்கமுடன் சொன்னாள். சித்தார்த்தன், அவளை அன்புடன் நோக்கி, "தாயே! நேற்றே உன் மகனும் உன் தோளின் மீது இறந்து கிடந்தான். சாக்காட்டினால் வையகம் முழுவதும் உன்னுடன் வருந்துவதை இன்றே நீ அறிந்தாய். அதை உனக்கு அறிவுறுத்துதற் பொருட்டே நான் அவ்வாறு ஏவினேன். புல்தரைகள் பூஞ்சோலைகள் புனலோடைகள் வழியாக இதோ இந்த ஆடுகளைச் சாவிற்கு ஓட்டிக் கொண்டு போவது போலவே, ஊழானது, நிலையற்ற வாழ்க்கை யின்பங்களின் வழியாக மக்களையும் சாவிற்கு ஓட்டிக்கொண்டு போகின்றது. அதைத்தடுக்கும் வழியையே நானும் தேடிக் கொண்டிருக்கிறேன். என் உயிரைக் கொடுப்பதால் உன் துயரத்தை நீக்கமுடியுமானால், இப்பொழுதே கொடுப்பேன். நீ இனிச் சென்று உன் குழந்தையைப் புதை" என்றான். அப்பால், சித்தார்த்தன், ஆட்டுக் குட்டியைச் சுமந்து கொண்டு அவன் செல்வதைக் கண்டவரெல்லாம் திகைத்து வியப்படைய, இடையருடன் நடந்து சென்று, பிம்பஸாரனது வேள்விச்சாலையை அடைந்தான். அங்கே வேந்தன் பிம்பஸாரன் மறையுரைகளை ஓதும் மறையவர் நடுவே நின்று கொண்டிருந்தான். அகிற்கட்டை நெய் முதலிய

வற்ருல் வளர்ப்புண்ட வேள்வித்தீ ஓங்கியுயர்ந்து பெரிதாய் மண்டியெரிய, இதற்கு முன் கொல்லப்பட்ட ஆடுகளின் செம்புனலானது ஒரு சிறிய வாய்க்காலாக அதைச் சுற்றி ஓடிக்கொண் டிருந்தது. நாணற் புல்லினுல் கட்டப்பட்ட ஒரு பெரிய வெள்ளாடு, இட்டுக்கொடுக்கும் தறுவாயில் கீழே கிடந்தது. வேள்வியாளன் ஒருவன் அதன் கழுத்தின்மேல் கத்தியை வைத்துக்கொண்டு பின்வருமாறு கூறினுன்: "எல்லாம் வல்ல விண்ணவர்களே! இதுகாறும் பிம்பஸாரமன்னனுல்கொடுக்கப்பட்ட கொடைகளெல்லாவற்றினும் சிறந்ததாக இது கொடுக்கப்படுகிறது: இதன் குருதி வெளிப்பாய்வதைக் கண்டும், இதன் கொழுத்த ஊன் வேள்வித்தீயில் வாடும்போது உண்டாகும் நறுமணத்தைஉட்கொண்டும் நீங்கள்உளம் மகிழ்வீர்களாக! வேந்தனது தீவினைகள்யாவும் இவ்வெள்ளாட்டின் தலையில் சுமத்தப்படுவதாக! இது தீயில் எரிவதால் அவனுடைய தீவினைகள் எரிந்தனபோல அழிவுறட்டும்! இதோ நான் வெட்டுகிறேன்."

அப்பொழுது சித்தார்த்தன், "மன்னவா! இவன் இதைக் கொல்லவேண்டாம்" என்று .சொல்லி, அவ்வாட்டின்கட்டுக்களை அவிழ்த்துவிட்டான். அருளே உருவெடுத்தாற்போலவும் கடவுளே வெளிப்பட்டாற்போலவும் விளங்கிய அவனைக் கண்டோர் அனைவரும் தாமறியாமலே வியப்புற்று நின்றனரேயன்றி,அவன் செய்ததை எவரும் தடுக்க முயலவில்லை. அப்பால் அவன், வேந்தனையும் மற்ருேர்களையும் நோக்கி, உயிரின் பண்பையும் கொல்லாமையின் சிறப்பையும் குறித்துப் பின் வருமாறு பேசலானுன், "காவலனே! அந்தணர்களே! எவருமே உயிரை வாங்கிவிடலாம், ஆனல் .ஒருவராலும் அதை

மீண்டும் கொடுக்க முடியாது என்பதையும்; உயிர்படை த்துள்ளன யாவும், மிகத்தாழ்ந்த சிற்றுயிர்களுங்கூட, தமது உயிரின்மீது அளப்பரிய பற்றுள்ளனவாய், எப்படியாயினும் அதைக் காப்பாற்ற முயலுவதையும், நீங்கள் அறியீர் போலும். மெலிந்தார்க்கு உதவி செய் யும் அருள் ஒருவனுக்கு உள்ள விடத்து, உயிர்வாழ்தலி னும் பெரிய பேறில்லை: அருளே, வலியார் வாழ்க்கையினை மேம்படுத்துவது. தம்மீது அருள் சுரந்து இரக்கமுறும் படி கடவுளரைப் பணிந்து வேண்டும் மக்கள், இவ்வாடு கள் போன்ற வாயில்லா உயிர்களுக்கெல்லாம் தாமே கடவுளரைப் போலிருந்தும், சிறிதும் இரக்கமின்றி இவற்றைக் கொல்லத் துணிதல் எவ்வாறு பொருந்தும்? குடிக்கப் பாலையும் உடுக்கச் சிம்புளியையும் உதவி நம்மை நம்பி வாழ்வனவும், தம்மைக் கொல்லும் கத்தி யைப் பிடித்திருக்கும் கையையும் நக்கும் பேதைமை வாய்ந்தனவுமான இவ்வாடு போன்ற உயிர்களைக் கொலை செய்தல் எவ்வளவு இழுக்காகும்! புழு முதல் விண்ணவர் இறுதியாகவுள்ள உயிர்களனைத்தும் ஒன்றோ டொன்று உறவுடையனவே அன்றோ? வையகத்திலே மக்களாய் வாழ்ந்து இறந்தவரின் ஆவிகள், வினைவலி யினால், மீண்டும் விலங்கு புள்ளினங்களில் பிறக்கக் கூடு மென்று பழைய நூல்கள் கூறுகின்றனவே. அங்ஙன மாயின், இவ்வாறு இவற்றைக் கொல்லுதல், அப்படிப் பட்ட ஆவிகளின் மேற் செலவை நாமாகத் தடை செய்வதாகுமே. பிறவுயிரின் குருதியினால் தனது தீவினை யைக் கழுவிவிடலாமென்றும், பிறவுயிர்களை இட்டுக்கொ டுப்பதால் கடவுளர்களில் நல்லோரை மகிழ்வித்தும் பொல்லோரின் உதவியைப் பெற்றும் தான் நற்பயன்

அடையலாமென்றும் ஒருவன் எண்ணுதல் முற்றும் தவறாகும்.

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று."

நினைப்பினாலும் பேச்சினாலும் செயலினாலும் ஒருவன் இயற்றும் நன்மை தீமைகளின் விளைவுகளாக, படிக்குப் படி, இம்மியும் ஏற்றம் குறைவின்றி, முறையே விளையும் இன்ப துன்பங்களை, அவனே நுகர வேண்டும் என்பது வாழ்க்கையில் விலக்கொணா முடிவாதலினால், தான் செய்யும் தீவினையில் ஓர் எள்ளளவையேனும், வாயில்லாத குற்றமற்ற மற்றோர் உயிரின்மீது எவனாலும் சுமத்த முடியாது. தன்வினை தன்னையே சுடும். நம்மில் ஒவ்வொருவனுக்கும் நேருவன யாவும் அவனவனது முன் வினை விளைவுகளேயாம். அந்தோ! இயல்பாகவே துன்பங்கள் மலிந்துள்ள இந்த வாழ்க்கையில், கொல்லாமையைக் கைப்பற்றி எல்லா உயிர்கள் மீதும் அருள் வாய்ந்து மக்கள் மட்டும் நேசமாய் ஒழுகுவாரானால், இந்த மாநிலம் எவ்வளவு அமைதியாயும் அழகாயும் விளங்கும்!"

இவ்வண்ணமாகச் சித்தார்த்தன் அருள் மழை பொழிவது போலப் பரிந்து பேசியதைக் கேட்ட வேந்தன் பிம்பஸாரன், நல்லறிவுற்று, அவனைப் போற்றிப் பணிந்தனன்; வேள்வியாளருமே வெள்கித் தலைகுனிந்து, குருதிக் கறையுற்ற தமது கைகளை ஆடையால் மறைத்துக் கொண்டு, வேள்வித்தீயை அவித்து விட்டனர். மற்றை நாள், அந்த நாட்டிலே யாருமே எதன் பொருட்டுமே ஒன்றையும் கொல்லக்கூடாது என்னும் கட்டளை வேந்தனது ஏவலினால் முரசறையப்பட்டது.

பிறகு, பிம்பஸாரன், தன்னுடனிருந்து, தன் மகளை மணந்து, தன் நாட்டினை ஆளும்படி சித்தார்த்தனை வேண்டினான். அதைக் கேட்ட சித்தார்த்தன், புன்னகை பொலிய மன்னவனைப் பார்த்து, "வேந்தே! இவையெல்லாம் எனக்கு இருந்தன. உண்மையைத் தேடியே அவற்றைத் துறந்து வந்திருக்கிறேன்; இன்னும் தேடிக் கொண்டிருக்கிறேன். உண்மையைக் கண்டு பிடித்த பிறகு, நண்பனே, நான் மீண்டும் இங்கு வந்து உனக்கும் அதைக் கூறுவேன்" என்றுரைத்து விடை பெற்றுக் கொண்டு அப்பாற் சென்றான்.

## 12. உண்மையைத் தேளிதல்.

அப்பால், சித்தார்த்தன், அராளராமர் ஓதிய யோக நெறியில் நலனொன்றும் காணாமல், வேறு பேரறிஞரை நாடியும், தானாகவே மூளை வியர்க்க ஊன்றி ஆராய்ந்து பார்த்தும், காடுகளில் திரிந்து வந்தான். சில போதுகளில், ஊருட் சென்று ஊண் இரப்பதையும் பொழுதின் செலவினையும் மறந்து, ஒரே நிலையாய் ஆராய்ச்சியில் உட்கார்ந்து விடுவான். பிறகு, தன் ஐயக்கலம் வறிதாயிருப்பதைக் கண்டு, மரங்களின் கீழ் உதிர்ந்து கிடக்கும் காய் கனிகளைப் பொறுக்கித் தின்று பசி தீர்வான். இவ்வாறு பல நாள்களாக வருந்திய அவனது உடல், வலியிழந்து அழகழிந்து மெலிவடைந்து வாடிச்சோர்வுற்றது. ஆடிக்காற்றில் பறக்கும் ஒரு சருகானது, இளவேனிலில் தான் முதலில் பொன்போல் துளிர்த்தபோதிருந்த நிலைமையிலிருந்து எவ்வளவு மாறுபட்டுக் காணுமோ, அவ்வளவு, தான் துறக்குமுன்னிருந்த நிலைமையினின்றும் அவன் இப்பொழுது வேறுபட்டுத் தோற்றினான். அராளராமரை நீங்கிய பின்னர் உருத்திரகர் என்னும்

துறவியை அடைந்து, அவர் கூறிய வழியில் முயன்றொழுகலானான். அந்நெறியிலும் நலனைக் காணாமல், கயைக்கு அருகுள்ள உருவேலா என்னும் காட்டை யடைந்து, அங்கிருந்த கௌண்டிந்யகுலபுத்திரர், தசபலகாசியபர், பாஷ்பர், அசுவஜித், பத்திரர் என்னும் ஐந்து துறவிகளுடன் கூடி, அவர்கள் ஓதியவாறு அருநோன்பு புரியலானான். அயிலுதலும் துயிலுதலுமின்றி அவ்வண்ணம் கடுநோன்பு புரிகையில் ஒரு நாள், இளைப்பினால் உணர்வழிந்து கீழே விழுந்துவிட்டான். அந்தக் காட்டிலே ஆடுகளை மேய்த்து வந்த ஆயர் சிறுவன் ஒருவன், செத்தவன்போல அவன் வெயிலில் கிடப்பதைக் கண்டு, செடிகுழைகளைப் பறித்து வந்து அவனுடைய முகத்துக்கு நிழல் செய்யும்படி தலையருகே நட்டு, அவனைத்தொட அஞ்சினவனாய், ஒரு வெள்ளாட்டின் மடியினின்றும் நாலுபீரை அவன் இதழ்களினூடே பிதுக்கினான். அப்பொழுது சித்தார்த்தன் விழித்தெழுந்து,நிகழ்ந்ததைஉணர்ந்து,அச்சிறுவனைநோக்கி, "தம்பீ! நீ குடிக்கும் கலத்தில் எனக்குச் சிறிது பால்கொடு" என்று வேண்டினன். ஆயர்சிறுவன், "பெருமானே! நான் சூத்திரனாயிற்றே. என்னுடைய கலத்தை அடிகள் தீண்டலுமாகாதே" என்றான். அதைக் கேட்ட சித்தார்த்தன், "தம்பீ! பசி விடாய் முதலிய வேட்கைகளும் இரக்கமும் எல்லா உயிர்களுக்கும் பொதுவே; இதனால் மாந்தர் எல்லாம் உறவினரே; எல்லாரிடத்தும் ஒரே நிறமாகக் காணும் குருதியில் மரபு வேற்றுமையில்லை; சிலர்க்கு உப்புக்கரித்தும் சிலர்க்கு இனித்தும் இருப்பதாகக் கட்புனலிலும் மரபு வேற்றுமையைக் காண்பதில்லை; நெற்றியில் பிறவிக்குறியுடனாவது, மார்பில் முந்நூலோடாவது பிறப்பாரு மில்லை. எல்லா உயிர்கள்

மீதும் செந்தண்மை பூண்டு நல்வழியில் ஒழுகும் அற வோரே அந்தணமேலோராவர்; அங்ஙன மொழுகாது தீங்கிழைப்போரே கீழோராவர். தம்பீ! என் விடாய்க் குச் சிறிது பால் கொடு. நான் தேடும் உண்மையைக் கண்டுபிடித்த பின் உனக்கும் நன்மையுண்டாகும்" என்று கூற, இடைப்பையன் மகிழ்ந்து பாலை உதவி னான்.

அந்தப் பாலைக் குடித்துச் சிறிது களைப்பாறின வனாய்ச் சித்தார்த்தன் வீற்றிருக்கையில், பாடற் பொது மகளிர் சிலர் அவ்வழியே ஊர் நோக்கிச் சென்றனர். அவர்களில் ஒருத்தி பின்வரும் பாட்டைப் பாடிக் கொண்டே சென்றாள்:—

"வீணையைச் சீராக மீட்டு:—மிகத்
தூக்கி முறுக்கில் தொலைந்திடும் தந்தி,
தொய்யில் ஒலிக்கவே செய்யா:—அன்றித்
தோகையே, துல்லிய மாகவே மீட்டின்
சொல்லரும் நாதம் தொனிக்கும்:—பின்பு,
தோழி! உன்பாட்டும் சுகமாய் இனிக்கும்:—
வீணையைச் சீராக மீட்டு."

சிறிது தொலையில் செடி மறைவில் வீற்றிருந்த சித்தார்த்தனை அந்தப்பெண்கள் பார்க்கவில்லை; ஆனால், அந்தப் பாட்டைச் செவியுற்ற சித்தார்த்தன் பின் வருமாறு நினைக்கலானான். "ஆம், உண்மைதான். என் உடலாகிய இந்த யாழின் நரம்புகளை நான் தூக்கியே முறுக்கிவிட்டேன்; அதனால் இது தொலைவுறும் தறு வாயில் இருக்கிறது. இளைப்பினால் என் கண்கள் இருண்டு எனக்குச் சோர்வு உண்டாகிறது; என் மூளைவலியும் உடல் வலியும் குன்றிவிட்டன. இன்னும் சிலநாள் இப்படி யிருந்தால் நான் செத்தே போவேன்; மக்களையெல்

லாம் காப்பாற்ற வேண்டுமென்று நான் கொண்டிருந்த பேரவாவும் என்னுடன் தொலைந்து போகும். இனி இது கூடாது." பிறகு சித்தார்த்தன் தனக்குக் கிடைத்த உணவை முன்போல் உண்ணத் தொடங்கினான். அதைக் கண்ட முனிவர் ஐவரும், நோன்பு தவறியவனாக அவனை இகழ்ந்து, அவனுடைய பழக்கத்தை விட்டு, அவ்விடம் நீங்கினர்.

அதன்பின், சித்தார்த்தன், அந்தக் காட்டில் ஓடும் பல்குனி ஆற்றின்கரையை ஒரு நாள் அடைந்து, வழக்கம்போல் உள்நோக்கத்துடன்வீற்றிருந்து, பிறவித்துன்புகளையும், அவற்றை விலக்கும் வழிகளையும்பற்றி ஊன்றி ஆராய்ச்சி செய்யலானான். அவ்வாறு ஆராய்ச்சியில் அமர்ந்தவன், மற்று யாவற்றையும் மறந்து, ஊண் உறக்கமின்றி, இருபத்தெட்டு நாட்கள் அதேநிலையில் இருந்துவிட்டான். அந்த ஆராய்ச்சியில்தான் உண்மை ஒருவாறு அவனுக்குத் துலங்கியது. இருபத் தொன்பதாவது நாள் காலையில்தான் அவன் வெளிநினைவுற்று விழித்தான். இது நிற்க:

உருவேலா என்னும் காட்டையடுத்த சேநானி என்னும் ஊரில் ஆயர் தலைவன் ஒருவனிருந்தான். அவன் பெயர் பலன் என்பர். அவனுக்கு ஒரே மகள்; அவள் பெயர் ஸுஜாதை. அவளுக்கு நெடுநாளாய்க்குழந்தையில்லை. ஆகவே, அவள் தனக்குக் குழந்தை உண்டாகும்படி, தான் வழிபடு கடவுளை வேண்டிக்கொண்டாள். பிறகு அவளுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதனால் அவள் உள்ளமகிழ்ந்து, தன் நேர்த்திக்கடனைச் செலுத்துதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து கொண்டு, உருவேலாவில் பல்குனியாற்றின் கரைமேலுள்ள அரசமரத்தின்

அடியைத் தூத்து விளக்கிக் கோலம் மலர்கள் முதலிய வற்றால் அழகுசெய்யும்படி, தன் பணிப்பெண் இராதை யென்பாளைக் காலையில் அனுப்பினாள். அதன்பொருட்டு அங்கு வந்த இராதை, கண்மூடி வீற்றிருந்த சித் தார்த்தனைக் கண்ணுற்று, முல்லைக்கடவுளே எதிர்ப் பட்டதாக நினைந்து மகிழ்ந்து, தன் தலைவியிடம் சென்று கூறினாள். தனது வழிபடு கடவுளின்மீது உழுவ லன்புடையவளான ஸுஜாதை அதைக்கேட்டு மகிழ் வுற்று, யாதும் ஐயப்பாடின்றி, தன் குழந்தையையும், பொற்கிண்ணத்திலே தான் வருந்திச் சமைத்து வைத் திருந்த பாலடிசிலையும் எடுத்துக்கொண்டு, தன் பணிப் பெண்ணுடன் விரைந்து வந்தாள். இவ்விருவரும் ஆங் கடைந்தபொழுது சித்தார்த்தனும் கண்களை விழித் தான். ஸுஜாதை, அவனை அடி பணிந்து, "பெருமானே! அடிகள் இப்படி நேரில் தோன்றி அடியாட்குக் காட்சி கொடுத்தது எனது நல்வினைப்பேறேயாம். நான் நேர்ந்து கொண்டபடியே இந்தப் பாலடிசிலைச் சமைத்துப் பொற் கிண்ணத்தில் கொண்டுவந்திருக்கிறேன். அடிகள் ஊண் செய்தருள வேண்டும்" என்று கூறி, அக்கிண்ணத்தை அவன்முன் வைத்துவிட்டு, ஒருபுறமாய் ஒதுங்கி நின் றாள். சித்தார்த்தன், அவள் கண்டு மகிழ, இன்சுவைத் தான அந்த அடிசிலை உண்டு, இளைப்பாறி, ஒளிமிக்கு விளங்கினான். ஸுஜாதை மீண்டும் நேரில் வந்து அடி பணிந்து, "அடியாள் இட்ட உணவு பெருமானுக்கு ஏற்றதோ?" என்று அன்புடன் வினவினாள்.

அப்பொழுது, சித்தார்த்தன், "நீ கொண்டுவந்தது என்ன?" என்றுகேட்டான். ஸுஜாதை: "பெருமானே! நெடு நாளாகப் பிள்ளைப்பேறின்றி வருந்தி, அடிகளின்

பேரருளால் இந்த மகனைப் பெற்றெடுத்தேன். இதற்காக நேர்ந்துகொண்டவாறு பொற்கிண்ணத்தில் பாலடிசில் கொண்டுவந்தேன். அடிகள் நேரில் வந்து உண்டருளும் பெரும் பேற்றையும் பெற்றேன். நூறு ஈற்றுக்களின் பாலினல் ஐம்பது வெள்ளை ஆன்களை வளர்த்து, அவற்றின் பாலினல் இருபத்தைந்து ஆன்களை வளர்த்து, அவற்றின் பாலினல் பன்னிரண்டு ஆன்களைவளர்த்து. அவற்றின் பாலினல் ஒப்புயுர்வற்ற ஆறு சிறந்த ஆன்களை வளர்த்து அவற்றின் பாலில், இதுகாறும் பயிரிடப்படாத புதுநிலத்தில் உழுது விதைத்து விளைந்த முத்துச்சம்பா அரிசியில் ஒவ்வொன்ருகப் பொறுக்கி எடுத்த அரிசியை, வெள்ளிக் கலத்தில் நறுமணச் சம்பாரங்களுடன் சமைத்ததே நான் கொண்டுவந்த அடிசில்; சிறிதும் தவருமல் மெய்யன்புடன் இதைச் செய்தேன். இனி, அடிகள் இந்தக்குழந்தையின்மீது கண்ணேட்டம் செய்தருள வேண்டும்'' என்றுரைத்துத் தன் குழந்தையை அவன் தாள்களின் கீழ் வைத்தாள்.

சித்தார்த்தன், குழந்தையை வாழ்த்திவிட்டு, அவளைப் பார்த்து, "தாயே! நல்ல தறுவாயில் நீ எனக்கு உதவினே. நான்கடவுளல்ல; உன்னைப்போன்றஒருவனே. இதுகாறும் இளங்கோவாக இருந்து, இப்பொழுது ஆறு ஆண்டுகளாக இல்வாழ்க்கையைத் துறந்து, உண்மையைத் தேடி, உயிர் வாழ்க்கையை மூடிக்கொண்டிருக்கும் அறியாமையாகிய இருளை நீக்கவல்ல பேரறிவாகிய ஒளியினைநாடித் திரிந்துகொண்டிருக்கிறேன். இப்பொழுதுதான் அவ்வொளி என் கண்ணுக்குச் சிறிது புலப்பட்டது; ஆனல், நீண்ட பட்டினியினல், அதைக்

கதுவமாட்டாமல், என்கண்கள் இருண்டுமயங்கின. அந்தத் தறுவாயில் நீ வந்து பாலடிசிலையூட்டிப் பேருதவி செய்தனை. இனி நான் உண்மையைக் கண்டுபிடித்துவிடுவேன். தாயே! உன் வாழ்க்கை உனக்கு இனிமையாயும் அமைதியாயும் இருக்கிறதா?'' என்று கேட்டான். ஸுஜாதை, “ஆண்டவனே! அடியாள் உள்ளம் மிகச் சிறிது: ஒரு பெரிய வயலை நனைத்துப் பண்படுத்தப் பெரு மழை வேண்டும்; சிறிய தும்பைப்பூவை நிரப்ப ஒருதுளி போதுமன்றோ. என் கணவரது முகமலர்ச்சியும் என் குழந்தையின் இளநகையும், என் வீட்டையும் வாழ்க்கையையும் மகிழ்விக்கின்றன. காலையில் எழுந்து கடவுளரை வழிபட்டு, குல்லைமேடையை வணங்கி, பணியாளரை அவரவர்க்குரிய பணிகளில் புகச் செய்வதும்; பகலில் என் கணவரை அமுதூட்டி, அருகில் விசிறி நின்று உறங்குவிப்பதும், கங்குலில் அவருக்குவேண்டிய பணியாரங்களை உதவி, கோவிலில்தொழுது, என் தோழிகளுடன் அளவளாவி, பிறகு நானும் அயர்ந்து துயில்வதுமாக, இல்லற வேலைகளிலே என் வாழ்நாட்கள் இனிது கழிகின்றன. என்னையும் என் கணவரையும் கரையேற்றவல்ல இந்தப் பிள்ளையையும் பெற்ற பிறகு, நான் ஒரு கவலையும் அறியேன். நல்ல விதைகளிலிருந்து நல்ல கனிகளும், நச்சு விதைகளினின்றும் நச்சுக் கனிகளும் விளைவதுபோல, நமது வாழ்நாட்களில் கூட, கொடுமையினால் பகைவரும் இனிமையினால் நேசரும் உண்டாவதை நாம் காண்கின்றோம். ஆகையால், நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமைவிதைத்தால் தீமைவிளையும் என்பது ஐயமின்றி விளங்குகிறது. தலையில்எழுத்தின்படி இந்தமாநிலத்தை நாம் நீங்கும்பொழுது, நாம் போகுமிடத்திலும்

இப்படியே தானிருக்கும் அன்ருே. ஒரு நெல்லினின் றும் நூறுநெற்களையுடைய ஒரு கதிர் உண்டாவது போல, ஒரு நன்மையினின்றும் பெருநன்மைகள் பல விளையலாகும். பெருமானே! இந்த உயிர்வாழ்க்கையிலே பொறுத்தற்கரிய துன்பங்கள் பல இருக்கின்றன என் பதை நான் அறிவேன்: இந்த என் குழந்தை இறக்கு மாயின் என் நெஞ்சம் பிளந்து நானுமே இறக்கலாகும்; இறப்பதே எனக்கு உவப்பாகும்; ஏனெனின், என்குழ ந்தையுடன் நானும் விண்ணவர்நாட்டை அடைந்து, என் கணவரது வரவை எதிர்பார்க்கலாகும். ஆனல், அவர் எனக்குமுன் இறப்பதாயிருந்தால், உளமகிழ்ந்து உடன் கட்டையேறி, என் உயிரைத்துறப்பேன். அதனல் அவ ருக்கும் எனக்கும் பெரும்பேறுகள் கிடைக்குமென்று முன்ஞேர் கூறியுள்ளார். அப்பெரியோரினும் அடியாள் அறிவுமிக்கவள் அன்றே. ஆகையால் நான் ஒன்றையும் அஞ்சவில்லை; என் வாழ்நாளும் இனிமையாய்க் கழி கிறது. இவ்வாறின்றி, வருத்தமும் வறுமையும் துன்ப மும் நிறைந்து எத்தனையோ பேர் மடிகின்றனர் என் பதை நான் மறக்கவில்லை. அவர்களில் யாரையேனும் கண்டால், என்னல் இயன்றமட்டும் உதவிசெய்கிறேன். அவர்கள்மீது கண்ணேடும்படி முப்பொழுதும் கடவுளை வேண்டுகிறேன்'' என்று விடை கூறினள்.

இதைக்கேட்ட சித்தார்த்தன், "தாயே! உன் சிற்றறிவு யான் இதுகாறும் கண்டு பழகிய எல்லா முதி யோர் பேரறிவிலும் நன்ருகவே விளங்குகின்றது. நன் மையையும் கடமையையும் பற்றி உனக்குத் தெரிந்த வழியில் ஒழுக முயன்று, நீ அமைதியையும் மகிழ்ச்சி யையும் பெறுவாயாக. உன்னைப் போன்ற மென்மலர்

கள், தாழ்வான அமைதியான நிழலிலேதான், நன்கு அலருவ; உச்சி வெயிலுக் கொப்பான உண்மையின் பேரொளியை அவை தாங்கமாட்டா; பின் பிறவிகளிலே தாம் அவ்வொளியை அவை பெறக்கூடும். என்னை வணங்கிய உன்னை நான் வணங்குகின்றேன். தன் உள்ளத்துள்ள அன்பினால் தூண்டப்பட்டு வழியையறிந்து தன் கூட்டினையடையும் புறுவைப் போல, அறியாமலே அறிந்துள்ள உன்னைக்கண்டு, துயருறும் மக்கள் நல்வழியை அடைவரென்று உறுதியாய் எண்ணலாம். உன் உள்ளம் எப்பொழுதும் மகிழ்வையே அடைவதாகுக. உன் எண்ணம் நிறைவெய்தியதுபோல, நான் தேடுவதையும் நான் அடையும்படி நீ வேண்டிக்கொள்" என்றுரைத்தான்.

ஸுஜாதை, "அப்படியே ஆகுக!" என்றுகூறிப் போய் விட்டாள்,

அப்பால், சித்தார்த்தன், அந்தப் பாலடிசிலினால் இளைப்பு நீங்கினவனாய், அருகில்நின்றஅரச (போதி)மரத்தின் கீழிருந்து மீண்டும் உள்நோக்கிஆராயத் தொடங்கினான். அன்று அவனுடைய முப்பத்தைந்தாவது பிறந்த நாள்; புதன்கிழமை; வைகாசிப் பூர்ணிமை. அன்றுஎல்லியில்தான் அவன் முற்றும் உணர்ந்து தெளிவுற்றது. எல்லியின் முதல் காலில், பழம்பிறப்பின் நிலைமைகளும்; இரண்டாம் காலில், இப்பிறப்பின் நிலைமைகளும்; மூன்றும்காலில், ஊழ்வினையின், சங்கிலிகைத்தொடர் போன்ற இயைப்பினால் வாழ்க்கையில் நேரும்இன்ப துன்ப நிகழ்ச்சித் தொடர்புகளும் விளைவுகளும்; நான்காம் காலில், கதிரவன் தனது பொன்னொளியைப் பரப்பிக் கொண்டு கிளம்பும் தறுவாயில், முழுதும், அவனுக்குத் தெளி

வாய் விளங்கலாயின. உடனே, அவன், "நான் விரும்பியதை அடைந்தேன்! இந்த வாழ்க்கை நோயின் மருந்தினைக் கண்டுகொண்டேன்" என்று மகிழ்ச்சியுற்றான். பிறர் துன்பங்களைக் காணப்பொறாது பிறர்க்காகவே தனது காதல் வாழ்க்கையைத் துறந்து உண்மையை நாடி வெளிப் போந்த சித்தார்த்தன், இவ்வண்ணம் உண்மையை அறிந்து தெளிந்தவுடன், மாநிலத்திலே துன்பம் உழக்கும் உயிர்கள்மீதெல்லாம் தண்ணளி சுரந்து, தான் கண்டு பிடித்த அறவழியை எல்லார்க்கும் எடுத்தோதி மக்களை ஓம்பவேண்டும் என்ற எண்ணங் கொண்டு, அவ்வாறே செய்யலானான். அன்று முதல், 'சித்தார்த்தன்' என்னும் தந்தையிட்ட பெயரும், 'கௌதமன்' என்னும் மரபினால் வந்த பெயரும் போய், புத்தர், ததாகதர், ஜினர் என்னும் பெயர்களே அவனுக்கு வழங்குவன வாயின.

## 13. பின்னுரை.

ஈசான சகாப்தம் 68-ம் ஆண்டில் வைகாசிப்பூர்ணிமையும் விசாகமுங்கூடிய வெள்ளிக்கிழமையன்று, சாக்கிய நாட்டிலே கபிலைமூதூரிலே கோதமர் மரபிலே மன்னன் சுத்தோதனனுக்கும் அவன் மனைவி மாயைக்கும் ஒரேமகனாகச் சித்தார்த்தன் பிறந்து; 87-ம் ஆண்டில் தனது தாய்மாமன் மகளான யசோதரையை மணம் புரிந்து; பத்தாண்டுகள் அவளுடன் இல்வாழ்க்கையிலிருந்து; 97-ம் ஆண்டில் இராகுலன் என்னும் மகனைப் பெற்றெடுத்த பின்னர், தனது இருபத் தொன்பாம் பிறந்த நாளன்று இல்லற வொழுக்கத்தைத் துறந்து; ஆறு ஆண்டுகளாக உண்மையைநாடித்திரிந்து; 103-ம்

ஹூடத்தில் வைகாசிப் பூர்ணிமையும் விசாகமுங் கூடிய புதன்கிழமையான தனது முப்பத்தைந்தாவது பிறந்த நாளன்று, கயையின் அருகுள்ள உருவேலா என்னும் காட்டிலே, பல்குனியாற்றின்கரைமீதுள்ள ஓர் அரசமரத்தின் அடியிலே, தான் தேடித்திரிந்த உண்மையை உணர்ந்து தெளிவுற்ற வரலாறு இதுகாறும் கூறப்பட்டது. இவ்வண்ணம் தெளிந்த பின்னர், நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு, தாம் கண்டுபிடித்த அறநெறியைப் பலவிடங்களிலும் சென்றோதி, முடிமன்னர்கள் முதலாக அடிமைகள் ஈருகவுள்ள எண்ணிறந்த மாந்தர்களை அவ்வழி ஒழுகும்படி செய்வித்து, புத்தர், 148-ம் ஹூடத்தில் வைகாசிப் பூர்ணிமையும் விசாகமுங் கூடிய செவ்வாய்க்கிழமையான தமது எண்பதாவது பிறந்தநாளன்று கங்குலின் பிற்பகுதியிலே, குசீநகரத்தைச் சார்ந்த ஹிரண்யவதியாற்றின் கரைமீது, இரண்டு ஆச்சாமரங்களின் நடுவே, பேரின்ப வீட்டை எய்தினர்.

மூன்றேமுக்கால் வியாழ வட்டமாக, புத்தர் பலவிடங்களில் சென்று அறவழியை ஓதிய வரலாற்றையும்; பௌத்தசமயம், அசோகன் முதலிய மன்னர் மன்னர்களால் கைக்கொள்ளப்பட்டு நமது நாடெங்கும் பரவித் தழைத்தோங்கியதையும்; இன்னும் சீன, ஜப்பான், பர்மா, இலங்கை, சியாம் முதலிய நாடுகளில் வழங்குவதையும்; இன்றுமே, மாநிலத்திலுள்ள மக்களில் ஐவரில் ஒருவர் பௌத்தரா யிருத்தலையும் எடுத்துக்கூறுவது, 'சித்தார்த்தன்' என்று பெயரிடப்பெற்ற இந்நூலுக்கு இயையாது; ஆயினும், புத்தரது சில கோட்பாடுகளையும் அறமோதும் முறையையும்பற்றிச் சிறிது இங்கே எடுத்துரைத்தல் பொருந்தும். புத்தர் ஓதிய

அறவழியைப் பின்வருமாறு பொதுப்படச் சுருக்கிக் கூறலாம்:-இன்புதுன்புகள் விரவியுள்ள இவ்வுயிர்வாழ்க்கையில் சிலர்க்கே சிலவாயும் குறைவாயும் உள்ள இன்பங்களைவிட, பிணி மூப்புச் சாக்காடுகளால் எல்லார்க்கும் வரும் துன்பங்களே மிக்குள்ளன. ஆகவே, இத்துன்பங்களை நீக்க யாவரும் முயலவேண்டும். இத்துன்பங்கள் பிறந்தாரையே வருத்துதலால், பிறப்பை நீக்கிவிட்டால் இவைகளும் நீங்கும். பிறப்புண்டாகும் வழியோ, இதுவேயாகும்:—நமது ஐம்பொறிகளும் உள்ளமும் வெளிப்படையான பொருள்களைக் கதுவும்பொழுது, இன்பமும் துன்பமுமான நுகர்வுகள் விளைகின்றன; இந்த நுகர்வுகளினால் இன்பத்தை அடைதற்கும் துன்பத்தை அகற்றுதற்கும் வேட்கை யுண்டாகின்றது; இவ்வேட்கைகளின் விளைவாகப் பலவகைப் பற்றுக்கள் உண்டாகின்றன; இப்பற்றுக்களே மாநிலத்தில் மக்களை ஆட்டுவித்துத் தீய வழிகளில் ஒழுகச் செய்கின்றன. இப்பற்றுக்களினால் விளையும் வினைகளினால்தாம் மீண்டும் மீண்டும் பிறப்புக்கள் உண்டாகின்றன. ஆதலினால், மெய் வாய் கண் மூக்கு காது என்னும் ஐம்பொறிகளும், ஆறும் வாயிலாகும் உள்ளமும், தொடுதற்குரிய பொருள் முதலிய பல பொருள்களோடு கூடுவதாலுண்டாகும் நுகர்வுகளை நிறுத்திவிட்டால், வேட்கைகளும் பற்றுக்களும் இருவினைகளும் மறுபிறப்புக்களும் முறையே நீங்கிவிடும். ஒரு சங்கிலிகைக் கோவையில் தலைக்கண்ணியை வெட்டிவிட்டால் எப்படி அக்கோவையே அற்று விழுந்துவிடுமோ, அவ்வாறே, நுகர்வுகளை நீக்கினால் மற்று யாவும் தாமே நீங்கிவிடும். இவ்வண்ணம் நுகர்வுகளை நீக்குதல் மாநிலத்தில் வாழும் மாந்தர் பெரும்பான்மை

யராலும் முடியாது என்பது மெய்யே. பேதைமையால் வரும் வேற்றுமை உணர்ச்சி நீங்கி, உண்மையறிவுற்று, ஐம்புலன்களையும் உள்ளத்தையும் அடக்கியாளவல்லார்க்கே அது கூடுவதாகும். இதை நன்கறிந்த புத்தர் கூறியதென்னையெனின், தன்னயமேநாடி முயல்வதுஅறமன்றாதலானும், அவ்வகை முயற்சிகள் யாவும் பற்றுக்களைப்பெருக்கித் துன்பங்களையே மிகுத்து விளைப்பன ஆதலானும், மக்கள் அனைவரும் பேற்றைக் கருதாமல் பிறர்க்காக உழைப்பதையே மேலாக எண்ணி, நற்காட்சி நல்லூற்றம் நல்வாய்மை நற்செய்கை நல்வாழ்க்கை நன்முயற்சி நற்கடைப்பிடி நல்லுளத்து ஓர்தலைப்பாடு என்கிற எட்டுவழிகளிலுமே முயலுவாராகி, கொல்லாமை திருடாமை பிறன்மனைவிழையாமை பொய்கூறாமை கள்ளுண்ணாமையாகிய ஐந்து சீலங்களையும் மேற்கொண்டு, தமக்குரிய கடமைகளைச் செய்து நோன்பிகளாக ஒழுகுவாராயின், இப்பிறப்பிலே நாளடைவிலோ, மறுபிறப்பிலோ, உண்மையயறிந்து, பிறப்பு நீங்கி, உயர்வழி வீட்டையடைவர் என்பதே.

புத்தர் புதிதாக ஒரு சமயத்தை நிலைநாட்ட வரவில்லை; மறைகளிலுள்ளவற்றையே தெரிந்தெடுத்துத் தெளிவாயோதினர் என்பது பலர் துணிவு. அஃது எங்ஙனமாயினும் ஆகுக; அவர் வற்புறுத்திக்கூறிய கோட்பாடுகள் சில, இந்நாளினுமே பொது வழக்கொடு முரணி, நம்மவர்க்குப் புதுமையாய்த் தோற்றுகின்றனவெனில், அவை, அவர் நாளிலே வழங்கிய கொள்கைகளுக்கு முற்றும் மாறுபாடாயிருந்தன என்பதை மறுக்க ஒண்ணாது. அவை, பின்வரும் நான்குமாம்:--முதலாவது, பல பிறப்புக்களையும் ஊழ்வினைத் தொடர்பையும் ஒப்புக்

கொண்டு அவற்றை நீக்கும் வழியையே அவர் ஓதின ரெனினும், முதல் முடிவு என்பதில்லாத தனிப்பொருளையும் அழிவற்ற ஆன்மாவையும் பற்றிச் சிற்றறிவினராகும் நம்மால் ஒன்றுமே உறுதியாய்த் தெரிந்து கொள்ள முடியாது; அவற்றைக் குறித்து வழக்காடுதலும் ஆராயமுயலுதலும் வீணே; அவற்றின் உண்மை எவ்வாறாயினும், உயிர்வாழ்க்கையிலுள்ள துன்பங்களைக் குறைத்து, முடிவில் உண்மையறிவையும் பிறப்பு நீங்கிய அழிவற்ற இன்பவாழ்க்கையாகும் உயர்வழிவீட்டையும் தரவல்ல நல்லொழுக்கமே யாவற்றினும் சிறந்தது என்பது. இரண்டாவது, தூக்கிப்பார்க்கின் நம்மினும் நீடித்த வாழ்க்கையராயிருப்பினும், நம்மைப் போலவே நிலையற்றவரும் பிறத்தற்குரியருமான கடவுளரை மகிழ்விக்க முயலுவதும், எத்தி வழிபட்டு வேண்டுவதும் நலனற்ற செயல்கள் என்பது. மூன்றாவது, அவனவன் செய்துள்ளனவும் செய்வனவுமான இருவினைகளின் விளைவுகளை அவனவனே நுகர்ந்து தீரவேண்டுமாதலின், உயிர்களைக் கொன்று செய்யும் வேள்விகளாலும் வேறுவழிகளாலும் ஒருவன் தன்வினைப்பயனினின்றும் தன்னைத் தப்பித்துக்கொள்ள முயலுவது, தன்னிழலையே தான் கடக்க முயல்வது போல வீணாகும் என்பது. நான்காவது, உண்மையறிவும் அறவழியொழுக்கமும், ஆண்பெண் மேலோர் கீழோர் இளையோர் முதியோர் என்னும் பால்வேற்றுமை மரபுவேற்றுமை முதலியனவின்றி, மக்களுக்கெல்லாம் பொதுவான உரிமைகளே; துறவுகொள்வோர் கல்வி கற்று, இல்லறம்புகுந்தொழுகி, காட்டில் தங்கி' பிறகேதுறவுகொள்ளலாம்என்பதும், சிலமரபினரே, அவருள்ளும் ஆண்பாலாரே, துறத்தற்குரியர் என்பதும்

இல்லை; பிறப்புவேற்றுமைகளைச்சார்ந்ததன்றுஒழுக்கம்; அஃது அறிவுபற்றியதே; மக்களெல்லாம் உற்ற உறவினர்; ஒரே வகுப்பினர்என்பதே. இந்நான்கு கோட்பாடுகளையுமே புத்தசமயத்தின் சிறப்புக் கொள்கைகளாகச் சொல்லலாம்.

உண்மையை அறிந்து முற்றும் துறந்து புத்தரான பின்பும், தமது முன்னிலைமையைச் சார்ந்த கடமைகளை அவர் செலுத்தத்தவறவில்லை. அருளே உருவெடுத்து வந்தாற்போன்ற அவரது இரக்கத்தைப் பற்றிப் பேசுவது மிகையாகும். உண்மையைத் தாம் கண்டுபிடித்தவுடன், அதைத்தேடித்திரிந்த ஆண்டுகளில் தாம் கண்டு பழகிய துறவிகள் ஐவர், பிம்பஸாரன், முதலியவரிடம் சென்று அதை எடுத்தோதி, அவர்களைத் தம்வழிப் படுத்தினர். அப்பால், தமது மாணவர் பலரைப் பலநாடுகளில்சென்று, உயிர்கள் உய்யுமாறு அறநெறியை ஓதிப் பரப்பும்படி ஏவினர். தாமே சாக்கியநாடு சென்று, தமது தாய் தந்தையர் மனைவி மகன் உற்றோர் முதலியவர்களுக்குத்தாம் கண்டெடுத்த அரும்புதையலை உதவி, அவர்களை அறவழிப்படுத்தினர்; அவருடைய சிற்றன்னையும் வளர்ப்புத்தாயுமான கௌதமியும், மனைவி யசோதரையுமே பெண்பாலாரில் முதலில் துறவு கொண்டு, அவர் நிலைநாட்டிய புத்தசங்கத்தைச் சேர்ந்தவர்; அவருடைய மகன் இராகுலனும், சிறுதகப்பன்மார் மக்களான ஆனந்தன் அனுருத்தன் என்பவரும், அவருடைய தலைமையான மாணவராய் விளங்கினவர். “பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் யாரும் துறத்தல் அரிதம்மா!” என்று தாயுமானவரால் புகழ்ப்பெற்ற திருவெண்காடர் தமது தாய் இறந்த

பொழுது செய்தது போலவே, புத்தரும், தமது தந்தை சுத்தோதனன் அவனது தொண்ணூற்றேழாவது ஆண்டில் சாநோயுற்றதைச் கேள்வியுற்றவுடன் விரைந்து சென்று, அவன் இறக்கும்பொழுது உடனிருந்து அவனைத்தேற்றி, அவனுக்குரிய சடங்குகளையெல்லாம் தாமே செய்து, தமது கடமையை நிறைவேற்றினர். அதற்கு முன் உரோகிணியாற்றினைப் பற்றித் தமது நாட்டாராகிய சாக்கியர்க்கும் தமது தாயின் நாட்டினரான கோலியர்க்கும் சண்டை யுண்டாயிருப்பதைக் கேள்விப்பட்டு, போரில் பலவுயிர்கள் மாளலாகும் தறுவாயில் சென்றடைந்து, அவர்களுக்கு நன்மதிபுகட்டி, அவர்கள் ஒத்துவாழும்படி செய்தார்.

அவருடைய தலைமையான மாணவருள் சிறப்புற்று விளங்கிய உபாலி என்பவன் மரபில் மயிர்வினைஞன் என்பதும்; வைசாலி பட்டணத்துப்பொதுமகள் ஆரம்பாலி என்பவள், அவர்கூறிய அறவழியைக் கேட்டு மகிழ்ந்து, தன்வீட்டில் உண்ணும்படி வேண்டினளாக, அவர், தமது கூட்டத்தாருடன் சென்று அவளுடைய வீட்டில் உண்டனர் என்பதும்; அவர் கடைசியாக உண்டது ஒரு தட்டான் வீட்டிலே என்பதும், மரபு வேற்றுமைகளை மதியாத அவருடைய கொள்கையை நன்கு விளக்கும். அவரவர் அறிவினுக்கும் நிலைமைக்கும் தக்கபடி தமது அறவழியைப் புத்தர் எடுத்தோதியது, பின்வருவனவற்றால் விளங்கும்: ஆலவி என்னும் ஊரில் அவரிருக்கும் பொழுது, அவர் கூறும் அறமொழிகளை விரும்பிக் கேட்கும் ஒருவன் மிக்க பசியுடனிருத்தலை அறிந்து, அவனை முதலில் உண்ணச் செய்து, பிறகு அவனுக்கு அறமோதினர். எவர்க்கும் எதுவும் கொடா

மல் தான்மட்டும் இன்புற்று வாழ்ந்து, ஈயாமைக்குப் பெயர்போனவனுயிருந்த மற்ருெருவனைப்பற்றி அவர் கேள்வியுற்று, இரங்கி, அவனிடம் தாமாகவே சென்ருர். அப்பொழுது, அவன், மச்சிலேறி ஒளித்து, அங்கே, தன் மனைவியுடன் அப்பம் சுட்டுத்தின்று கொண்டிருந்தான்; அவரும் அந்த மச்சிலேறி, அவன் தின்னும் அப்பத்தை இரந்து பெற்றுக்கொண்டு, அவனுடைய உள்ளமும் உருகும்படி அறத்தை எடுத்து அவனுக்கு ஓதி, அவனை உய்வித்தார். வேருெரு பொழுது, ஒரு சிற்றாரில் உழுது பயிர் செய்து பிழைத்துவந்த மறையவனை பாரத்துவாசன் என்பவனிடம் சென்று அவர் ஐயம் இரந்தார். ஏற்றமான தோற்றப் பொலிவையுடையவர் இரப்பதைக் கண்டு அவன் சினமுற்று, "நான் உழுது பயிரிட்டுப் பாடுபட்டு, அதனுல் விளையும் விளைவையுண்டு வாழுகிறேன்; நீரும் அப்படியே செய்யலாமே" என்ருன். அதைக்கேட்ட புத்தர், "நானும் உழுது பயிரிட்டுப் பாடுபட்டே பிழைக்கின்றேன்" என்ருர். அந்தணன், "ஆயின், உமது விதை கலப்பை முதலியன எங்கே?" என்று கேட்டான். புத்தர், "என்னுடைய அன்பே விதை; நற்செயலே மழை; அறநூலே வயல்; அறிவும் வணக்கமுமே கலப்பையின் உறுப்புக்கள்; அறம்தான் எனது கலப்பையின் பிடி; விடாமுயற்சியே உழும் எருது; என் உள்ளமே அதை அடக்கிச் செலுத்தும் தலைக்கயிறு; ஊக்கமே தாற்றுக்கோல்; மயக்கம்தான் பயிர்க்கு இடையூருனகளை; இப்படிப்பட்ட என் உழுதொழில் இன்பவீடாகிய விளைவையுதவி, பலவகைத் துன்பங்களையும் போக்குகின்றது" என்று பதிலுரைத்தார். பார்ப்பான் அதைக்

கேட்டு வெள்கி, அறவழிப்பட்டான். 'இவ்வண்ணமாக, "நல்லவை செய்ம்மின்; அல்லவை ஒழிமின்" என்றும், "அறம் செய்ம்மின், ம ற ம் த வி ர் மி ன்" என்றும் கூறிக்கொண்டு, காட்டிலே தமது மாணவருடன் தங்கும் மழை நாள்களைத்தவிர மற்றை நாள்களிலெல்லாம், நாற்பத்தைந்து ஆண்டுகள், புத்தர், புலசிற்றூர்களுக்கும் பேரூர்களுக்கும் சலிப்பின்றிச் சென்று, துன்புற்றுவருந்தும் மாந்தர்களைத் தமது தண்ணளியின் மேலீட்டால் நல்வழிப்படுத்த முயன்று வந்தார். 'பரமாத்மா' 'ஜீவாத்மா' என்பவற்றைப் பற்றி மக்கள் யாதொன்றினையும் உறுதிப்பாடாகத் தெரிந்துகொள்ளுதல் முடியாதது, அத்தகைய ஆராய்ச்சி வீணானது, அவ்வறிவு இன்றியமையாத தன்று, ஒழுக்கத்தைத் திருத்திக் கொண்டு அறவழிப்படுதலே துன்பமில்லா நிலையை அடைதற்கு இன்றியமையாதது என்று முழுதும் நம்பினவரும்; கடவுளரை வழிபடுதல் வேள்வி செய்தல் நோன்பியற்றல் முதலிய வழிகளில் சிறிதும் நம்பிக்கை யற்றவரும்; அறியாமையினால் துன்புற்றுழலும் மன்னுயிர்களுக் காக இ ர ங் கி வருந்தினவரு மான புத்தர், மயக்கத்தைக் கொடுப்பனவாகிய கள் முதலியனவற்றை அருந்திக் களிப்பவர்களை அத்தீங்கினின்றும் விலக்குதற் பொருட்டும், பொய்யையே கூறி வந்தவர்களை மெய்யையே கூறும்படி செய்தற் பொருட்டும், திருடியே பிழைத்து வந்தவர்களை அத்திருட்டு வழியினின்றும் நீக்குதற் பொருட்டும், உடல் முதலியவைகள் நிலையுள்ளன வென்று துணிந்திருப் போர்க்கு அவை நிலையில்லாதன வென்று அறிவுறுத்தற் பொருட்டும், நன்மை செய்தலைக் கனவிலும் அறியாதவர்க்கு நலம்

புரிதல் எல்லாவற்றிலும் மேலானதென்று தெரிவித்தற் பொருட்டும், யாதொன்றையும் சிறிதேனும் கொடுத்த லில்லாதோரை வண்மை யுடையராகச் செய்தற்பொருட்டும், பிறர் செய்த நன்றியை நினையாத கொடியோர்களை அதனை மறவாதிருக்கும்படி செய்தற் பொருட்டும், இரு வினைகளும் இல்லை யென்போர்களை அவைகள் உண்டென்று தெளிந்தொழுகும்படி புரிதற் பொருட்டும், இன்னும் பற்பல நன்மைகளை விளைத்தற் பொருட்டும்,' அவரவர்களுடைய நிலைமை முதலியவற்றிற் கேற்பப் பலவாற்றானும் அறத்தை எடுத்தோதித் தம் வாழ்நாள் முழுதும் உழைத்துவந்தார்.

புத்தர் சாகுந் தறுவாயிலும் அவரது அளப்பரிய இன்னருளே மேலிட்டு விளங்கியது: அவர் கடைசியாக உண்டது ஒரு தட்டானிட்ட ஊண் என்று மேலே கூறினோம். அவ்வூணில், அவரறியாமல் பன்றியிறைச்சி கலந்திருந்ததனா லுண்டான நோய்தான், அவர் வாழ்நாளை முடிவு கண்டது. அப்பொழுது சந்தன் என்னும் அந்தத் தட்டானை, தம்முடனிருந்தவரில் சிலர் பழிப்பதைக் கேள்வியுற்ற புத்தர், "அவன் அன்புடன் அளித்த உணவை உண்டபின்புதான் நான் இன்பவீட்டை அடைதற்கு உரியனானேன். இதனால் அவன் சிறந்த பேற்றை அடைவது திண்ணம். அன்று அரச மரத்தடியில் நான் உண்மையைத் தெளியுமுன்பு ஸுஜாதை அளித்த உணவும், இன்று நான் வீட்டை அடைதற்கு முன்பு சந்தன் அளித்த உணவும் எல்லாவற்றினும் மேலானவை; இதனை அவனுக்குச் சொல்" என்று கூறினராம்! ஆ! ஆ! இதனினும் மேலான அருளை எங்கே காணலாகும்!

அவர் நெடுந்துயில் கொள்ளுமுன், தம்மைச்

சூழ்ந்து நின்றவர்களை நோக்கி, "நான் சொல்லியவற்றில் ஏதேனும் ஐயமுண்டோ? இருக்குமானல் சொல்லுமின்" என்று கேட்டார். துயருற்று நின்ற ஒருவரும் பதிலுரைக்கவில்லை. பிறகு, அவர், "என்னையும் நான் சொல்லிய வற்றையும் நேசிப்பது போல நீங்கள் ஒருவரை ஒருவர் நேசித்து ஒழுகல் வேண்டும்" என்று கட்டளையிட்டார், அதைக் கேட்டும் யாவரும் பேசாது வருந்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது, அவர் தம்பி அனுருத்தன், துயரம் பொறுக்க மாட்டாதவனாய், "ததாகதர் ஏன் இதற்குள் வீட்டை யடைய வேண்டும்?" என்றான். புத்தர், இன்சொற்களினால் அவன் துயரத்தை ஆற்றிவிட்டு, எல்லோரையும் பார்த்து, "அன்பர்களே, பிறப்புக்கு வேர் எதுவோ அதுவே இறப்புக்கும் வேராகும்; இந்த உண்மையை மறவன்மின். இதை உங்களுடைய உள்ளத்தில் ஊன்றிப் பதித்துக் கொண்மின்; இனி என் வார்த்தைகள் வெளிப்படா" என்று கூறி, பின்பு பற்றுக்கள் அனைத்தையும் துறந்து, உயர்வழியதான பேரின்பவீட்டினை அடைந்தார்.

முற்றிற்று.

# அருஞ்சொல் உரை.

அடிசில்—சோறு.
அணங்கு—தெய்வப்பெண்.
அமளி—படுக்கை.
அயிலுதல் } புசித்தல்
அருந்தல் }
அவி—தேவருணவு.
அவிர்தல் பிரகாசித்தல்
அழுக்காறு—பொறாமை
அறம்—சமயம்
ஆ—ஆன்—பசு.
ஆடவர்—புருஷர்.
ஆயம்—மகளிர்கூட்டம்
ஆயர்—இடையர்,
ஆரம்—சந்தனம்.
ஆர்வம்—ஆசை.
ஆவணம்—கடை.
ஆற்றல்—வலி.
இயம்—வாச்சியம்.
இரவலன்—பிச்சைக்காரன்.
இல்லக்கிழத்தி—மனைவி.
இவுளி—குதிரை.
இறை—இறைவன்-அரசன்.
இறைவி—அரசி.
இழுக்கு—ஈனம்.
இன்னணம்—இவ்விதம்.
ஈமம்—சுடுகாடு.
உகிர்—நகம்,
உய்தல்—ஈடேறுதல், பிழைத்தல்.
உவப்பு—சந்தோஷம்.
உழுவல் அன்பு-விடாது தொடர்ந்த அன்பு

உறைவிடம்—தங்குமிடம்.
ஊறு—காயம், ஸ்பரிசம்.
ஊற்றம்—பற்றுக்கோடு.
எஞ்சிய—மிகுந்துள்ள.
எல்லி—இரவு.
என்பு—எலும்பு
ஏழையிணை—பேசை.
ஐயம்—பிச்சை; சந்தேகம்.
ஓதி—பெண்மயிர்.
ஓதிமம்—அன்னப்பறவை.
ஓம்பல்—பாதுகாத்தல்.
ஓலக்கம்—திருச்சமுகம்.
ஓலம்—அபயக்குரல்.
ஓவியம் சித்திரம்.
கங்குல்—இரவு.
கங்குற்பறை—இராவிற்கொட்டும் ஜாமப்பேரிகை.
கட்புனல்—கண்ணீர்.
கணககாயன்—உபாத்தியாயன்.
கணம்—க்ஷணம்.
கண்—நேத்திரம்; இடம்.
கதிரவன்—சூரியன்.
கமழ்தல்—மணத்தல்.
கரவு—ஒளித்தல், வஞ்சகம்.
கவல்—கவலை.
கவன்று—கவலைப்பட்டு.
கழறுதல்—சொலலுதல்.
கழுது—பிசாசு.
கற்றை—கதிர்த்தொகுதி.
கன்னல்—நாழிகை வட்டில்.
காவலன்—அரசன்.

காழ்—வயிரம்.
கிளர்ச்சி—எழுச்சி.
குரிசில்—ஆண்மகன்.
குருகு—நீர்ப்பறவை.
குருதி—இரத்தம்.
குல்லை—துளசி.
குழவி—குழந்தை.
குழூ—கூட்டம்.
குழுமி—கூடி.
கூலம்—பலபண்டம்.
கூளி—பேய்.
கொய்யுளை—குதிரை.
கொற்றவன்—அரசன்
கோ—கோமான்—அரசன்.
கோப்பெண்டு—அரசி.
கோவியல்—அரசியல்.
கோவை—வடம்,
கோள்—குற்றம்.
சாளரம்—சன்னல்.
சிம்புளி—சம்பளம்.
சிலதர்—ஏவலாளர்
சிலதி—ஏவற்பெண்.
சிலை—வில்.
சுடலை—சுடுகாடு.
சூழ்ச்சித்துணைவன்—மந்திரி.
சூறை—சுழல்காற்று.
செகுத்தல்—அழித்தல்.
செந்தூள்—குங்குமம்.
ஞாயிறு—சூரியன்.
ஞான்று—காலம், நாள்.
தக்கோலம்—பஞ்சவாசத் தொன்று.
தட்பம்—குளிர்ச்சி.
தண்கதிரோன்—சந்திரன்.
தண்ணளி—கிருபை.
தளி—கோவில்.
தாழ்த்தல்—தாமதித்தல்.
தாள்—பாதம்.
தானை—வஸ்திரம்.
திகழ்தல்—விளங்கல்.
திகிரி—சக்கரம்,
திங்கள்—சந்திரன்.
திரை—இடுதிரை; உடல் சுருங்கல்.
திளைத்தல்—அனுபவித்தல்.
துயில்—நித்திரை.
தூரவு—கிணறு.
துவராடை—காவிவஸ்திரம்.
துன்னுதல்—நிறைதல், கிட்டுதல்.
தூத்து—சுத்தஞ்செய்து.
தூய—பரிசுத்தமான.
தேர்ச்சித்துணைவன்—மந்திரி.
தைவரல்—தடவல்.
தொடையல்—மாலை.
தொலை—தூரம்.
தோகை—வால்; மயில்; பெண்.
தோன்றல்—மகன்.
நாய்கன்—செட்டி.
நுகர்தல் அனுபவித்தல்.
நுதல்—நெற்றி
நெருநல் } முன்னைநாள்.
நென்னல் }
நோன்பிகள்—உபாசகர்; தவசிகள்.
நோன்புப்பள்ளி—தவசிகளின் ஆசிரமம்.
பகலவன்—சூரியன்.
படை—ஆயுதம்.
பரவுதல்—துதித்தல்; வணங்கல்.
பல்லியம்—சங்கீதம்.
பனிவரை—இமயமலை.
பாய்மா—குதிரை.
பாரி—இராக்காலயாம அளவு.

பார்—பூமி.
பிண்டி—அசோகமரம்.
புரவலன்—அரசன்.
புரவி—குதிரை.
புலால்—மாமிசம்.
புள்—பறவை.
புனல்—நீர்.
புனையுரை—கதை
பூகம்—கமுகு.
பெருமிதம்—களிப்பு, மிகுதி.
பொதும்பர்—மரச் செறிவு.
பொய்கை—தடாகம்.
பொருநர்—படைவீரர்.
பொலிதல்—விளங்கல்.
பொழில்—சோலை.
பொறி-இயந்திரம்;இந்திரியம்.
பொறியாழி—முத்திரை மோதிரம்.
பொறையுயிர்த்தல்—மகப் பெறுதல்-
மணவினை-விவாகச்சடங்கு.
மதி-மாதம்; புத்தி; சந்திரன்.
மருகன்-மருமகன்.
மரபு—குலம்.
மலரவன்—பிரமன்.
மறையுரை—மந்திரம்.
மல்குதல்—பெருகல்.
மன்றம்—சபை
மா—விலங்கு; குதிரை.
மாருதம்—காற்று.
மிகை—அதிகம்; அனாவசியமானது.
முகமன்—உபசாரம்.
முதியோன்—கிழவன்.
முளரி—தாமரை.
முறுவலித்தல்—புன்சிரிப்பு.
முன்றில்—முற்றம்.
மெய்—உண்மை; உடம்பு.
மெல்லியல்—பெண்.
மொய்ம்பு—தோள்.
வதிதல்—தங்கல்.
வயா—கருப்பநோய்.
வரை—மலை.
வளி—காற்று.
வனப்பு—அழகு.
வாளி—அம்பு.
விண்—வானம்.
விண்ணவர்—தேவர்.
விண்மீன்—நக்ஷத்திரம்.
விரை—வாசனை.
விலங்கு—மிருகம்.
விழைதல்—விரும்புதல்.
வேத்தியல்—அரசியல்.
வேள்வி—யாகம்.
வைகறை—விடியற்காலம்.
வையகம்—வையம்—பூமி.

அநுபந்தம்.

# புத்த சரிதை.

## பாயிரம்.

### கடவுள் வணக்கம்.

அன்பே உருவாய், அறிவே உறுபெயராய்,
இன்பே இயலாய், எழில் ஒளியாய்,—முன்பின்
வரைகடந்து, யாவும் மலர்த்தி, விளையாடும்
உரைகடந்த ஒன்றையே உன்னு. (1)

### நூல் வரலாறு.

ஓங்கு புத்த காதையினை ஓர் பவுத்தன் ஓதலுறும்
பாங்காக, 'ஆசிய சோதி' எனப் பாடியுளான்
ஆங்கிலத்தில் ஆர்னால்டு அழகாய்; அதைச் சிறுக
ஈங்கு உரைப்பேன் இன் தமிழில் இன்று. (2)

### அவையடக்கம்.

கண்பனிப்ப, உள்ளம் கனிந்து உருக, யானுற்ற
பண்பில் பிறர்க்கும் பகருவேன்:—நண்பர்,
கதை அருமை கண்டு, கவிஎளிமை காணாது,
இதை உரிமை கொண்டிடுவர் என்று. (3)

'மனப்பட்டது ஒன்றை வணங்குக, மாந்தர்: அவ் வான் அகத்துக்
கனப்பட்டு வீழும் எந் நீரும் கடலைக் கலந்திடல் போல்
இனப்பட்ட தேவர்கள் எவரை ஏத்தினும் ஈசனுக்காம்'
எனப்பட்ட நீதியின், ஈதையும் எம்மவர் ஏற்பர்களே. (4)

## திரு அவதாரம்.

உலகம் யாவையும் உய்ந்திட உவந்து அருள் சுரந்தோன்
இலகு மாக்கதை ஈது; அவன் அடியருள் எளியேன் (1)

இதயத் தேரினை ஆசை ஊர்ந்து, இடர் உறு நாவாம்
குதிரை தூண்டிட, குழைந்து அது கொண்டிடும் கதியே. (2)

'தேரை, ஊர்தியை, செல்வழித் திகழ்நலங் களையே
சேரு மால்பழி, செல்பரி சிறந்தது ஒன்று அன்றேல்: (3)

'எவரும் ஓர்குவர் இதை' என எண்ணியே, முன்னோர்
சுவடு மேவிய தொல்வழித் தொடரும் என் துணிவே. .. (4)

வேறு.

கொள்ளை மாரிமுன் கூடும் வெம்மையின்,
விடியல் முன் இருள் கூடலின்,
உள்ளம் ஆர்அழல் மருள் ஒழித்திடும்
அருள் மழை பொழிந்து ஒளிதரும் (5)

புத்தன், புண்ணிய மூர்த்தி, மானுடம்
பூண்டு வந்து புரக்குமுன்,
இத்தலத்தினில் எங்கும் மேவியே
இருந்து அலைத்தது பாவமே. (6)

அஞ்சு அவிந்தவர் என்மரும், தலை
ஆறணிந்தவன் தாளினும்
மிஞ்ச, அன்னவன் வெள்ளி பொன்மலை
மீதினே நகை மேவினர்: (7)

துங்க மாதவர் ஒண் கரத்துமுக்
கோல்கள் தூய்மை துறந்தன;
சிங்க ஆதனர் செங்கரத்து உயர்
கோல்கள் செம்மை இறந்தன; (8)

செல்வ வாணிகர் பொன்கரத்துலைக்
கோல்கள் சீர்மை மறந்தன,
ஒல்க வான்பெயல், உழவர் கை அலக்
கோல்கள் ஊண்கள் வறக்கவே. (9)

நூல் மறந்தது மார்பில் மூன்று அணி
நூலினோர் உளம்; வேந்தர்கைக்
கோல் மறந்தது கோநெறித்திறன்;
கொற்ற வாணிகர் கொள்முறை (10)

தான் மறந்தனர்; மள்ளர்கட்கு அருள்
வான் மறந்தது தண்பெயல்;
ஊன் மறந்தது மானம், யாவரும்
உண்மை நாமறந்தார் அரோ. (11)

நெஞ்சில் வஞ்சகம், நாவில் இன் சொல்
நிறைந்த நீரர் நிறைபிர
பஞ்சம் எங்கணும் பஞ்சம் ஆயின
வாய்மை யும் பர சிந்தையும்; (12)

ஒன்று மேஇலை, அன்று நம்மொடு
உதித்ததும், உடன் போவதும்;
என்று மேஇது பொன்றும், என்பதை
எண்ணி டார், நிறைவு எய்திடார்; (13)

கன்றி யேமனம் மற்றுளார் பொருள்
கண்டு, கைவலி பெற்றுளார்,
கொன்று தேடியும், கொள்ளை ஆடியும்,
கோது சேர்பொருள் கூடுவார். (14)

உயிர் படைத்தன யாவும், அன்னதில்
ஆசை உற்று, ஒரு புண்ணிலும்
செயிர் படைத்து உறு நோவு சிந்தனை
செய்கி லார், பழி தேர்கிலார்; (15)

நாவு கொண்டுள நசையின், அன்னசெய்
நன்றி கொன்றிட நாணிலார்,
மா, விலங்கு, புள், யாவும் நுங்குவர்,
மண் உடம்பை வளர்க்கவே! (16)

வஞ்சகம், கொலை, பொய், புலால் எனும்
மக்கள் நால்வரும் தானையா,

நெஞ்ச சம்தனே யே மறந்திட
நேரும் மேதை அமைச்சனே, (17)
எய்மரங்கள் ஒர் ஏழு மேதுளே
இராம பாணமும் இணையிலா
மைம யங்கு கூர் விழியி னார்தரும்
மையல் எங்கும் வளைத்ததே. (18)
அன்ன ஊர்தியும், மூரி ஊர்தியும்,
ஆக்கி, நீக்கி, அலுப்புற,
மன்னும் வாதனே அள்ளல் ஆதிய
நரகம் ஏழும் மலைப்புற, (19)
இந்த வாறு உலகு, இன்னல் வாரிதி
எய்தி மூழ்குறும் எல்வையில்,
அந்த வான் உலகத்திலே எமது
ஆண்டவன் நிலை அறைகுவாம். (20)

வேறு.

கானக்கண் வலைக்கண் வீழ்ந்த
கன்று எனக்கலங்கும் மண்ணே,
வானக்கண் உடுக்கள் நாப்பண்
மதியென வயங்கும் அண்ணல் (21)
கண்ணுற்றான் அகக்கண் கொண்டு;
கருணை ஊற்று எடுக்கும் நெஞ்சம்
புண்உற்றான், பொருமல் உற்றான்;
புவிஉறு புழுக்கம் அஞ்சும். (22)
அக்கணம் அவனி ஏகி,
அல்லல்சேர் பிறவி தாங்கி,
மக்களை அளிக்கும் எண்ணம்
வாய்ந்தனன், அளியின் ஓங்கி. (23)
உள்உற எழுந்த எண்ணம்
உற்பவக் குறிகள் ஐந்தும்

தெள்உறப் பொறித்த மேனி
தெரித்திட, தேவர் நொந்து, (24)
"தாரகம் பிறிதொன்று இன்றித்
தவித்து யாம் தியங்க, இன்று
பாரக மனிசர்க் காக,
பகவ! நீ செல்லேல்" என்று, (25)
தடுத்தனர்; அவரை நோக்கிச்
சாந்தனும்: "அமரர்! கேண்மின்:
அடுத்து உள கதி ஒன்று இன்றி
அவம்உறும் அவனி காண்மின்! (26
"அகம்உறு நோயின் வாடும்
மகவினை, அயர்வு ஒன்று இல்லா
மகவினை, கவலை, அன்பு
வாய்ந்திடும் அன்னை, சொல்லீர். (27)
"தெளிவுஇலாச் சிறுவர், சிந்தை
திரிந்து, தீ விழுதல் பார்த்தும்,
அளிஇலா நெஞ்சம் தன்னில்
அறிவுஇலாப் பகுதி சேர்த்தே. (28)
"ஆதலால் தடுக்க கில்லீர்;
யாவரும் அறியும் ஆறே,
சாதலால் சனித்தலாலே
சார்இரு வினையின் கூறாய், (29)
"ஊன்உறு துயரம் யாவும்
ஒழிவுஉறும் வழியை ஓத
மானுடச் சும்மை தாங்கி
மாநிலம் செல்வேன் மாதோ. (30)
"பாலையில் படுகர் போலப்
பாரில் இப் பருவம் வாழும்
சீலம்உற்று இலகு செல்வச்
சாக்கியர் சிறக்கும் ஊழும் (31)

உள்ளதால்; அவருள் தோன்றி,
ஒருவினை முடிக்க எங்கும்
உள்ளமால்" என்றான் புத்தன்,
உலகர் முன் தவமே ஓங்க. (32)

வேறு.

எந்நாடும் தலைகுனிய முன்நாளில்
இந்தியர்சேர் இசையே போலும்
இந்நாகம், எனலாகும் இமவரையின்
தென்சாரல் இலங்கும் என்ப; (33)
சமயம் எலாம் தலைகுனியத் தண் அளியே
தனிமதமாச் சாற்ற வந்த
எமது இறைவன் தனைஅருளும் பாக்கியம் கொள்
சாக்கியர்தம் எழில்சேர் நாடே. (34)
புத்தோத யப்புகழ் சேர் புண்ணியபூ
தலத்தை, ஒரு புலம் போல் போற்றி,
சுத்தோத னப் பெயரோன், மாயை எனும்
துணைவியொடும் சுகித்து வாழ்நாள், (35)
குழந்தை இலாது உள மறுகும் கோமாட்டி,
கனவுஉற்று ஓர் இரவில், கோனை,
பழம்தனத்தைஇழந்துஅதன்பின்படைத்தவள்போல்
பரிந்து எழுப்பிப் பகருவாளே: (36)

வேறு.

"அரச! கேள் இதை: ஆறு பிளவதால்;
ஆதித்தற்கும் அதிக ஒளியதால்;
உரைசெயற்கு அரிதாய நிறத்ததால்;
ஒப்பு இல்லாத வெண் முத்த நிறத்ததால்; (37)
"மீன் அஃது ஒன்று,உயர் வான்இழிந்து, என்கரு
மேவு பையினை மேவி, விளங்குமால்;
ஆனந்தம் பெருகிப் புளகாங்கிதம்
ஆர்ந்துஉள்ளேன் என்புஉருக, என்அன்பனே."(38)

மற்றை நாளினில், மன்னவன், தன் அவை
மந்திரக் கிழ வர்க்கு அஃது உரைத்திட,
கற்ற மேதை ஒருவன் கழறுவான்:
"காரிகையின் கனுப்பயன் கேட்டியால்: (39)

"உன் குலத்தில் ஓர் உத்தமன் உற்பவித்து
உலகு அனைத்தையும் ஓம்பினும் ஓம்புவன்;
நன்கு மானிடர் நண்ணு தவத்தினால்,
நல்தவர்க்கு அரசு ஆயினும் ஆவனே." (40)

வேறு.

தின்பதுஒன்றும் வெறுக்காமல், திகழ்தனம் கண்
கறுக்காமல், தேவி, மாதம்
ஒன்பதொடு ஒன்றுஉற்றிட, ஓர் நண்பகலில்,
உலும்பினிக்கா உறைந்த காலை. (41)

'வரும் துயரில் வருந்தி, இவண் அரும்துயரில்
வதிந்து, உழல்வர், மனிசர்' என்றே
தரும் தொல்மொழி பொருந்தாமல், தாய் சிறிதும்
வருந்தாமல், சனித்தான் செல்வன். (42)

வேறு.

மரங்கள், ஆசையின் வணங்கி நீழல்செய
வாச நீர்மலர் தெளித்தவால்;
குரங்கம், நீள் அருவி, துள்ளவே, இனிது
கூவி ஆடுவன புள்ளினம்; (43

பூமி எங்குமகிழ்வு உற்றி டப்புதிது,
பூவை மாயை மகிழ் முற்றினள்,
சாமி எங்கள் தலை மேவு தாள்மலர்
தரா தலத்தின் உறு போதினே. (44)

உத்த மக்குரிசி லுக்கு ஓர் ஆண்மகவு
உதித்தது ஓர்ந்த நகர் வாசிகள்,
தத்த மக்கும் ஒரு மிக்க ஆண்மகன்
சனித்தது என்ன மகிழ் தந்தனர்; (45)

அரச மாளிகை, விதானம், வாழை, கொடி,
ஆதியால் அழகு அமைத்தனர்;
முரசு, தாரை, முரல்சங்கு, பேரிகைகள்
முதல் இயம்பல முழக்கினர்; (46)

ஆரணங்களும் முழங்க, அஷ்ட உயர்
பூர்ண கும்பம் முதல் ஆனவை,
வாரணங்கள், விசைமா, ரதங்கள்மிசை
ஏந்தி வந்தனர்கள் காணவே. (47)

வேந்தன், அன்று உவகை எய்ந்து, தோளிணைகள்
வீங்கி, ஓங்கி உயர் வீரமோ,
ஈந்தனன், இருகை சேர்தும், ஓய்ந்திடுதல்
இன்றி, ஈடு உயர்வில் தானமே. (48)

வேறு.

"தவக்குன்ற ஒன்று எனக்கு உளதை இன்று நிரப்
பியதால், 'சர்வார்த்த சித்தி'
இவற்கு உறுபேர்" எனக்கழறி, 'சித்தார்த்தன்'
என்றும் அழைத்து, உவந்தான் வேந்தே. (49)

வேறு.

அந்தநாள், வயது அந்தம் எய்திய
அந்தணன், அசிதன் பெயர்,
ஐம்புலன்களும் வம்பொடுங்கிடும்
ஆறு, நெஞ்சம் அடங்கினோன்
வந்தனன்; பல வந்தனுதிகள்
செய்து, மன் வழி பட்ட பின்,
தன் புதல்வனைத் தாபதன்சரண்
வைத்து, 'உன் ஆசிகள் தா' என, (50)

அசித மாமுனி வன், குனிந்து, கண்
ஆர நோக்கியே "அற்புதம்!
அற்புதம்! பதி ஞறிரண்டு உயர்
அங்க லக்ஷணம் ஆதிய

உசித மாகவே ஒளிர்வ; யான்வணங்கு
உத்தமன் இவன் உண்மையில்;
ஒப்பி லாது உயர் மன்ன! நின்குலம்
ஓங்கி வாழி பல் ஊழியே! (51)

"என்று சாவு?" என இன்றுகாறும்
இரங்கி ஏங்கிய பாவியேன்,
'இன்னும் ஈண்டுசில் ஆண்டுஇருந்திட
இல்லை ஊழ்'என ஏங்குவேன்;

இன்று சாமியை என்கணால் இவண்
கண்டிடும் கதி ஏற்றதும்
என் முனோர்தவம்; ஏழை முற்றும்
இருந்து கண்டிட நோற்றிலேன். (52)

"மானுடம் என ஓங்கும் ஓர்மரம்,
மக்கள் யாவரும் உய்ந்திட,
மலருமேபல கற்பநாள்களில்
வாச மாமலர் ஒன்றினை:

"ஞான மே மணம், இன்னருள் நறை
ஆக, ஞாலம் எங்கணும்
நலம் உறும்படி வீசி, அம்மலர்,
நன்கு அளித்திடும் அன்பினே. (53)

"அன்னது ஓர் அரும் புத்த மாமலர்
ஆகும் ஈது; அறி, மன்னவா!
ஆயினும், இதை ஈன்ற மேன்மையின்,
அன்னை ஆகும் இம்மாயை தான்,

இன்னும் யாதும் ஓர் இன்பு துன்பை
இயைந்திடும் இழிவு இன்றியே,
எய்வளே இனும் ஏழு நாள்களில்
ஈடு இலா உயர் வீடு அரோ." (54)

ஈது உரைத்து, வணங்கினன் முனி,
ஏந்தல் ஏதும் இயம்பிலன்;

'இல் இறக்கும், மகன் துறந்திடும்'
என்னவே உளம் ஏங்கினன்.
போதுஓர் ஏழ்செல, அந்தி வேளையில்
பூவை தான் உறங்குற்றனள்,
பொலியும் இன்பலோகத்தில் அன்பு
பொருந்து கண்கள் விழிக்கவே. (55)

வேறு.

'மா உயிர்ப்பதி' எனும் மங்கையர்க்கு அரசியை,
'மைந்தனுக்கு அமுதினை உதவு' என
ஏவினன் அரசு; அவள் இளமுலை பருகின
இன் அருள் வழிபுகல் இதழ்களே. (56)

ஆண்டு இரு நான்குகள் ஆகவும், 'தோன்றலுக்கு
ஆசிரியத்துவம் வகி' என
வேண்டினன் வேந்தனே, மேதையாம் வேதியன்
மித்திரன் தன்னையே மகிழ்வினே. (57)

அன்ன ஆசாரியன் சொன்னகாயத்ரியை,
பன்னுமுன் ஆக்கினன் அழகுற
மன்னுபல் மொழிகளில், சின்னவன்; மாதவன்
மற்றுமே எண்ணையும் மொழிகுவான்: (58)

"மைந்த! ஒன்று ஆதிய தந்திடு இவ்வாறு" எனக்
கூறிவாய் மூடுமுன், வரதன் தான்,
அந்தம் இல் கோடி, மாபத்மம், ஆசங்கைகள்
ஆதிய ஓதினன் துரிதமே. (59)

பின் உறும் எண்கலை, முன் உறும் தாழ்வொடும்,
சாக்கியன் பேசிட முழுதுமே,
அன்னவன் தாள்பணிந்து, "ஓதுதல் இன்றியே
அறிகுவை யாவுமே, அழகனே! (60)

"ஆதலின் நீ எனக்கு ஆசிரியன்" என,
ஆசையில் போற்றினன், மறையவன்;
நாதனும், ஓதல் இல்லாது, உணர்வு ஒன்றுமோ,
நல்லது ஓர் சீலமும் நிறையுமே. (61)

"இம்மகனைப்பெற அம்மையும் அப்பனும்
எம்மகம் செய்தனர் ?" எனும்உரை
விம்முற; எங்கணும், யாவரும் மெச்சிட
மெய்ம்மையும் செம்மையும் கனியவே. (62)

இன்மொழி இன்றிஓர் வன்மொழி தருகிலன்;
யாரையும் என்றுமே இகழ்கிலன்;
நன்மதி, ஞானமோடு ஆண்மையும் மல்கினன்;
நல்அருள் கூடினன், புகழினே. (63)

திளைத்திடும் கானக வேட்டையில் தான்சயம்
சேர்வுறு போதினில், அருகனும்
இளைத்திடும் மான்தனை ஏகவிட்டே, அதன்
இன்னலை எண்ணி நெஞ்சு உருகுமே. (64)

ஊன்உறு துன்புஇது, நோவுஇது, என்னவே
ஓர்கிலன் ஆயினும், ஆதியன்,
தான்அறியாது தழைத்திடும் தண்ணளி
தாங்கினன், எவ்வுயிர் மீதுமே. (65)

வேறு.

அந்நாள் வசந்த ருதுவினில், ஓர்
அந்தி யினில், தம் சேக்கையினைத்
துன்று நின்ற தூ அனங்கள்,
தூண்டு காதல் துலக்கவழி, (66)

வான் ஆறு இலங்கு வெண்திரை போல்,
வரிசை யாசப் பறந்தேகத்
தேன்ஆர் தாரான் தேவதத்தன்,
தெரிந்துஓர் வாளி தொடுத்தனனல். (67)

சொல்லம்பு உற்ற குலமக்கள்
தூய உளம்போல் துடிதுடித்து,
வில்லம்பு உற்ற வெள் அன்னம்,
வேந்தன் மகன்முன் வீழ்ந்ததுவே. (68)

எடுத்தான் அதனை இருகரத்தின்;
இதமாய் அம்பை வெளி இழுத்து,

அடுக்கா மருந்துத் தளிர்தேனை
அமைத்தான் விரணம் மீதுறவே. (69)

தன்நெஞ்சு என்னப் பதைபதைக்கும்
தனிப்புள் நோவு பயம் தவிர,
மன்னன் சிறுவன், மலர்க்கரத்தால்
மடிமேல் தழுவி அணைத்திட்டான். (70)

நோவுஒன்று அறியான், அவ்வாளி
நுனியைத் தன்மேல் அழுத்தினன்; "ஐ
யோ!" என்று இரங்கி, உளம் உருகி,
அணைத்தான் திரும்பி, உவப்புடனே. (71)

அப்போது ஒருவன், ஆண்டு எய்தி,
அடி தாழ்ந்து, "ஐய! என் நாதன்
இப்போது எய்தான் எழில் அன்னம்,
ஈண்டே வீழ்ந்தது, அப்புள்ளே. (72)

"தருவாய்," என்ன, சித்தார்த்தன்,
"தாரேன்; அண்ணன் தேவதத்தன்
குருவா ளியினில் இறந்தது எனில்,
சொன்னாற்கு உரித்து இக் குருகு ஆமே. (73)

"அவ்வாறு இன்றி, இதன் விசையே
அழித்தான் அண்ணன்; ஆதலின், ஈது
ஒவ்வா உரை" என்று உரைத்திடலும்,
"உயர்வான் அதனில், காடுகளில், (74)

"மனம் போம் வழிபோம் மா பறவை,
மண்மேல் வீழ்த்தி யவற்கு உரிய
எனவே வழக்கால், இதைத் தருவாய்"
என்றான் தேவதத்தனுமே. (75)

அன்னம் தனைத்தன் திருமுகத்தோடு
அணைப்பான் ஆகி, அருள் நெறியோன்,
துன்னும் அருள், சாம் பீரியமும்
துலங்கச் சொல்வான் எதிர் மொழியே: (76)

## வேறு.

"சீவனும் ஒரு பொருள் ஆயின், அச் சீவனைச்
சீறியே செற்றிடத் தேடுவான் தன்னதோ,
ஆவலின் ஆதரித்து அருள்செயும் அவனதோ
ஆகும், அவ் ஆருயிர்? யாருமே தேருமே. (77)

"என்னதே இன்னதாம் அன்னமும்; இன்னும் என்
இன்அருள் ஆணையில், எண் இலா மண்ணில் ஆம்
மன்உயிர் என்ன ஆம்; அன்னவில் முன்னதுஇவ்
வன்னம் ஆர்புள்; என்உள் மன்னும்என் வாஞ்சையின், (78)

"தண்அருள் தன்னின், யான் ஓர்குவேன்; தாரணி
தங்கிடும் எதுமே துன்பு உறு வீதமே
பண்ணும் ஓர் நீதியை மண்ணின்மேல் ஒதியே
பண்புறச் செய்குவேன், பார் எல்லாம்உய்கவே" (79)

## வேறு.

அருள்ஆர் அருமை இளவலே, மற்று ஒரு நாள்
அரசன்: "நமது அரசின் திருஎதும்
தெருளாய் சிறிதும்; சென்றுஇனிது தெளிவாய்,
செல்வ!" என உரைக்க, இருவோரும், (80)

குதிரை ஏறி, குறைஅறியாக் கொழுநாடு ஊடு
கொண்டுசெல, குளிர்சீதம்,
மதுர வாசம், மது மருவி, வசந்த மாருதம்
வழியில் வளர்போது, (81)

குதிக்கும் கொழுவை மிதித்து, உழவர், கொழுத்த
நிலத்தைக் கிழித்து ஓட்ட குனிந்து உன்னிப்
பதைக்கும் பகட்டைப் பயம்தேற்றி வெருட்டி,
பலத்தை மிகப்படைக்கும் வினைஉன்னி, (82)

எழுந்து புரள இருபுடையும், ஏர்க்கால் அழுந்த
உழுபுலமும்; எழில்கேணி
ஒழுங்கும்; பழங்கள் தரையில் விழுந்து உருளும்
மரங்கள் வனனும்; உயர் பொழில்காணும் (83)

சுனையும், தடமும், அருவிகளும், துள்ளும் விலங்கும்,
புள்இனமும்; துளிர் உச்சி
நனையும் படி, விண் முகில்தடவும் நானா வித நல்
மரவகையும்; வளர் இச்சை (84)

கொண்டு மருவி, வாய்முத்தம் உண்டு, குலவும்
குறிப்பு இது எனப் படர்ந்து ஓங்கி,
தண்டு முதலாத் தலைக்கொம்பர் வரையும்
மரங்கள் தமைத்தழுவும் கொடிமாண்பும்; (85)

மணற்குன்று ஆடும் மதலையைப்போல், மகிழ்ந்தே
செல்வி விளையாட, வளம்ஓங்கி,
பணக்குன்று, ஒளிரும் மணிக்குன்று, கணக்கின்று
ஓங்கு பலதெருவும்; உளம் ஓங்க (86)

விருந்தும், பாட்டும், உண்டாட்டும், விரவி முழங்க
விழா எடுத்தும்; களிமேவிப்
பொருந்து மணங்கள் உவந்து, மகிழ்பொலியும்
பொருளோர் திரள்குழுவும்; தெளிவாக, (87)

நாட்டின் மாட்சிக்கு உறு சாட்சி நாட்டு
காட்சி நனிகண்டு களி என்றே
காட்டினான் சுத்தோதனமன்; கண்டான்,
காணாப் பிறபலவும், தெளிவு ஒன்றி, (88)

பெருமூச்சு எறிந்து, பேசிடுவான் புதல்வன்:
"பெரும ஈதோநம் பெருவாழ்வும்!
வருமூச்சு அதனில் உயிர்தேய வருத்தி எருதை,
வழிவேர்வை தரைவீழ (89)

"உழைத்தே, உழவர் அரிதுஆக உயிரை உடலில்
ஓம்பிடும் இவ் ஊண் ஊணே?
பிழைத்தே பிறரைத் துன்புறுத்தும் பெருவாழ்வு
அன்றிப் பிறவாழ்வைக் காணேனே! (90)

"எறும்பு, பல்லி, எலி, பாம்பு, பறவை, இகல்மா,
எறிவேடு, என்று இவ்வாறே

குறும்பும், கொலையும், கோளாறும், குழம்பிக்
கொதிக்கும் கொடுநரகோ, இவ்வாழ்வே! (91)

"மண்ணோ, விண்ணோ, மரக்கொம்போ, மலையோ,
நீரோ, எங்கணுமே வாழ்வாக
ஒண்ணு உயிர்கள், ஒன்று ஒன்றை ஒறுத்தும்,
ஒழித்தும், உவந்து உய்யும் பாழேயோ! (92)

"அந்தோ, அரச! உளம் உருகும்; ஈதோ காண
வந்தேன்!" என்று அரையாமம்
தன் தேகத்தை, தந்தையினை, மறந்தே
தவத்தில் இருந்தான், மற்று உரையாமே. (93)

---

## திருமணம்

மூவாறு கொண்டு உள்ள வயதும்
முடிந்து ஏற, முடிமன்னவன்,
தேவாதி தேவன் தன் செயல்கண்டு,
சிந்தா குலம் துன்னவே: (1)

"ஏவர்க்கும் இயலாத இன்பத்தின்
எல்லைக்குள் இவன் ஒல்லவும்,
ஆவல்கண் அவை ஏதும் நுகரான்,
உபேக்ஷைக்கும் அளவில்லையே. (2)

"கடன் உற்ற வறியோரனில் கையற்று,
கரை மீறு கவல் சுற்றவே,
மடன் உற்ற, நஞ்சு உற்ற, பேய் உற்ற
மகன் என்ன, மயல் முற்றியே. (3)

"நீர் உற்ற விழியும், நெருப்பு உற்ற
நெஞ்சும், நெடும் மூச்சும், இப்
பார் உற்ற பழியாவும் தான் உற்றது
எனலாகும் ஒரு பேச்சுமாய், (4)

"என்னே! என் இல்லும் இறக்கப்
பிறந்திட்ட இப் பிள்ளைதான்,

அந்நாள் அவ் அசிதன் அறைந்திட்ட
ஆறே தவம் கொள்ளுமோ? (5)

"யானும் என் அரசும் இனிச் செய்வது
யாது?" என்று சுத்தோதனன்
தான் உற்ற தாபம் சபாமக்கள்
தம்முன் தவித்து ஓதினன். (6)

பல ஆறு பலர் கூற, மறை ஆளன்
ஒருமேதை பகர்வான் விடை:
"தலைவா! உன் உள்ளத்து உறுத்தும்
சலம்தீர்க: உயர்வான் இடைத் (7)

"திகழ் தேவர் தொட்டு ஓர் தினத்து
ஊடுதேயும் உயிர்காறுமே
திகழ் யாவும், நேயப் புகழ் மாரன்
மாயத்தின் நெறி மீறுமோ? (8)

"சுவர்க்கம் மறக்க, தவத்து ஆறு
இறக்க, துகள் வீங்கிட,
பவர்க்கம் படற்கு ஆகு பழிபாவம்
என்னும் பயம் நீங்கிட, (9)

"செய்தே சயம்கொண்டு திகழ்மோக
மடமாதர் சிற்றின்பினில்
எய்தும் சுகம் ஏதும் அறியான்
இளம் தோன்றல், மற்று இன்னுமே. (10)

"ஈன்றிட்ட தாய்நேர்வும் எண்ணாமல்,
அன்னாளை இடர் வீழ்த்தியே,
சாந்து இட்டும், வாசச்சவாது இட்டும்,
பாதத்தில் முடிதாழ்த்தியே, (11)

'தாயே! என் குல தெய்வமே' என்று
சாதுக்களும் தாழவே
மாயைகள் வல்லார், மதர்க்கண்
கயல்கண் வலை ஏழையார். (12)

"இருப்புத் தளைகொண்டுமே கட்டொணாது ஓங்கி
எழும் எண்ணமும்
விருப்பு உற்ற மெல்லுதி ஒன்றன் தளை
மீறிடற்கு ஒண்ணுமோ? (13)

"அன்னார்கள் மயல் என்னும் அந்தா
மரைபூத்த நெஞ்சத்தடம்,
மன்னாது, அவ்விலைமூட, வான் உற்ற
சாயைகள் கிஞ்சித்துமே" (14)

என்றுஓத, இறைகூறும்: "தன்காதல்
தானே இயைந்து அன்றியே,
நன்றுஓத நாம், அவ்வழிக்கொண்டு
மைந்தன் நயந்துஒன்றுமோ?" (15)

அதுகேட்ட மறை ஆளன்: "இசைவேட்ட
அரசே! உன் அகல்நாட்டில், நீ
வதுவேட்ட அவைகூட்டின், உறுதேட்டம்
வாய்ந்து, உன் மகன் வேட்குமே." (16)

வேறு.

'வேதியன் ஓது உரை நீதமே;
காதலன் நோதரும் வேதனை
போதுறும் யாதுமே, மாதரின்
காதலே மோது உறு போதினே' (17)

என்னவே மன்னவன் தன்னுளே
உன்னுவன், பன்னுவன் இன் உரை:
"தொல்நகர் தன்னில்வாழ் மெல்நலக்
கன்னியர் துன்னுறல் உன்னியே, (18)

"எண்ணினன் என்மனை தன்னில் ஓர்
பொன்அவை; அன்னதில், இன் எழில்
கண்ணிய பல்நலம் முன் உறும்
கன்னியர், இன்மகிழ் துன்னுற, (19)

"என் இளம் சின்னவன், தன் அருள்
தன்னொடு நல்குவன், இன்ஒளி

மின் உறு பொன் அணி; என் மனை
துன்னுக மின்னவர்'' என்னவே. (20)

அரசு உரை முரசுகள் உரைசெய,
அரசு இளங் குரிசிலே துரிசுற,
வரிசையின் அருள்செயும் பரிசுஎன,
வரிசையின் வனிதையர் வரல் செய்தார்: (21)

அம்சிலம் பும், சுருள் குஞ்சியும்,
அஞ்சனம் நஞ்சுஎன மஞ்சர்கள்
அஞ்சியே நெஞ்சு அயர் கஞ்சம் ஆம்
அம்பகமும், அரி பம்பவே; (22)

கொஞ்சு இடையும், சபை மஞ்சர்கள்
நெஞ்சமும், சஞ்சலம் மிஞ்சவே;
வெம்சிலை மஞ்சனின் செம்சரம்
அஞ்சினில், கஞ்சமே விஞ்சவே; (23)

இந்திரன் அம்தனு மண்தலம்
பந்தியில் வந்தன என்னவே,
மின் துவள் கின்றதின் வந்தனர்,
பொன்கலை நன்கலம் மின்னவே. (24)

வேறு.

அரசு அவை முன், பல கலைகளை நன்குஅறி
உயர்குல மங்கையர் அவையோதி,
வரிசையின், இன்பொடு, பரிசுகள் பண்புற
அருள்சய துங்கன் முன் வருபோது. (25)

எளியவர் புங்கவன் எழில் நலமும், திரு
முக மலரும், தமது இருகண்ணும்
உளமும் மகிழ்ந்திட, உரையும் நெகிழ்ந்திட,
உதறுவர் கண்டிட, உயர்வு எண்ணி. (26)

நாணமும், நெஞ்சுஉறு காதலும் விஞ்சுற,
நாரியர், தம்தலை நிமிராமே
காணவும் அஞ்சியே, கான் உறு மென் பிணை
மானின் மருண்டிடல் கவின் ஆமே. (27)

பரிசில்கள் தம்கையில் அருளிடும் இன்பொழுது
அரசு இளை ஞன் கரம் படுவேளை,
முரசின் அதிர்ந்திடும் இதய மொடும்,
கிளை முடுகி அடைந்தனர், மடவாரே. (28)

வேறு.

இந்தவாறு, பல நற்பரிசு எலாம், இறை மகன்,
இன் எழிற்குல மடந்தையர்கை ஈந்த அளவில்,
வந்து நின்றனள் யசோதரை: 'ஓர் வானமகளோ?
மற்று நாகர் உலகு உற்றுவரு மங்கை இவளோ?' (29)

என்ன யாவரும் மயங்கிட. இமாசலம் முனுள்
ஈன்று அளித்துள இளம்பிடியின் பீடு நடையும்;
மன்னு சிற்பி, வினைமாண, மட மாதர்களுமே
ஆண்மை வேட்டுஉளைய, வார்த்ததுஎன வாய்த்த உருவும்;()

காதல் முற்றுபிணை மானின் மதர்வுஉற்ற விழியும்;
கம்பர் ஆதிபுலவர்க்கும் உரை சொற்றிட ஒண
ஓதுதற்கு அரிய சோதி எழில் பெற்ற முகமும்;
உற்ற அன்பின்;உடல் ஒட்டி ஒளிர் பட்டு உடையுமே; (31)

காண, அக்கணம் வெடுக்கென எழுந்து, இளவல்தான்,
கன்னியை முனம் அறிந்தவரில் நோக்குதலுமே,
நாணலள், நளின இன்வதனம் கோட்டிலள்; அவள்;
நாதனை எதிர நோக்கி, எழு புன்னகையுடன்: (32)

'என் தனக்கும் எதுவேனும் ஒரு பரிசு இலைகொலாம்?"
என்ன, ஏந்தல்: "எழில் மாதர்கள் சிரோமணியனுய்!
உன் தனக்கு உரியதாக இஃது" என்று, அழகுசால்
ஒளிரு பச்சை உறு கண்டசரம் ஒன்று, தனது (33)

கழுத்து அணிந்ததை எடுத்து, அவள் உடுக்கு இடையினில்
கட்டுபோது, அவர்கள் கண்கள் களிகொண்டு கலவ,
விழுத்த காதலும் பழுத்தது; அது கண்ட கிழவோர்
வேந்தனுக்கு உரை விளம்பினர்கள், விழுமிது எனவே. (34)

## வேறு.

பின்னாளில், புத்தனை, "முன்பிரிந்தார் என்னும்
பெற்றியினில், யசோதரைபால் உற்ற காதல்
என்னோ?" என்று உரைவினவ, இயம்பும்: "யாமும்
ஏனையரும் அப்பொழுது எண்ணியவாறு இன்றே. (35)

"கடந்த ஒரு பிறவியில், ஓர் காளை, வேடர்
கடுங்குலத்தோன், கான் அகத்தில், ஒரு நாள், கன்னி
மடந்தையர்கள் விளையாட்டு மகிழ்ந்து கண்டு,
மலர், இறகு, கனி முதல பரிசு தந்து, (36)

"ஒருகுமரி தரு மயலில் உருகி, அன்னாட்கு
உயர் பரிசும், தனது உளமும் உதவினான்; அவ்
இருவருமே யானும் யசோ தரையும், காணீர்!
இடும் விதை ஒன்று, எழில் வானம் வறந்த நாளில், (37)

"வறிது கிடந்து,ஒரு மழை வந்து உறலும், மண்மேல்
தலைகெழுமி, மாட்சியுற வளர்தலாகும்
முறைதனில், இம்மாய உயிர் வாழ்க்கை நாளில்,
முளைத்து உறுமே, முன்பு பல பிறவி வாய்ந்த (38)

"இன்பு துன்பு, பகை உறவு, நன்மை தீமை
இறந்த எலாம், பிறப்பு இறப்பு ஆம் ஈறுஇல் ஆழி
தன்படியே சுழல்பொழுது; தகவும் ஈதே,
தரிசனத்தில் எமக்கு மயல் சனித்த ஆறே". (39)

## வேறு

நந்தன் யசோதரைபால் நசை உற்றது கேட்ட
தந்தை, அவள் தந்தை சம்பந்தம் வேண்டிடலும், (40)

"இறைவா! பலர் ஆகும் என் மகளை இச்சிப்போர்;
முறையாப் பரி ஏற்றம், விற்போர், முதல் ஆய (41)

"தம் உள் தகையோர் இகலி, சயித்தோனே,
விம்மும் இருபுயமும் நெஞ்சும், விழைந்தவளின் (42)

"மாலை மகிழ்ந்து அணிதல் நம்உள் மரபு ஆகும்;
நாணும் அறிகுவை நீ அன்றோ? நலம் உறவே, (43)

"உன்சேய், பலர்காண ஒத்தோர் உடன் இகலி,
இன்றே சயம் உறுமேல், இன்றே எனது அருமைப் (44)

"பெண்ணும் அவற்கு உரியன்; பித்தன், துறவி, என
எண்ணம் பலஆருய் எங்கும் இளவல் இவன், (45)

"எவ்வாறு இகல் மணப்போர் வெல்லும் இவனை உற?"
இவ்வாறு உரைத்தான், யசோதரையை ஈன்றேனே. (46)

மன்னன் மருங்கு அடைந்து, மைந்தன், "யசோதரையை
என் இன் துணைஆக ஈவாய்" எனவேண்ட, (47)

மாதை அளித்தோன் மறுமொழியை உள்கொண்டு,
தாதை தயங்க, தநயன், அதை அறிந்து: (48)

"தந்தாய்! அறிவேன் தனுப்போர் முதல் ஆய;
சிந்தா குலம் தீர்ந்து, 'தெய்வ மகள் அன்னுளை, (49)

"வில், வாள், பரி, இவற்ருல் வெல்வார்பெறுக" எனச்
சொல்வாய்" எனப்பணிந்தான்; சொன்னுன் சுத்தோ
தனனே. (50)

## வேறு.

மன்னவன் ஆணையில் மங்கையை நாடிய
மைந்தர்கள் வந்தனரே,
சொன்ன, வில், வாள், பரி, என் இவை தோன்றிய
சூரம் விளக்கிடவே. (51)

நந்தன், அருச்சுனன், நாயக வெண்குருகு
எய்துள தத்தன், என
வந்தனர் சாக்கிய வீரர்; பல்லாயிர
மாந்தரும் வந்தனரே. (52)

நங்கையர் வந்தனர்; நால்திசை நாடுள
நம்பிகள் வந்தனரால்;
மங்கையை நாடிய மைந்து இகல் காணிய
வந்து மிடைந்தனரே. (53)

பரிசுஇவன் என்றுபல் முரசம் அறைந்திட,
பரிசனம் சுற்றுறவே,
உரைசெய்வ தற்குஅரும் அழகி எனச் சொல்
யசோதரை உற்றனளே. (54)

மன்பதை உய்ந்திட வந்தவ னும்கதி
வாய்ந்துஉயர் கண்டகமே
என்பதுஓர் மாவினில் எய்தினன்; இன்ப ய
சோதரை கண்டனனே. (55)

'இன்னது ஓர் இன்எழில் தான்உற உன்னுவன்,
எல்லவர் தம்மினுமே
உன்னதம் மன்னிய முன்னவன் அன்றுஎனில்
ஒல்லுமோ?' என்று உனியே. (56)

"வருக, எனைப்பொருது உயர்வு படைப்பவர்
பெறுக வளைக்கை" என,
"தருக தனுச்செரு" எனஎதிர் உற்றனன்,
தனுஉயர் தத்தன் அரோ. (57)

வேறு.

ஆறு குரோசம் உயர் தூரம் ஆனதையும்,
நந்தன், அம்பின் உற எய்தனன்;
மாறி, மற்றும் ஒரு குரோசம் எய்தனன்,
அருச்சுனன், எவரும் மகிழவே. (58)

நால் இரண்டின்உறு குரோசம், மன்னரும்
நடுங்கிட, தனது நாணியும்
ஓலம் உண்டுஅதிர, தேவ தத்தன்உயர் வாக
எய்து நிமிர்வு உற்றனன். (59)

பத்து எனும்நெடிய தூரம், உற்றகுறி
பார்க்க வும்அரிய தாகவே
வைத்து, மன்இளவல், வாங்கி ஓர்தனு
வளைக்க, அத்தனு முறிந்ததே. (60)

"என்ன! வீரர்புயம் ஏற்ற வில்எதுவும்
இல்லை கொல்?" என, இயம்புவார்:
முன்னம், ஓர்கடவுள் அன்ன தீரன், உயர்
சிங்க பானு, புகழ் மொய்ம்பினன், (61)

"கொண்ட வில்உளது கோயிலில்; பெரியர்
கண்டிலேம், அது குனித்தபேர்:
கண்டுகொண்டு, அதனில் வென்றிடு" என்று, இருவர்
கடிது அதைக்கொணர ஓடினர். (62)

கார் உருக்கில் உயர் பொன் இழைத்து ஒளிசெய்
கார்முகத்தை அவர் கொண்டு உற,
பார் உருக்கிஉயர் பாதகத்தை, அரு
ளால் அகற்ற வரு பகவனே, (63)

வாங்கினன் அதை; வலித்து நோக்கி, எழில்
நந்தன் ஆதிவய மைந்தரை:
"பாங்கரே! சிறிது தாங்குவீர் இதை" எனப்
பகர்ந்து, அவர்கை ஈதலும், (64)

நாணி ஒட்டிடவும் ஆண்மை அற்று, அவர்கள்
நாணம் உற்று, இகழ்வில் நின்றிட,
தோள்நிமிர்த்தி, அதை நாண் உறுத்தி, எளிதே
குணத்தொனி தொனித்தனன். (65)

பின்பு, எடுக்க ஒரு வாளி, கைஅது
பிழைக்குமோ, எனும் ஓர் ஐயமே,
துன்பெடுத்தது யசோதரைக்கு இதயம்,
தூரம் உள்ளதனை உள்ளியே. (66)

விடுத்த வாளி, குறி உற்று அஃது ஊடு உருவி,
மிக்க தாம்வழி அடுக்கவே;
எடுத்த வாளின் ஒரு பாதபத்தை, இரு
துண்டு இயற்றி, இது செய்கென,  (67)

தேவதத்தன் உரை ஆட, நந்தன், அதின்
மிக்கது ஒன்று சிதை செய்தனன்;

மேவு அருச்சுனன் மிகப்பருத்தமரம் ஒன்றை
மேதினியில் வீழ்த்தினன். (68)
அண்ணல், வாளினில், இரண்டு பாதபம்
அடுத்து நின்றிடுவ வீசலும்,
நண்ண நண்பர் நகை, நங்கை நைதல் உற,
நட்டம் ஆக அவை நின்றவே. (69)

'வாள் பிழைத்தது' எனவே மகிழ்ந்து உரைசெய்
போது, மாருதமும் வந்து உற,
கோன் இழைத்தமுடி மன்னர் கொற்றம் என,
அற்று வீழ்ந்த, அவை குப்புற. (70)

'நன்று! நன்று! இஃது இவன் வாளின் ஆண்மை!' என
நாவு சென்னிகொடு மெச்சினர்,
அன்று கண்டவர் அனைவரும்; அரிவை
ஆசைமிக்கு அடைய உச்சமே. (71)

பின்னர், மாவின்வரும் ஐவகைக்கதிகள்
பெட்டபோது, பிற பின்பட
முன்னர் உற்றது உயர் கண்டகம்; அதனை ஓர்ந்து
மற்றவர்கள் மொழிகுவார். (72)

"மாவின் உற்றசயம் ஆகுமே அலது,
மைந்தன் உற்றசயம் ஆகுமோ?
ஏவர் உற்றிடினும் ஈது வெற்றிதரும்;
ஏற்றம் என்பது ஒரு நாளுமே (73)

"கண்டிடாத ஒரு மாஎனில், கடிது
காணல் ஆகும் எமது ஆண்மையை;
கொண்டு வாரும், உளது என்னில்" என்று அவர்கள்
கூறவே, சிலதர் போயினர். (74)

மா நிலத்தில் வளர் பாவம் அத்தனையும்
வந்து கூடி உறும் மை எனும்
மேனியில், கனலும் வெகுளி மட்டும் இரு
விழியினில் குழுவி மின்னவே; (75)

கொல்லர் ஊது உலையின் நாசியும்; குயவர்
திகிரி கொள்ளும் ஒரு கதியுமாய்,
மல்லர் சங்கிலியின் ஈர்த்து வந்தனர்கள்,
மத்தம் உற்ற ஒரு மாவினை. (76)

தத்தன் ஆதிஉயர் சாக்கியர், தமது
ஆண்மை, மொய்ம்பு, இகல், தருக்கு இவை,
வித்தை கற்றபல காட்டியும், வெரிநை
மேவி ஓர்கணமும் வீற்றிலார். (77)

அருச்சுனன் ஒருவன் மட்டுமே, அதை
அடக்கி ஏறிவரு போதினில்,
பொருக்கெனத் திருகியே கடித்து அவனை,
பூமியில் புரள வீழ்த்தியே. (78)

குளம்பு கொண்டு கொலை கண்டிடும் குறி இஃது
என்னவே, குதிகள் கொள்ளலும்,
உளம் புழுங்கு பல மாவலர் கடிது
சென்று, அவன்தனை ஒதுக்கினர். (79)

'குதிரை அன்று இஃது ஓர் பூதமே; மெது
கொற்றவன் மதலை உற்று இதை
எதிரின், இன்று இவனை ஈறு கண்டிடுதல்
திண்ணம்' என்று அவை இரங்கவே; (80)

கன்னி, கைவிரல் நெரித்து, நைய உளம்,
கண்டுளார் பிறர் கலங்குற,
மன்னவன் சிறுவன் உற்று அடைந்து, வெறி
மாவின் உச்சிமயிர் பற்றினன். (81)

உயிர் அனைத்தும் அபயம் கொடுத்து அருளும்
உத்தமத் திரு வலக்கையால்,
செயிர் முகத்தை, இரு விழிகளைத் தடவி,
ஒன்று செப்புதலும் செவியிலே: (82)

வேறு.

பொருள் உற்றேன் பெருமிடியோ, வெயில் உற்ற
பொதி இருளோ, பனியோ, புத்தன்

அருள்உற்றேன் ஆணவமோ, யாது உரைப்பேன்
அம்மாவின் வெம்மை, அம்மா! (83)

தலை தணிந்து, கதம் தளர்ந்து, தன்தாபம்,
மதம் ஒழிந்து, சாந்தன் ஏறும்
நிலை பணிந்து நின்றிடலும், அவன் ஊர்ந்து
நெடும் கதிகள் நிகழ்த்தினனே. (84)

'சித்தார்த்தனே சிறந்தோன், திகழ் மாதும்
அவன் உரிமை' என்றே தேவ
தத்தார்ச்சுனர்கள் ஆதி யாவருமே
தனித்தனியே புகழ்ந்தார் மாதோ. (85)

கன்னி அவள் திருத்தாதை, சுப்ரபுத்தன்
என்போனும், கனிந்து வாழ்த்தி,
'என்னவளாம் இன்னவளும் உன்னவளே
இனி' என்ன இயம்பினனே. (86)

வேறு.

தாதை யோடு, தன தாதி மார்கள் புடை சூழ
வீரவிருது ஓதியே,
தார்படைத்தபல சூரர் உற்று உளைய,
மாரன் வில்கணைகள் தூவிட,
பேதை நெஞ்சுகளி கூர, பேரழகு சேர,
தார் ஒருகை மேவிட,
பேர் படைத்தஇசை சேர் குலத்தள், அடி
பேர்த்தனள், மகள் ய சோதரை. (87)

ஆரு மே வெருவு கார்இருள் பொருவு
மாவின் மீதும் உள ஆதரம்,
அந்த மாவினை உகந்து அணைத்து, அருகு
நின்ற அந்தமுயர் மஞ்சனை,
பாரை மேவிவரு பாவம் யாவும் தனை
நோவல் ஆகும் அருள் நெஞ்சனை,
பந்தம் உந்துமயல் தந்து, உவந்து, மெல
வந்து அடைந்தனள், ய சோதரை. (88)

நந்தன் ஆதிபல மைந்தர் நொந்து, மனம்
நைந்து, மாலையினை மோதுற,
நங்கையர்க்கு அரசி, மூந்து காதல்தரு
சொந்தம் உந்த, அருள் நாதனை,
மந்த காசம், மனம் மேவு நாணமொடு
வாஞ்சை கர்வம் இவை ஓதுற,
மங்கலக் கடிகொள் மாலைசூடி, மகிழ்
வாய்ந்து, இறைஞ்சினள், யசோதரை. (89)

## வேறு.

பொருமு பல்லியம் பொம் என விம்மிட;
குமுறு துந்துபி கூடியே கும்மிட;
புகழ் படைத்துள பாடகர் போற்றிட;
சமய வேதியர் மாமறை சாற்றிட;
'தருமம் இன்று சுதந்திரம் ஆம்' என
அரச பொக்கிசம் ஆதுலர் தாம் உற;
சகல மங்கலம் எங்கும் தழைத்திட,
சரசமாக எல்லாரும் வழுத்தவே; (90)

குரிசில்கள் பலர் கூடியே மொய் செய,
புனித அங்கியில் புரோகிதர் நெய்பெய,
தொல் குலக்குரு தொன்முறை கூறிட,
வனிதை நெஞ்சு அகம் மாமயல் மீறிட,
இரு தரும்புகள் பாலில் இயைந்து உற,
நங்கை சேவடி அம்மி நயந்து உற,
மல்கு தேன் மண மாலை தன் மார்பிலே
தங்க, மங்கலம் சாக்கியன் நேர்வனே. (91)

## வேறு.

அரசனும் உவந்து, தனது அருமை மகனும் திருவின்
மருகியும் அணைந்து, மனைவாழ்
தருமநெறி தந்து அமர, பெருமை பலஉந்து அரசுஇல்
தனிமையினில் தந்தனன் அரோ. (92)

எமாது பகவன் உளம் எழுந்து, இசை அணிந்து, இவரும்
இன் அருளின் உன்னதம் என,
இமாலயமு மேகிளரி, வான முகடு உற்று, எழில்
இலங்கி உறும் என்ப, ஒருசார். (93)

அவ்அருளின் ஓர்பகுதி இவ்உலகு அனைத்தையும்
அளித்துஅருளும் அருமைதனையே
ஒவ்வும், நதி ரோகிணி அந்நாடு பல போகம்உற
ஓடி, விளை யாடும் எழிலே. (94)

காமவனம் ஒத்துள மலர்ப்பொழில்கள், தாவு அருவி,
தண்சுனைகள், காதல்உறவே
ஏமம்உறு மா, பறவை இன்குரல் இசைத்து, விளை
யாடிடுவ எங்கணும் அரோ. (95)

அன்னதுஒரு காவின்நடு, பொன்உலகு அதின் ஒளிரும்,
அண்ணல், அவளோடும் அழகாய்,
மன்னுசுகம் நண்ணி, உலகு இன்னலை மறந்துபடல்
உன்னிவினை துன்னுமனையே. (96)

காமம்எனும் ஓர்பறவை இன்பமுகடு உற்றுஉலவ,
இன்றிஅமை யாதகதிவாய்
நாமம்உறு நல்சிறகு எனும், இனிய கீதநட
நங்கள் உறும் நாளும் இரவும். (97)

காவிய புராணம்வரு காதைகளில், காமுகர்கள்
காதல்உறும் லீலைகள் எலாம்,
ஓவியம் உயிர்ப் பொறையின் காட்டிடுவ; இன்பம்உறு
கோல்எனும் ஒழுங்கின் எவணும். (98)

சுழ்லுமனம் உன்னியது, சொல்லுமுன மே, நனி
தெரிந்து சுகமாக உதவும்,
நிழலின்வரும் ஏவலர்கள் நிறைதரினும், அற்றம், நிகழ்வு
ஓர்ந்து அவர் நடக்கவலரே. (99)

இரவுபகல் ஈதுஎன அறிந்திட ஒணுதஎழில்
இன்ஒளி, சுகந்தம் உடனே
மருவிவளர் மாளிகையில், மங்கையொடும், எங்கள்உயர்
புங்கவன் மகிழ்ந்தனன் அரோ. (100)

தன்புதல்வன் நெஞ்சம்உறு தன்மையினை உன்னி, உயர்
தங்கம்இயை சங்கிலிஎனும்
இன்புதனை அன்றி, மறுவன்தளையும் எண்ணி, இவை,
மன்னவன் இயற்றினன் அரோ. (101)

ஓய்வுஒழிவு இலாதபடி, மோகம்உறும் ஓகைமிக
ஓங்க, நிய மித்த பின்உளே
ஈயும்நுழை யாதபடி, அன்னதலம் யாவும் எயில்
கொண்டுவளை செய்ததும் அலால். (102)

'நோவு, நரை, மூப்பு, உடலம் மேவிவரு நோய்கள்,
உறுசாவுஎன மறந்துஎனினுமே,
ஏவர்உரை ஆடிடினும், இன்புநிறை இத்தலம்
இருந்து, வெளிஏற்றி விடுமின். (103)

'அத்தகைய சோர்வு எதையும் உற்றவர்கள், அச்சணமே
இப்பதி அகன்று விடுமின்;
செத்தும் வலியற்று முதிர் பூ இலைகளும் சிறுவன்
காணுமுனம் சித்துவிடுமின். (104)

'மீறி, என துஆணை இலதாக, எவரேனும், இவண்
நின்று வெளி மேவமுயலின்,
நூறிடுமின்!' என்றும் உரைதந்தனன் ஓர் தந்தை, மகன்
உள்ளம்உறு நோவுவினைவே. (105)

இந்தவித மாக, ஒரு காமசுகம் என்னும் எழில்
இன்சிறை இருந்தனனரோ,
பந்தம்அற வந்தவினை, பாவமுளை தீய, வழி
பகரவரு மாரசயனே. (106)

## திரு அருள்.

துனிநோவு மிடிசோர்வு முதலாய தொடர்பீடை,
    பிறர்பாலும் அறியாமலே,
மனன்சேயும், எழில்மாது தருகாதல் தனில்மூழ்கி
    மயலாகி மகிழ்போதினே. (1)

தனது ஆர் உயிர் அனுள் தன் உரமீது தலைசார,
    இனிது ஆகு துயில் ஊடுமே,
கனவு ஏதும் உறுபோது, சிலவேளை நினைவு ஊறி,
    கனிவு ஆன பரிவோடுமே; (2)

“எனது ஆகும் உலகே! உன் துனிமேவும், எளிதாகும்,
    விளியாவும் செவிமேவினேன்;
மனது ஆதும்; வருவேன்!” என்று உரையாடும், அளி, சோதி,
    வளமேவி முகம் ஆரவே. (3)

மனையாளும், அதுவேளை, உளம்நோவ, உறுசோகம்
    விழிசோர, “மணவாளனே!
உனையாது துனிமேவ, மனம் நோவும்? கனவு எது?”
    எனவே, தன் நினைவு ஆரவே. (4)

கனிவோடும், அவன், வேறு நகையாடி, கவின்மாதின்
    அயர்வு ஏக, இசைமாதரைப்
புனைதாரின் ஒளிர்யாழின் இசை கூரும் வினை ஏவ,
    மகிழ்வோடு பொழுது ஏகுமே. (5)

வினைமேவு புவி ஆளர் தவமேவ, ஒருநாள் ஓர்
    இசைமாது, விசைமேவியே
வனமேவு வளிசார உறுபோது, வளையாழின்
    வருநாதம் மனம் நாடியே, (6)

நுனிசாளரம் அஃது ஆக, ஒருவீணை தர வேகம்,
    நுழைமாரு தம் மோதவே,
இனிது ஆக உறுநாதம் பிறர்தேர்தல் இலது ஆக,
    இவைதேரும், இறைசேய் அரோ: (7)

## மாருதகீதம்.

(1) மாநிலம் எங்கும் வருந்தி அலைந்து உறும்
மாருதம் ஓதுவ கேளும்:— கண
மேனும் சுகமாய் இருக்க விரும்பினும்
இல்லை ஒழிவொரு நாளும்!—உங்கள்
வாழ்வாவதும் வளி மாதிரி
தாழாது சஞ்சல மேவுமே—(மாநிலம்)

(2) எங்கிருந் தூற்றனம், யாது குறித்துயாம்
இங்கு வந்தேம் எனத் தேரேம் ;—உயிர்
எங்கிருந் தூற்றது? இனி எங்குச் செல்லுமோ
என்பதை நீவிரும் தேரீர் :—எனின்,
இருவோருமே இருபேய்களில்
திரிவோர்களே,—தெரியீர்சுகம்—(மாநிலம்.)

(3) வையக வாழ்வொரு யாறு, முகிலென
மாறிவரும் பாவையாட்டம்:— இதை
ஐயகோ ! மக்கள் அறியாமலே, மயல்
ஆகி, உறுவர் திண்டாட்டம்,—எங்கள்
வழியாவுமே துயர்மேவுமே,
அழவோ, நகைசெயவோ, சொலும்—(மாநிலம்.)

(4) மாயை மகனே ! நீ ஓய்வொழி வின்றி
மகிழும் சுகங்களும் வம்பே!—உங்கள்
நேயமாம் காதல் நிலைத்திடுமே யெனில்,
நிச்சயமாய், இவை இன்பே ;— ஐயோ !
சுழல் சூறையே என மாறியே
விழையாவுமே ஒழிவாகுமே !—(மாநிலம்.)

(5) இன்னும் உறக்கமோ? உன்வர வெண்ணியே
ஏங்குவ யாவுமே தேராய் !—பழி
துன்னும் உலகு குருடர்கள் போலச்
சுழன்றே ஆடலுறல் பாராய் !—நீயும்
ரக்ஷித்திட வந்தோன் எனில்
பக்ஷத்தொடும் இன்றே எழு—(மாநிலம்.)

(6) ஓதிய போதுமே உற்றது; நீ வீணை
யாட்டொழிந் துண்மையை நாடி,—பிறர்
சாதுயர் கண்டெய்து நோதலும், காதலர்.
மீதுறு வாஞ்சையும் கூடி,—இனி
உலகும், ஒரு நீயும், மயல்
விலகும் வழி தனை மேவுக—(மாநிலம்.)

(7) கண்ணுக்கினிய நிழல்களோடாடி நீ
களித்தே கண்ணயர்வா யோ ?—இந்த
மண்ணுக்குள் ஏதும் அறிகிலை, மைந்தனே!
மையலை நீக்கி எழாயோ?—எனப்
பாழும் வளி பரிவாகவே
யாழின் மிசை இசையோதுவ—(மாநிலம்.)

## வேறு

கீதம், வாயு கூறி ஏக,
கேட்ட எங்கள் புங்கவன்,
மாதினுக்கு இஃது ஓதல் ஆகும்:
"வாள்தடம் கண் மங்கையே! (8)

"என்ன கூறும் மாருதங்கள்
என்று நீயும் ஓர்வையோ?
சொன்னது.ஓரின், நெஞ்சு அரங்கு
துன்றல் ஆகும் சோர்வு, ஐயோ! (9)

"விண் இலங்கு சோதி நாளும்
எத்தலங்கள் மின்னுமோ?
மண் இலங்கு உருத வேளை,
மற்றும் எங்கு மன்னுமோ? (10)

"இன்பமேவி, நம்மினே
சுகித்து, மாந்தர் ஏய்வரோ?
துன்பமேவி விம்முறச்
சகித்து இருந்து சாய்வரோ? (11)

"பாரில் ஏதும் ஓர்கிலாது,
பஞ்சரத்த — புள்ளினே,
நீர் இருக்கும் மீனின், ஈது
நெஞ்சு உருக்கும் — உள்ளினே. (12)

"துன்பு கூறும் மக்கள் கோளும்,
சோர்வும் நீக்க — ஒண்ணுமே,
அன்பின் ஆதரித்து, நாளும்,
ஆர்வம் மிக்கு — கண்ணியே. (13)

"இன்னவாறு கன்றுமே
எனது நெஞ்சு, — காதலீ!
துன்னு போதும் இன்துயில்
உனது தோளின் — மீதுமே! (14)

"ஆதலால் இவ் எல்லை மீறி
உள்ள காணும் — ஆதுரம்,
ஓதல் ஆகலாத வாறு
உள்ளம் நோக — மோதுமே. (15)

"என்னது, இந்த நீள காடு,
நன்று தேரில் — ஏறியே,
முன்னர் நாளை நாடல் கூடும்"
என்று மைந்தன் — கூறவே. (16)

வேறு

சிறையில் என வாழ்ந்து வரு சேய்தானும்
திரு நாட்டைக் காணும் செய்தி
இறைவனை கேட்டு, எங்கணுமே தீது அகற்றி
நன்று ஆக்க இயம்பினனே. (17)

தலைமகனைத் தலைநாளில் தழுவவரும்
தலைமகளின் தகவு ஈது என்ன,
குலமக்கள் குயிற்றிடவே குலவியதால்,
கோநகராம் கபில வாஸ்து. (18)

கூன், குருடு, முடம் ஆதி கோள் உற்றோர்,
கோமறுகு குறுகார் ஆக,
வீங்குகடி முரசு எங்கும் விளம்பினவே,
விளைவு உன்னும் வேந்தன் ஆணை. (19)

தன் நிகர் இல் சாரதி சந்தகன்கடவ,
　　தனித்தேரில் சாரிவந்தான்
மன்னன் மகன் சித்தார்த்தன், பொன்நகர் போல்
　　மாநகரைக் காணமாதோ. (20)

கொடிதோரணம் குலவு வீதிகளும்,
　　கோலம்உறு மூன்றில் யாவும்,
சடிதுஒடிக் கழியாது, மெல்லெனவே
　　தேர்ஊர்ந்து கண்டான் செல்வன். (21)

மங்கையர்கள் ஆலாத்தி கொண்டு எதிர,
　　மறைமுதியோர் ஆசிகூற,
செங்கையினில் மலர்தூவிச் சிறூர்கள்புடை
　　சேர, உறும் திகழ்வை நோக்கி; (22)

கண்டிடவு மேதன்னை, களிகூரும்
　　அன்னோர்கள் கனிவும்; மௌலி
கொண்ட அரசு ஏலாத குடிமக்கள்
　　கோதுஇல்லா வாழ்வும் கண்டு: (23)

"சுகம் ஆகும் இவ் உலகம்; இத்தகைய
　　அரசு இயலும் சுகமே ஆகும்;
மகிழ்வார்கள் காணவுமே எனை என்னில்,
　　மகிழ்வும் மிக எளிதாம், மன்னே. (24)

"இன்னவிதம் இவர்குலவ, இனிது ஆகும்
　　இவர்குடியின் இயலே என்னில்,
என்னவெலாம் எனக்குமிகை யாகும், எனது
　　உயர்வாழ்வில், எண்ணின் அம்மா! (25)

"இதுசாறும் யான்காணு இன் உலகை
　　இனும் காண்பேன்; இவ்ஊர்க்கு அப்பால்
அதுகாண நடாத்துக தேர்" என அருளி,
　　அகமகிழ்ந்தான் அரசன் செல்வன். (26)

அவ்வாறே 'சய! சய!' என்று ஆர்ப்பரித்து
　　நகர்மாந்தர் அருகுசார,
ஒவ்வாங்ல் தலைவாயில் பின்ஆச,
　　புறம்பேதேர் ஊரும் காலை. (27)

வேறு

"பழம் உதிர்முன் வெம்பி, வெயில், அணில், கிருமி,
　　தும்பி, இவை உளையவரு பண்புஇது கொலோ?

கிழம் உருவு கொண்டு, வலி கெடமிடியை ஒன்றி நனி
பிணிகளையும் உண்டகிளர்வோ?" (28)

என, எவரும் அஞ்ச, உடை எனமருவு கந்தல், பல
புழுதி, புழு, மிஞ்ச, எதிரே
கனவின்வரு பேயின், நனி மெலியவளை வேலின், ஒரு
கழிகிழவன் வந்தனன் அரோ. (29)

காழ்உற மொளிச்குமொளி அசைவும் அரிதுஆக, உறு
காடினிய என்புகளையே
தாழ்உற வளர்ந்து, தசை ஏதுமிலது ஆனதொலி,
சட்டைஎன மூடல் உறவே; (30)

அழுது அழுது, நீர்பெருகும் ஆழ்கிணறு அடைந்தஎன
விழி இணைகள் நீளவழிய,
பழுதுபட வேதலை நடுங்க, ஒரு பல்லும் இலது
ஆன வெறும் அலகுபதற, (31)

ஒருகை உறு கொம்புதளர்வு உற அடி பெயர்ந்து, உடலம்
ஒடியும் என நொந்தும், இருமல
வருசையின், விலாவின் உற மறுகைஅது வந்தும், அதன்
இடைகளில் மயங்கியும் அரோ: (32

"புண்ணியர்களே! ஒருகை அன்னமிடும்இன்று; என்உயிர்
பொன்றிவிடும் நாளையில்" என,
நண்ணி உற, மற்றவனை, "நம்குரிசில் உற்றது அறி
யாய் கொல்? இனி நாடுகுடிலே" (33)

என்று பலர் தள்ளல் உறவே, அது தடுத்து, அறவன்,
சாரதியை இன்னவினவும்:
"ஒன்று இது உரை, சந்தக, ஒரு மானுடம்எனத்தகைய
உருஇதுதான் மற்று எதுவுமோ? (34)

"இத்துணை வளர்ந்து, மெலிவு எய்தி, இடர் மூழ்குபவர்
இவ்வணம் உதித்திடுவரோ?
'செத்திடுவல் நாளை' எனலின்பொருள் தெளித்திடுக;
செப்புக இவன்திறன்" என. (35)

வேறு

சந்தகன் சொலும் "சயதர நாத, கேள்:
சனனம் அன்று, வயோதிகமே இது;

மூந்தை ஆண்டு இரு நாற்பதின் முன்னமே,
கண்டு மாதர் களிக்கும் அழகனாய், (36)

"இவனுமே இங்கு உலாவினன்; காலமாம்
கள்வன், இன் நலம் யாவுமே சொள்ளை கொண்டு,
அவம் இழைத்திட, நெய்இல் விளக்கு என,
அணையு முன் கருண்டு உற்றிடும் பண்பு இதே. (37)

"இன்னது ஆகும் வயோதிகம்" என்னலும்,
"என்னின் யார்க்கும் உறுமோ, அருமையோ,
சொன்னது ஆகும் வயோதிக இன்னல்கள்?
சொல்லிடு" என்று வினவலும், சாரதி, (38)

"இங்கு உளார்கள் எவருமே, இத்திறன்
எய்வரே கிழம் மேவிடின்" என்றனன்.
புங்கவன் சொலும், "யானும், யசோதரை,
கங்கை, போலிய பொன் அனை யார்களும். (39)

"எண்பது ஆண்டு இவண் வாழ்ந்திடின், எய்துமோ
இக்கிழம்?" என, சாரதி 'ஆம்' என,
"கண்பதைக்கவே, காண நினைந்திலா
ஒன்று கண்டனன்; காட்சியும் போதுமே! (40)

"தேர்திருப்புக," என்று திருமியே,
சென்று அடைந்தனன், தன்மனை செவ்வனே,
வேர் கொதித்திட, வெய்யநீர் உற்றது ஓர்
மென்மருந்துச் செடியின் வெதும்பியே. (41)

அருந்திலன் ஏதும்! ஆடல்கள் பாடல்கள்
ஆசை இல்லன், அருந்துயர் ஆழ்ந்தனன்.
வருந்தி வாடி யசோதரை: "காதல் என்
மீதும் இல்லைகொல்?" என்று மயங்கிட, (42)

உத்தமன் சொலும்: "என் உயிர்க் காதலீ!
நித்தியம் என உன்னி உகந்திடும்,
சித்தம் ஒத்தநம் காதலும், இன்பமும்,
தேய்வ ஆகி, முடிவு உற ஓயுமே. (43)

"நாம் இருவருமே, வயது ஏறிட,
நலம் அழிந்து, தளர்ந்து, நடைப் பிணம்
ஆம் இருவர்கள் என்னவே ஆகுவோம்;
ஐயகோ! யாம், இராப்பக லாகவே, (44)

“இடைவிடாது, நம் ஈர் உயிர்ப்பு ஓர் உயிர்ப்பு
என்னமே, நமது ஆவியை, காதலை,
தடைகளாய் இதழ் பூட்டியே காக்கினும்,
தந்திரத்தில் நுழைதர வல்லன் ஆம் (45)

“காலைக் கள்வன், என் காதலை, உன் பெரும்
கட்டழகைக் கவர்ந்து கழியுமே,
மாலை வானத்து எழிலினை, மைஇரா
வாங்கலில், இக்கணத்து எனல் இன்றியே; (46)

“ஈது அறிந்தனன் இன்று; என் இதயமும்,
இன்ன பீதியே மீது உற, ஏங்குமால்;
ஏது செய்யின் வயோதிக வாதனை
மோதிடாது உயர் காதலை என்னவே, (47)

“எண்ணி எண்ணி மயங்குவென்” என்று, இரா
ஏதுமே துயிலாது இருந்து ஏங்கினான்,
அண்ணல்; அன்னவன் ஐயனும் அன்று இரா
ஆன ஏழு கனவுகள் கூறுவாம். (48)

வேறு.

புரந்தர இறைக்கு உரிய பொற்பு உறு பதாகை,
பொங்கு புயல் மோதி, இழி பழுதியினில் வீழ,
கரந்த உரு உற்றவர் வந்து அதை எடுத்தே,
கடி நகரம் ஓங்கு குண வாயிலை விரைந்தார். (49)

தன் தநயன் முந்தியதன் மீது உற விளங்க,
தந்தம் உயர் வெள்ளியன, ஐந்திணை கொள் யானை,
தென் திசையை நோக்கி, உறு மண்ணும் அதிர் கொள்ள,
சென்றன விரைந்து, அரசன் நொந்துமனம் விள்ள. (50)

வெண்புகை உயிர்த்து, மிளிர் தீயின் நுரை கக்கும்
பண்பு, கதி, மேவுபரி ஈரிணை விளங்கும்
கண்கதுவொணாது ஒளிரும் ஓர் இரதமீதே,
தன் கவல் கழிக்க வரும் காதலனும் ஏகும். (51)

உருக்கி ஒளிர் பொன்மணி குயிற்றிய குடம், கால்,
ஓது அரிய நீதிகள் வரைந்து இலகு கட்டின்
உருக்கொளும் ஓர் ஆழி, இனிது ஆக வரு நாதம்
ஓங்க, எரிகால, ஒழிவு இன்றி, உருள்போகும். (

அங்கசர், இமாலயம், இவற்றின் இடை யாக,
அண்ணல், கரம்உற்றது ஓர் கரும்பொன் வருகோலால்,
பன்னவும் எமால் அரிய பேரிகை புடைக்க,
பல்உருமில் விம்மும்ஒலி, மண்ணும் உயர்விண்ணும். (53)

மேகமுடி சூடும்ஒரு கோபுரம் அஃது ஏறி,
மின்னுபல பொன்மணிகள் தன் இரு கரத்தால்,
வேகம்உறவே தநயன் மிக்கவை துளிக்க
மேதினியர்,மேவி, விழைவு உற்று அவை எடுத்தார். (54)

முடிவினில் உறும் கனவு: ஓங்கும் ஒலி வீங்க,
மூஇருவர் பற்கடி கடித்து, முகம் எற்றி,
படியில் உறும் நற்பொருள் பகற்பறி கொடுத்தோர்
என்ன, மன மாழ்கி, அடி மெல்லென நடந்தார். (55)

இன்னவிதம் ஆக, எழுகனவும் எதிர் ஆக,
இன்னல்வளர் மன்னன் அவை முன்னர் அவை சொல்லி,
"என்னஇடர் கூறும் இவை?" என்ன,விளைவு ஓராது
இருந்தனர்கள் மந்திரிகள், ஏந்தல் சினம் மீற. (56)

அப்பொழுது, ஓர் மாமுனிவன், அச்சபை அடைந்தான்:
ஆளுபவன், உற்ற கனவு ஏழினையும் ஓத,
செப்பிடுவன் இன்னபதில்: "செங்நெறிகொள் மன்ன!
சேரும் உனை ஒப்பு உயர்வு இலாத ஒருபேறே. (57)

"கெட்ட குறி அல்ல, நலம்உற்ற குறியாமே;
கேட்கபொருள்: இன்னும் எழுநாளில் இதுசாரும்:
பட்டகொடி, பண்டைய மதங்கள்படல் கூறும்;
பண்ணவரும் மக்களில் அழிந்து படுவோரே. (58)

"உயர்பரிகள் பத்தும், உயர் ஞானம் உற ஒண்ணும்
உண்மை, முத லாயதச நன்மைகளே யாகும்;
பயம்மருவி டாது, மயல் போக்கு குணமாமே,
பன்னுரதம் உற்ற பரி மின்னும் ஒரு நாலே. (59)

"உன்மகன் உருட்டவரு தன்மநெறி ஆழி,
ஒண்பொன்மணி உற்று ஒளிரும் இன்ப ஒலி ஆழி;
நன்மகித லத்தொடுவிண் நன்று அதிர் செய்பேரி,
நந்தனன் அருள்கடல் வழங்கும் உபதேசம். (60)

"தூபி, அவன் இன் அருளின் உன்னதம் விளக்கும்;
தூயமணி யாவும் அதின் வாயும் உயர் பேறும்;

பாபியரில், மூஇருவர் போயினர்கள், நின்சேய்
பாழ்பட வெருட்டு அறு மதத்தினர்கள் தாமே." (61)

என்ன இவை கூறியபின் அந்த முனி ஏக,
இன்னல் உயர் மன்னவன் எழில் பரிசு அளிப்பான்,
அன்னவனை நாட, அவன் துன்னிய தளிச்குள்,
ஆந்தையினை அன்றி, எவர் மாந்தரும் இலாரே. (62)

அதிசய மொடும் துயரம் மேவும் உயர் மன்னன்,
அறுபொரு நீரை இரு கையின் அணை கோலும்
மதிசிறிய மக்கள்களின், மைந்தனை மடக்ச,
மங்கையர்கள் காவலர் மடங்கின் இணை வைத்தான். (63)

வேறு.

விதினைய யாரே விலக்க வலார்?
வீழ்ந்த குழியுள் யானை என
மதியை மயக்கு மடமாதர்
மயல்உள் மைநதன் வதியுறும் நாள், (64)

திருமி ஒருபோது உலகர் தின
வாழ்வின் செவ்வி தெரியும் அவாப்
பொருமு மனத்தன் ஆகி, அவன்,
புரந்தோற்கு ஈது புகன்றனனே. (65)

"மன்னு! நமது நகர்ப்பரிசை
மகிழ்ந்து காண, முன் நாளை
உன் ஆணையின்யான் சென்றுழி, அங்கு
இன்னு ஒன்றும் இலவாக, (66)

"என்மீது அன்பின் இயைத்தனை நீ;
எனினும், இந்த வாழ்க்கை இயல்,
புல்மீது ஒளிரும் பனித்துளிபோல்,
பொலிந்து மறையும் புன்மையினை (67)

"ஒருவாறு உணர்ந்தேன் அன்று; உனக்கும்
முடிக்கும் அடுத்த உரிமையினேன்,
மருவார் கூந்தல் மடமாதர்
மயலை அன்றி, வளநாட்டில் (68)

"மன்னர் ஆதிமன்னர் அலா
மற்றமாந்தர் வாழ்க்கையில், மற்று

"உள்ள உளவாறு, ஒளிப்பின்றி,
உணர்தல் உரிமைக்கடனன்றோ? (69)

"அதனால், ஐய! யாரும் எனை
அறியாவாறு, சந்தகனோடு
இதமாய் நாளைச் சென்று, நகர்
இயலைக் காண இசைந்து அருள்வாய். (70)

"வளைகாய்ப் புளியைருசித்து, அமுதை
அருந்துவார்போல், மனம் நிறைந்தே,
உளவாறு உலகை உணர்ந்த பினர்,
உவக்கும் தலம் ஈது உற்றிடுவேன். (71)

அன்றேல், மனத்தை அவலம் உற
வாட்டும் கவலை அகலாதேல்,
நன்றுநிற்கும் அறியாமை
தொலைந்து, உண்மையினைத் தெளிவேனால்." (72)

இவ்வாறு இளவல் இசைத்திடலும்,
இறைவன், தன்னுள், "யார் அறிவார்?
கவ்வாநின்ற கண்உறையைக்
கழற்ற, அந்த வல்லூறு (73)

"எதுகாணினுமே திகில் உறலும்,
இயல்பாய்ச் சிறிது திரியின், இரை
கதுவற்கு ஆகும் கதி அமைதி, கதுவி
உறலும் கண்டு உள மால் (74)

"அவ்வாறு, இவனும் உள உளவாறு
அறிந்த பின்னர், அமைதி உறல்
ஒவ்வாதோ?" என்று ஊன்றி நெடிது
உன்னி, 'ஆம்' என்று இசைந்தானே. (75)

The Swadesamitran Power Press, Madras.

PRINTED AT
THE SWADESAMITRAN
POWER PRESS.
MADRAS